# சரிநிகர்

இதழ் 102 | ஜூலை25 - ஆகஸ்ட், 8 1996 | விலை 7.00

## போரும் தீர்வும்!

போர் முடிந்த பின்பு சொன்னார்கள்:
"போர்கள் எதையும் தீர்ப்பதில்லை
எல்லாவற்றையும் பேசியே தீர்க்கலாம்"

ஒரு கணம்
சரி போல இருந்தது.
மறு கணம்
பிழை போல இருந்தது

குண்டு விழுந்த மருத்தவமனையையும்
எரிந்து போன நூலகத்தையும்
தரை மட்டமான கிராமங்களையும்
உழவு மறந்த வயல்களையும்
காணாமற் போன மனிதர்களையும்
கேட்டேன்

பதில் இல்லை

ஒரு பையனைச் சுமந்து சென்ற துப்பாக்கி
சொன்னது
"பேசி எதுவும் தீராததால்
எல்லாவற்றையும் போர்களே தீர்க்கின்றன"

அது
சரி போலவும் பிழை போலவும் இருந்தது

-சி.சிவசேகரம்
நன்றி: 'போரின் முகங்கள்'



# போதாத் தீர்வும் தீராப் போரும்.



## தமிழ்த் தேசியவாதம்!

- ஓர் ஆய்வு



## முல்லை: தவறாத குறி?

## யாழ் நிலமை ஆரோக்கியமானதாக இல்லை!

யாழ்ப்பாணத்தில் உள்ள நிலைமை எந்த விதத்திலும் ஆரோக்கியமானதாக இல்லை என்பது அங்கு பணியாற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளின் அபிப்பிராயமாக உள்ளது. இடைக்கிடையே சிறு அளவில் நடாத்தப்படும் தாக்குதல்களின் பின்பு புலிகளிடம் இருந்து பெருந்தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக வெளிவரும் செய்திகளில் எது வித உண்மைகளும் இல்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர் யாழ்ப்பாணத்திற்கு இப்போது புலிகள் 'ட்றோஜன்' குதிரை ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும், அங்கு வந்துள்ள சாதாரண மக்கள் மத்தியில் புலிகளும் பெருந்தொகையில் ஊடுருவி உள்ளதாகவும், அவர்களுக்குத் தேவையான ஆயுத உபகரணங்கள் ஏற்கெனவே அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது சந்தேகத்திற்கு இடமில்லாத ஒன்று எனவும், இந்த நிலையில் மக்கள் மத்தியில் மறைந்திருந்து புலிகள் தாக்குதல் நடாத்துவது என்பது தவிர்க்க முடியாத ஒன்றே என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

எதுவித தேவையும் இன்றி சிறு சிறு இடங்களை திறந்து வைப்பதற்காக அங்கு செல்லும் அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியிருப்பது இராணுவத்திற்கு பெரும் சுமையாக உள்ளது. பிரிகேடியர் ஹமன் கொடவின் இறப்பு இராணுவத்தினர் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தி உள்ளது. எவ்வித அர்த்தமும் இன்றி அடிக்கடி அரசியல் வாதிகள் அங்கு செல்வதால் இராணுவ அதிகாரிகளின் உயிர்கள் பலியிட நேர்வது அர்த்தமற்ற ஒன்றாகும் என்றும் அவர்கள் கருதுகின்றார்கள்.

இந்நிலைமை இவ்வாறே தொடருமாயின் யாழ்ப்பாணத்தின் நிலை விரைவிலேயே தலைகீழாக மாறிவிடும் என அங்கு உள்ள தமிழ் புத்திஜீவிகள் கருதுகின்றனர். புலிகள் மக்கள் மத்தியில் இருந்து நடாத்தும் தாக்குதல்களுக்கு கொடுக்கப்படும் பதில் தாக்குதல்களுக்கு அங்குள்ள அப்பாவிப் பொதுமக்களும் முகம் கொடுக்கவேண்டியுள்ளது பற்றி அவர்கள் கவலை தெரிவித்தார்கள்.

பிரிகேடியர் ஹமன் கொட கொல்லப்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட பதில் தாக்குதலின் போது பல பொது மக்கள் கொல்லப்பட்டும் மேலும் பலர் காயமடைந்தும் உள்ளனர். மக்கள் மத்தியில் இருந்து செய்யப்படும் இவ்வாறான தாக்குதல்களின் போது நடாத்தப்படும் பதில் தாக்குதல்கள் திரும்பவும் புலிகளை நோக்கி மக்கள் செல்வதை தவிர்க்க முடியாததாக்கி விடும் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

-ராவய-19960714

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய சேவை!

இராணுவத்திற்கு நேரடியாக இளைஞர் யுவதிகளை இணைத்துக் கொள்வதில் உள்ள சிரமங்கள் காரணமாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் அமைப்பின் ஊடாக அவர்களை சேர்த்துக் கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பாக அரச உயர் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, தேசிய கடமை என்ற பேரிலான விசேஷ வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் நாடு பூராவும் இளைஞர்களையும் யுவதிகளையும் இளைஞர் சேவை மன்ற அமைப்புக் கூடாக திரட்ட அரசு தயாராகிறது.

-யுக்திய- 19960714

## தப்பியோடியோர் 20,000!

இதுவரை 20,000 இராணுவத்தினர் சேவையை விட்டு தப்பியோடியுள்ளார்கள் என்று இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்தார். இதில் 3,000 பேரளவில் திரும்பவும் வந்து இணைந்துள்ளனர் என்று தெரிவித்த அவர் இராணுவத்தைவிட்டு தப்பி ஓடியோர் மீண்டும் இணைவதற்காக இராணுவத்தளபதியினால் வழங்கப்பட்டுள்ள காலக்கெடு இம் மாதம் 31ம் திகதியுடன் முடிவுறுவதாகவும் அத்திகதி திரும்பவும் நீடிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார். இக்காலப்பகுதி முடிவடைந்த பின் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியோர் இராணுவப்பொலிசினால் கைது செய்யப்படுவர் எனவும் முனசிங்க குறிப்பிட்டார்.

இக்காலப்பகுதியினுள் இராணுவத்தில் மீண்டும் இணைபவர்கள் எதுவித தண்டனைக்கும் உள்ளாக்கப்பட மாட்டார்கள் எனவும் அவர்கள் முன்பிருந்த படைப்பிரிவுகளிலேயே அமர்த்தப்படவும் அரச நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## முல்லைத் தாக்குதல் முன்னரே தெரிந்த செய்தி!

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீது கடும் தாக்குதல் ஒன்று நடாத்தப்படும் என மூன்று மாதங்களுக்கு முன்னரே தெரிந்திருந்ததாகவும் இது தொடர்பான தகவல்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புலிகள் முல்லைத்தீவு கடற்கரையோரத்திற்கு கப்பல் ஒன்றில் ஆயுத உபகரணங்களை கொண்டு வந்து முல்லைத்தீவு காட்டில் உள்ள அவர்களது 'வண்போ' முகாமைப் பலப்படுத்தி வருவதாகவும் கொழும்புக்கு அனுப்பிய தகவல்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்விராணுவ முகாமிற்கு 11கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புலிப்பயங்கரவாதிகளின் இப்பலம் வாய்ந்த முகாம் போர்ப்பயிற்சி மத்திய நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகவல் கொழும்புக்கு தெரியப்படுத்தப்பட்ட பின் கொழும்பில் நடைபெற்ற உத்தியோகப் பற்றற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது முல்லைத்தீவு இராணுவ முகாமை தற்காலிகமாக அகற்றுவது பற்றியும் இராணுவத்தினரின் கவனம் திரும்பியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

புலிகளுக்கு யாழ்ப்பாணத்தில் கட்டுப்பாடு இல்லாது போன பின்பு கிளிநொச்சிப் பிரதேசத்தை தமது மத்திய நிலையமாக ஆக்கவும் முல்லைத்தீவில் அமைந்துள்ள புலிகளின் முகாமை பிரதான ஆயுதக் களஞ்சியமாக ஆக்கிக் கொள்ளவும் அவர்கள் நடவடிக்கை எடுத்து வந்துள்ளனர்.

முல்லைத்தீவு முகாம் தாக்குதல் அவர்களின் இம்முகாமில் ஆரம்பப் பயிற்சி பெற்ற பின்பே இடம் பெற்றுள்ளது எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார். இத்தாக்குதல் 1993ம் ஆண்டு நடந்த பூநகரி முகாம் மீதான தாக்குதலுடன் ஒப்பிடக் கூடிய ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டார். பூநகரி முகாம் தாக்குதலின் போது கொழும்பில் இருந்தும் அண்டிய முகாம்களில் இருந்தும் கிடைத்த ஒத்துழைப்பை விட இம்முறை வியக்கத்தக்களவு ஒத்துழைப்பு வழங்கப்பட்டதெனவும் அவர் தெரிவித்தார்.

-திவயின-19960720

## பிரிகேடியர் முல்லையில் இல்லை!

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் புலிகளின் தற்போதைய தளம் அமைந்துள்ள வன்னிப்பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கையை தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றென இராணுவ வட்டாரங்கள் தெரித்துள்ளன. வன்னிப்பிரதேசத்தைச் சுற்றியுள்ள பிரதான பாதுகாப்பு படைமுகாம்கள் நான்கில் இருந்து எதிர்கால இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என கருதும் புலிகள் இயக்கம் அதில் ஒரு முகாமான முல்லைத்தீவு முகாமை அழித்து வன்னிப்பிரதேச சுற்றிவளைப்பை தவிர்த்து கிழக்குக் கரையோரத்தை திறந்து வைத்திருக்க முயன்றுள்ளது.

யாழ்குடாநாட்டை கைப்பற்றிய இராணுவம் விரைவிலேயே வன்னிக்கும் வரும் என புலிகள் இயக்கம் தமது உத்தியோக பூர்வ பத்திரிகையான 'விடுதலைப்புலி'களில் அண்மையில் வன்னிமக்களுக்கு எச்சரிக்கை செய்திருந்தனர்.

"1035 சதுர கிலோ மீற்றர் கொண்ட குடாநாட்டின் போராட்டக் கேந்திரம் 8835 சதுரக் கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட வன்னிக்கு மாற்றப்பட்டுள்ளது. எவ்வளவு முயற்சி செய்தாலும் படையினரால் வன்னியைக் கைப்பற்ற முடியாது. சிலவேளைகளில் வன்னியின் சிறு பிரதேசம் ஒன்று இராணுவத்தின் பிடிக்குட்படலாம். ஆயினும் வன்னியைப் பாதுகாப்பது. எம்மனைவரதும் கட்டாய பொறுப்பாகும்" என அச்செய்தி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு இராணுவமுகாமின் ஆயுதக்களஞ்சியத்தை பாதுகாத்து அம் முகாமை காப்பாற்ற துருப்பினர் பலமணிநேரமாக சண்டையிட்டதாக தெரியவருகிறது. கடந்த வியாழன் அன்று அதிகாலை 1.30க்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தாக்குதல் நடத்தப்பட்ட நேரத்தில் முல்லைத்தீவு முகாமுக்கு பொறுப்பான பிரிகேடியர் ஆணைக்குழுவொன்றுக்கு சாட்சியமளிக்க முகமாக கொழும்புக்கு வந்திருந்தார். இரண்டாவது பொறுப்பதிகாரியும் விடுமுறையில் சென்றிருந்தார். அதன் பின்பு இராணுவ முகாமிற்குப் பொறுப்பான மூன்றாவது அதிகாரி இத்தாக்குதல் நடத்தப்படுவதற்கு முதல் நாள் பொதுசன தொடர்பியலாளர் ஒருவருடன் தொலைபேசியில் பேசும் போது அன்று நடைபெற்ற சிறு சம்பவங்கள் பற்றி சிறிது நேரம் பேசியுள்ளதாகத் தெரியவருகிறது. எவ்வாறாயினும் இம் மூன்றாம் அதிகாரி சகல பொறுப்புக்களையும் பொறுப்பேற்று தமது காட்டு முகாமை காப்பாற்றவும் அங்குள்ள ஆயுதக்களஞ்சியத்தைக் காப்பாற்றவும் கடுமையாக சண்டையிட்டுள்ளதாக தெரியவருகிறது.

-லக்பிம-19960721

## கட்டாய இராணுவ சேவை?

தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கப் பயங்கரவாதத்திற்கு எதிரான இராணுவத்தாக்குதல்கள் தொடரப்பட வேண்டும். இராணுவத்தில் இணைந்து கொள்பவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து வந்தால் ஏனைய பல நாடுகளைப் போல் இலங்கையிலும் இராணுவ சேவையை கட்டாய சேவையாக்க அரசாங்கம் நிர்பந்திக்கப் படும் என பிரதி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது தெரிவித்துள்ளார். அண்மையில் இலங்கை இராணுவத்திற்கு 10,000 பேரை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆனால் 1800 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இராணுவத்தில் சேருவதில் தயக்க நிலை ஒன்று இருப்பதையே இது காட்டுகின்றது. வடபகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப்பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை பலப்படுத்தவும் அப்பகுதியில் இருந்து பயங்கரவாதத்தை அழித்தொழிக்கவும் இராணுவத்திற்கு ஆகக் குறைந்தது ஒரு இலட்சம் இராணுவத்தினராவது தேவைப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தமது உரையின் போது எமது சொந்தப் பிராந்தியத்தில் உள்ள சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா உட்பட பல நாடுகள் இராணுவ சேவையை கட்டாயசேவை ஆக்கியுள்ளதையும் சுட்டிக்காட்டினார். யுத்தம் வெல்லப்பட வேண்டுமாயின் மக்கள் இராணுவத்தில் சேருவதற்கு தமது ஆதரவைத் தர வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

-திஜலன்ட்-19960723

## இப்படி ஒரு இழுபறி!

ஜனாதிபதி வெளிநாட்டில் இருக்கும் காலத்தினுள் பதில் பாதுகாப்பு அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்யுமாறு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, அனுருத்த ரத்வத்தையிடம் கோரியிருந்தார். ஆயினும் பிரதமரைச் சந்தித்து சத்தியப்பிரமாணம் செய்வதற்குப் பதிலாக அனுருத்த தான் அமைச்சரவைக் குழு கூடும் போது பதவிப்பிரமாணம் செய்வதாக தெரிவித்ததையடுத்து அந்நியமனம் பிரதமரால் நிராகரிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

-ராவய-19960721

கூடிப்பிரிகிறதென வாழ்வெனப்போனதெனதுலகு
ஈரம் கசிந்தது; தாயினதும், அவளினதும்
முத்தமெனவும், அழுகையெனவும்: இருந்தும்;
நான் போவேன்
பச்சைமரங்களடர்ந்த கரும்பாறையென,
கை மட்டும் காட்டிச் செல்கிற ஓர்
உயிர்த்த ஜடமென..

குளிர்ந்த பஸ்ஸில், ஜன்னலோடான
மூலையிருக்கையில் நான்; வெளியே
பச்சை விரிசலாய்ப் பின்னோடும் காடு,
சூரியன், குளிக்கும் பெண்கள்,
பட்ட மரங்களிலும் கூடும் பறவைகள்.;
இன்ன பிறவும்...
எனக்க வெளியேயான அனைத்தும்
என்னை விட, என் வாழ்வை விட
அழகானவை.

"இன்று வடக்கேகி மீண்டுமொரு நாள்
வெற்றியுடன் திரும்பப் போகிற வீரர்களே"
என்ற பாடல் வரிகளில் நான் லயிக்கவில்லை
காரணமாயிரங்களால்!

ஏறியுமிறங்கியும் காட்டியும் கதைத்தும்
சோதனை தொடர்கிறது
கவனிக்க: வீதிகளில் மட்டுமல்ல!

அலையாய்க் கிளர்ந்து கரைதொட்டு
பின்னும் பின்னும் கிளர்ந்தும் தொட்டும்
கடலெனப் போனதென் வாழ்வு குமுறிக்கொண்டு..
எனினும்,
வாழ்வுபற்றியுமொரு
நம்பிக்கையிருக்கிறதொட்டிக்கொண்டு;
இந்த ஓடும் பஸ்ஸீக்குள்ளிருக்கிற
என்னுள்.

07051996

எம்கேஎம். ஷகீப்

## அதாவுடவுக்கு கல்தா!

கடந்த யூலை 21ம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலசட்ட நீடிப்பு பிரேரணையின் போது அதற்கு ஆதரவாக வாக்களித்த அத்தாவுட செனவிரத்ன லங்கா சமசமாஜக் கட்சியில் அரசியற் குழுவிலிருந்தும், பொ.ஐ.மு.வின் நிறைவேற்றுக்குழுவுக்கான பிரதிநிதித்துவத்திலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார் என ல.ச.ச.கவின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் அறிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் முக்கிய பதவி வகித்துவரும் ல.ச.ச.கட்சி, அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து அவசரகால சட்டத்துக்கு ஆதரவாகவே வாக்களித்து வந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. அவசரகாலச்சட்டத்துக்கு எதிராகவும் அதனை ஆதரிப்பவர்களுக்கு எதிராகவும் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள கொதிப்பு நிலை காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் 8ம் திகதி நாடு முழுவதுமான அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தும் யோசனை நிறைவேற்றப்பட்ட போது ல.ச.ச.கட்சி தனது முடிவை மாற்றிக்கொண்டது.

ஆனாலும் அம்முடிவு அவசரகால சட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதாக இல்லாமல் வாக்கைப் பாவிக்காமல் விடுவது என்பதாகவே இருந்தது. அதாவது மௌனமாக இருப்பதே பாராளுமன்றத்தில் அவசரகால சட்டத்துக்கு எதிராக அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிப் பதற்கு ஒப்பான செயலாகும் எனக் கருதியதனாலேயே இந்த மௌனம்.

கடந்த 11ம் திகதியன்று நடந்த வாக்களிப்பின் போது 120 வாக்குகள் ஆதரவாகவும் 75 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டிருந்தன. 45 மேலதிக வாக்குகளால் அது நிறைவேற்றப் பட்டிருந்தது. புளொட் உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது கலந்து கொள்ளவில்லை, ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் அவசரகால சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. ஐ.தே.க, ஜே.வி.பி. ஆகியன எதிராக வாக்களித்தன.

ல.ச.ச.கவின் உறுப்பினர்களான பேர்னாட் டி சொய்ஸா (விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர்), அசோக வீரசிங்க, பட்டி வீரக்கோன், வாசுதேவ நாணயக்கார (ஐ.தே.க காலத்தில் அவசரகால சட்டத்திற்கு எதிராக எப்போதும் குரல்கொடுப்பவராகவும், வாக்களிப்பவராகவும் வாசு இருந்தது வாசகர்கள் அறிந்ததே.) ஆகியோர் அவ்விவாதத்தில் சமுகமளிக்கவில்லை.

ஆனால் அத்தாவுட அப்பிரேரணைக்கு ஆதரவளித்துவிட்டார்.

ஆக, அத்தாவுட மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது கட்சி.

## பிரபாகரன் காயமானார்?

கடந்த யூலை 18ம் திகதியன்று முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் படுகாயங்களுக்கு உள்ளானார் என்ற செய்தி 20ம் திகதியன்று வெளியான சகல சிங்கள தினசரியிலும் முன்பக்க செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

தாக்குதலில் பிரபாகரன் ஈடுபட்டதாகவும் ஆணைகளைப் பிறப்பித்ததாகவும் இராணுவத்தின் எதிர்த்தாக்குதலுக்கு பிரபாகரன் உள்ளானதாகவும் நெற்றியில் ஏற்பட்ட படுகாயம் காரணமாக இரத்தம் வடிய ஓடினார் என்றும் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

இச்செய்தியினை அரச பாதுகாப்பு அதிகாரிகளே தம்மிடம் தெரிவித்ததாகவும் அப்பத்திரிகைகளில் கூறப்பட்டிருந்தன. அரச பாதுகாப்பு அதிகாரிகளின் அப்பிரச்சாரம் ஒருபுறமிருக்க, பாதுகாப்பு அமைச்சின் செய்திகள் தவிர்ந்த ஏனைய செய்திகளை தடை செய்யும் அரச தணிக்கையையும் தாண்டி வந்த இச்செய்திகளைப் பார்த்தால் அரசினாலேயே திட்டமிட்டு பிரபாகரன் பற்றிய இச்செய்தி அவிழ்த்துவிடப்பட்டிருப்பது புலனாகிறது.

முல்லைத்தீவில் அத்தனை இராணுவத்தினர் பலியாகிக் கொண்டிருக்கிற வேளையில் 'பிரபாகரனுக்கு படுகாயம்" எனும் செய்தியை அரசு வெளியிட்டதானது இதனைத் தமது இழப்பை மறைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகவே கொள்ள முடிகிறது.

'ஆயிரக்கணக்கில் படையினர் செத்தாலும் பிரபாகரனுக்கு காயமே" என்ற செய்தியை தென்னிலங்கை சிங்கள தேசத்துக்கு தெரிவிப்பதன் மூலம் தப்பிக்க முயல்கிறது. இதற்கு சிங்கள தேசிய நாளிதழ்களும் முன்னின்று ஒத்துழைப்பு வழங்குவது இயல்பே.

இது இப்படியிருக்க, ஸ்ரீ லங்கா சோதிட விஞ்ஞானிகள் சங்கத்தின் முகாமைத்துவ இயக்குனர் லொ.வ.நந்தசேன கடந்த வருட சோதிட கணிப்பில் 1995 இறுதிக்குள் அப்படியில்லாவிட்டால் 1996 யூலை 7ம் திகதிக்குள் பிரபாகரன் அகால மரணமாவார் என்று கூறியிருந்ததை சரிநிகர் அப்போது பிரசுரித்திருந்தது. இந்த மாதத்துடன் சோதிடர் வழங்கிய காலக்கெடு முடிந்துவிட்டது. அது தானோ என்னவோ இந்த நேரத்தில் 'படுகாய பிரச்சாரங்களும்" மும்முரமடைந்துள்ளது.

கடந்த பல தடவைகள் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டார் என்றும் உயிருடன் இல்லையென்றும் பின்னர் அவர் இருக்கிறார் என்றவாறான செய்திகள் தென்னிலங்கையில் மகிழ்ச்சியையும் சோகத்தையும் மாறிமாறி ஏற்படுத்தியிருந்தது அறிந்ததே.

பிரபாகரனை தீர்த்துக்கட்டிவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடுமோ?

## ஒற்றையாட்சியும் கணேசலிங்கமும்!

"நாட்டின் ஒற்றையாட்சித் தன்மை நீக்கப்படாமல் அதிகாரப் பரவலாக்கத் தீர்வு சாத்தியமில்லை" என்று யூலை 7ம் திகதியன்று ரமடா ஹோட்டலில் நடந்த கூட்டமொன்றில் ஐ.தே.கவின் தனாதிகாரியும் கொழும்பு மாநகர சபை மேயருமான கணேசலிங்கம் கூறிய கூற்று தற்போது ஐ.தே.கவுக்குள் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருக்கிறது.

கணேசலிங்கம் அவர்கள் இக்கருத்தை முன்வைப்பதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன்னர் தான் (ஐ.தே.க., இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நீண்ட நாட்களுக்குப் பின் கூறியவை) 'ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு" என்பதை முன்னாள் அரசியலமைப்பு விவகார அமைச்சர் சொக்ஸி ஐ.தே.கவின் சார்பில் கூறியிருந்தார். அக்கருத்தை ரணில் விக்கிரமசிங்கவும் ஐ.தே.கவின் நிலைப்பாடாக அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே மேயரின் கருத்து ஐ.தே.கவின் கொள்கைக்கு முரணானது என ஐ.தே.கவின் முன்னாள் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.சீ.எஸ். ஹமீட் விசனம் தெரிவித்திருந்தார்.

ஏ.சீ.எஸ்.ஹமீட் அவர்கள் கடந்த 9ம் திகதி ராஜகிரியவில் ஐ.தே.கவின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போது கணேசலிங்கத்தின் கருத்துத் தொடர்பாக தனது எதிர்ப்பைத் தெரிவித்ததுடன் "வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிரான நிலைப்பாட்டிலும் எந்த மாற்றமுமில்லை" என்பதையும் வலியுறுத்தியிருந்தார்.

இதற்கிடையில் மேயர் பதவியேற்றதை முன்னிட்ட பாராட்டு விழாவொன்றை யூலை 13ம் திகதி அகில இலங்கை கண்ணதாசன் மன்றம் நடத்தியபோது அதில் உரையாற்றிய கணேசலிங்கம் 'தமிழ் மக்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைக்கு தடையாக இருக்கின்ற ஒற்றையாட்சி முறை நீக்கப்பட வேண்டுமென்றும் தற்போதைய தீர்வு யோசனைகளுக்கு ஐ.தே.க ஆதரவளிக்க முன்வரவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க 'கணேசலிங்கத்தின் இக்கருத்து குறித்து விசாரணை செய்வோம்" என பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கணேசலிங்கத்தின் கருத்தை ஆதரித்து மட்டக்களப்பு நகரசபை எதிர்க்கட்சி தலைவர் (ஐ.தே.கவே எதிர்க்கட்சியாக இருக்கிறது) எம்.பத்மநாதனும் கருத்து தெரிவித்திருக்கிறார்.

ஐ.தே.கவிலும் இக்கருத்துடைய சிறுபான்மையோரான சிறுபான்மையினரின் கருத்து ஐ.தே.கவைப் பொறுத்தவரை பெரும் தலையிடி! கணேசலிங்கம் வெளியே தள்ளப்படுவாரா? அல்லது அவரது கருத்தை ஐ.தே.க உள்வாங்குமா?

## நூலகத்தைத் திறவுங்கள்!

பிரதேச தமிழ் இலக்கிய விழா ஜூலை17திங்கட்கிழமை காலை திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகி இரவுவரை பல கேளிக்கைகளுடன் நடந்தேறியது.

பிரதேசத்தில் உள்ள இலக்கியம் சார்ந்தவர்களைக் கண்டுகொள்ளாமலேயே, மாகாண சபை ஊழியர்களை மட்டுமே இலக்கியக்காரர்கள் என மேடைக்கு கொண்டு வந்து பிரதேச இலக்கிய விழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறார்கள் வடக்கு கிழக்கு கல்விப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு அனுசரணையுடன் விழாவை ஒழுங்கு செய்த சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் தமிழ் இலக்கியக் குழுவினர். பிரதம சிறப்பு விருந்தினர் என பலரது பெயர்கள் தடல்புடலாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தும் பாராளுமன்ற உறுப்பினரான அ. தங்கத்துரையும் நகராட்சி மன்றத் தலைவர் பே. சூரியமூர்த்தியுமே இவர்கள் அழைப்பை ஏற்று வருகை தந்திருந்தார்கள்.

மாகாண சபை அதிகாரிகளுக்கு வேண்டியவர்களுக்கும் அவர்களைத் தேடிப்போய் சிரித்து நட்பைப் பேணிக்கொண்ட ஒரு சில இலக்கியம் சார்ந்தார்வர்களுக்கும் மட்டுமே அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதிகாரிகளைக் கனம் பண்ணி பிழைக்கத்தெரியாத இலக்கியக்காரர்கள் ''விறைப்பாகவே புறக்கணிக்கப்பட்டனர். அழைப்பு கிடைக்கப்பெற்றவர்கள் கௌரவப்படுத்தப்பட்டனர் என்றும் கூறமுடியாது. ''நாங்கள் ஆடும் ஆட்டத்தை நீங்கள் பார்க்கலாம்'' என்றமாதிரித்தான் அழைக்கப்பட்டார்கள். இலக்கியக்காரர்களையோ அவர்கள் சார்ந்த அமைப்புக்களையோ மரியாதைக் குத்தானும் கலந்தாலோசியாமல் விழாக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் ''கலந்தாலோசியாத'' தன்மையினாலதான் இவர்களால் திருகோணமலை சார்ந்த விவரங்களைத் திரட்ட முடியாமல் போய்விட்டது. ''நாங்கள் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தும் கூட எவரும் எங்களுக்கு உதவ வரவில்லை'' என்று மலர் குழுத் தலைவர் விழாவிலேயே கூறும் அளவுக்கு நிலைமை சீர்கெட்டே காணப்பட்டது.

விழாவில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்த அத்தனை பேருமே மாகாண சபை ஊழியர்கள். திருமலை சுந்தா என்ற வெளியார் ஒருவர் அரைமனத்துடன் சேர்க்கப்பட்டார். அரைமனம் என்பது பேச்சுக்காக அல்ல. முதலில் அடித்து விநியோகிக்கப்பட்ட பிரசுரத்தில் இவர் பெயர்இல்லை. இரண்டாவது ''திருத்திய பதிப்பில்'' சேர்த்துக்கொள்ளப்பட்டது. இதனால் மனமுடைந்த இவரும் மேடையேற மறுத்து விட்டார். ஆய்வுக்கட்டுரையாளர் சிலர் தாங்கள் அறிந்தவற்றை ஒப்புவித்தனர். சிலர் படித்த ''பாடத் திட்டத்தை''ச் சேர்த்து ஆய்வுக் கட்டுரை படித்தனர். உறவினர்களைப் புகழ்ந்த ஆய்வுக்கட்டுரை, மேலதிகாரிகளை தாஜா செய்யும் ஆய்வுக்கட்டுரை என்றுகூட ஆய்வுக்கட்டுரைகள் வகைப்படுத்தப் படக்கூடியதாக இருந்தன. ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் நூறுபேர் அழைத்து வரப்படவேண்டும் என்ற உத்தரவுடன் கூட்டம் சேர்க்கப்பட்டது. விரும்பிவந்த பார்வையாளர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். மாலைநிகழ்ச்சியில் தமிழ் எழுத்தாளர்களின் உரைகளைக் கேட்பதற்காக ஓரளவு கூட்டம் சேர்ந்திருந்தது. விழாவுக்கு வரவிரும்பாதவர்கள் கூட தூரத்தே நின்று அவர்களது உரைகளைக் கேட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

பாடசாலைப் பிள்ளைகளின் நிகழ்ச்சிகளும் தமிழக எழுத்தாளர்களின் உரையும் இடம்பெறாதிருந்தால் விழாவில் கொசு கலைக்கவேண்டித்தான் ஏற்பட்டிருக்கும்.

இந்த விழாவில் செய்யப்பட்ட ஒரே யொரு நல்லகாரியம் பழம் பெரும் எழுத்தாளர் வ.அ. இராசரத்தினம் அவர்களை கௌரவ விருந்தினராக்கி உரிய இடம் கொடுத்தது தான். இவருக்கு பணமுடிப்பும் வழங்கப்பட்டது.

தம்மைக் கௌரவித்தமைக்கு நன்றி தெரிவித்து பேசிய வ.அ. இராசரத்தினம் ''மாகாண சபையால் ஒரு நூலகம் மூடப்பட்டிருகிறது. செயலாளர்கள் அதிகாரிகள் என்று இருப்பவர்கள் அதனை சகலருக்கும் திறந்து விட உடனேயே நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதான் இந்த மண்ணுக்கு நீங்கள் செய்யும் இலக்கியத் தொண்டு'' என்று குறிப்பிட்டார்.

விழாவைத் தொகுத்தளிக்க வந்திருந்த வானொலிக் கலைஞர்களை திருகோணமலை இலக்கியக்குழுவொன்று தனியார் இல்லம் ஒன்றில் சந்தித்துப் பேசியது. இந்தக் கலந்துரையாடலின் போது இந்த விழா இந்தப் பிரதேசத்தைப் பிரநிதித்து வப்படுத்தும் விழா அல்ல என்ற கருத்து வானொலிக் கலைஞர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

சிறீலங்கா அரசு தமிழ்ப்பகுதிகளில் சுதந்திர தினவிழா கொண்டாடுவது போல் இந்தவிழாவையும் மாபெரும் விழா என வர்ணித்துக்கொண்டால் தவறொன்றும் இல்லை.

விவேகி

## வசூல்! வசூல்!! வசூல்!!!

மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல். எப்.பைச் சேர்ந்த ராஷீக்குழுவினர் தொடர்ச்சியாக பணவசூலில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடை முதலாளிகள், ஒப்பந்தக்காரர்கள், லொரி உரிமையாளர்கள் போன்றோரிடம் இவ்வளவு பணம் தந்துதான் ஆகவேண்டும் என மிரட்டியுள்ளனராம். புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு தொழில் நிமித்தம் செல்லும் லொறிகார், ட்ராக்டர்காரர்களிடமும் கப்பம் அறவிடுதல் மீண்டும் தொடர்கிறதாம்.

இப்பண வசூலுக்கு ரெலோவின் முன்னாள் உறுப்பினரான தயாநிதி என்பவர் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், தயாநிதியால் காரியம் ஆகாத சந்தர்ப்பங்களில் ராஷீக்கே நேரடியாகச் செல்லுவதாகவும் தெரியவருகிறது. அண்மையில் ஆசைவார்த்தை காட்டித் தம்முடன் சேர்த்துள்ள பதிய இளைஞர் சிலரை வவுணதீவு இராணுவமுகாமில் இராணுவத்தினருடன் காட்டிக்கொடுக்கும் பணியில் ஈடுபடுத்தியுள்ளனர். அதேவேளையில் இவ்விளைஞர்களின் பெற்றோர் இவர்களை மீட்டுத்தரும்படி பொலிசில் புகார் செய்துள்ளதாகவும் இன்னுமொரு செய்தி கூறுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர் ஒருவரின் அக்காவின் மகனை வவுணதீவு இராணுவ முகாமில் விட்டதைக் கேள்வியுற்ற ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர் ஒருவர் இது தொடர்பாக ராஷீக்கிடம் கேள்வி கேட்டதன் காரணமாக ராஷீக்கினால், நையப் புடைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனையில் ராஜு என்பவர் தலைமையில் (ராஜு, இலங்கை இராணுவ உளவுப்படையுடன் ஏற்கெனவே தொடர்புடைய கல்முனைக் காரர் அம்பாறை மாவட்ட முன்னாள் புலித்தளபதி அன்ரனின் அண்ணன்) தற்போது பணவசூலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எப். பின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொல்லப்பட்ட சாம் தம்பிமுத்துவின் வீட்டில் இருந்து செயற்பட்டு வருகின்ற ராஷீக் குழுவினரது நடவடிக்கைகள் பற்றி ஈ.பி.ஆர்.எல்.எப். பினரிடம் கேட்டால், ராஷிக் தற்போது எங்களுடன் இல்லை. அவர்கள் சாம் தம்பிமுத்துவின் வளவை ஆக்கிரமித்து முகாமிட்டுள்ளனர்' என்று பதில் வருகிறது.

## புட்டா புண்ணாக்கா?

FM99 ஒலிபரப்புச் சேவையின் தமிழ் ஒலிபரப்பு பகுதியில் கடமையாற்றும் ஒருசில ஒலிபரப்பாளர்களுடைய நாக்கில் ஏதாவது வருத்தம் ஏற்பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் பரவலாக ஏற்பட்டு வருகிறது. சில வேளை வாயில் புட்டுக்கட்டியை அல்லது 'புண்ணாக்குக் கட்டியை' வைத்துக்கொண்டு பேசுகிறார்களோ என்று இந்தக் குறிப்பை எழுதுபவருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணநூல்நிலயம், தொலிலாளர், என்று அவர்கள் அரிவித்தின்ற போ(த்)து எமக்கு வெரித்தாஸ் வானொலியோ என்ரசந்தேகம் ஏற்பற்று விட்டுகிர்த்து!

FM99 ன் செய்திகளும் உப்புச் சப்பற்று வீரகேசரிப் பத்திரிகைச் செய்திகளை அப்படியே ஒப்புவிப்பதாக -அதுவும் பலமுறை- இருக்கிறது. தனியாருக்குச் சொந்தமான மின்தொடர்பியல் நிறுவன ஙகள்காத்திரமான பங்களிப்புச்செய்வ தென்பது எதிர்பார்க்கப்பட முடியாத ஒன்றுதானா?

அதுபோக, இப்படித் தேன்மதுரத் தமிழைக் கொன்று புதைக்கின்ற பணியைசெய் வதற்கு ஒரு தமிழ் ஒலிபரப்புத்தேவையா?

## ஏன் பாரபட்சம்?

கல்முனை கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் முஸ்லிம், தமிழ் பாடசாலைகள் பரவலாக உள்ளன. அங்கு பல வருடகாலங்கள் தமிழ் கல்வி அதிகாரிகள் இருந்து வந்தனர். இன்று மருந்துக்கும் அவர்கள் இல்லை. மாறாக மூன்று முஸ்லிம் கல்வி அதிகாரிகள் உள்ளனர். ஏனிந்த பாரபட்சம் ? ஒரு தமிழ் கல்வி அதிகாரியாவது நியமிக்கப் படக்கூடாதா?

# முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் கட்சி அறுத்தது....?



சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக சிறுபான்மைச் சமூகங்கள் மேற்கொண்டு வந்த உரிமைப் போராட்டமானது தமிழ் தேசியவாதமாக குறுகிப்போன காலகட்டத்தில், வடகிழக்கில் செறிவாக தமக்கே உரிய மத, கலாசார தனித்துவத்துடன் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் தமது அரசியல் எதிர்காலம் குறித்து சிந்திக்கத் தலைப்பட்டதுடன், தமது அரசியல் அபிலாஷைகளை ஈட்டிக்கொள்ளும் அரசியல் தாபனமொன்றின் அவசியம் பற்றியும் உணர்ந்தனர்.

இதன் அடிப்படையில் எழுச்சியடைந்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸானது 1987ம் ஆண்டு முஸ்லிம்கள் தொடர்பாக கவனம்எதனையும் கொள்ளாது கைச்சாதிடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் கலைக்கப்பட்ட முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் எம்.ஐ.எம்.முகைதீனது முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கையினை குத்தகைக்கு எடுத்துக் கொண்டு முஸ்லிம்கள் மத்தியில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு 17 மாகாண சபை உறுப்பினர்களைப் பெற்றதுடன் 1989ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு 4 பாராளுமன்ற உறுப்பினர்களையும் பெற்று முஸ்லிம் அரசியல் வரலாற்றில் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியதுடன்தனித்துவமிக்க அரசியல்சக்தியாக தன்னைப்பறைசாற்றியது.

எனினும், முஸ்லிம் காங்கிரசானது பாரம்பரியமாக எமது சமூகத்தில் தோன்றிய அரசியல் தலைமைகளிலிருந்து சிறிதும் வித்தியாசமின்றி சிங்கள பேரினவாதத்துக்கு சோரம் போகும் அரசியல் சக்தியாக தன்னை வெகு விரைவிலேயே இனங்காட்ட ஆரம்பித்தது.

இதன் முதல் கட்டமாக 1989ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக சிறீமா அம்மையாரின் தலைமையில் உருவான ஐக்கிய முன்னணிக்கு நிபந்தனையுடன் வழங்கிய ஆதரவினை விலக்கிக்கொண்டு ஐ.தே.க. வேட்பாளர் ஆர். பிரேமதாச அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டதுடன் அதைத் தொடர்ந்து வந்த காலங்களில் பாராளுமன்ற அமர்வுகளில் ஐ.தே.க. ஆதரவாக செயற்பட்டதும், அட்டாளைச்சேனைக்கிராமத்தில் ஆர். பிரேமதாச அவர்கள் அடுத்த முறையும் ஜனாதிபதியாக வரப்பிரார்த்தனையும் செய்தது.

இவ்வாறு சந்தர்ப்பவாத அரசியல் நாடகத்தை வெற்றிகரமாக மேடையேற்றிக்கொண்டு வரும் முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைமையும் 1994ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலின் போது வெறும் தேர்தல் ஒப்பந்தமாகிய சந்திரிகா - அஷ்ரஃ ஒப்பந்தத்தையும் ஸியோனிச பிரதிநிதியாகிய சாணக்க அமரதுங்க அவர்களுக்கு எம்.பி. பதவியை விலைபேசி அமைத்த சாணக்க - அஷ்ரஃ ஒப்பந்தத்தினையும் முஸ்லிம்கள் மத்தியில் தூக்கிப்பிடித்து முஸ்லிம்களை மந்தைகளாக்கி அவர்கள் அள்ளிக்கொடுத்த வாக்குகளை இலகுவாக பேரினவாத பொ.ஐ.முன்னணிக்கு ஒரு முழுமந்திரிப்பதவிக்கும் 2 அரை மந்திரிப் பதவிக்கும் 2 தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கும் தாரை வார்த்து கொடுத்து அரசின் இதயம் நாம் இல்லையேல் அரசாங்கம் இல்லை என்றெல்லாம் பிதற்றியது.

இனி இலங்கை முஸ்லிம்கள் சில்லறை வியாபாரம்செய்யக்கூடாது மொத்த வியாபாரமே செய்ய வேண்டும் என்ற தத்துவத்துக்கு அமைய முன்னைய பேரினவாத சக்திகளின் முஸ்லிம் ஏஜென்கடுள் செய்த வீதி அபிவிருத்தி, பாடசாலைக்கட்டிடம், சனசமூக நிலையம் போன்ற சில்லறை வேலைத்திட்டங்களை விடுத்து மொத்த சலுகை வடிவங்களான 3 மாதத்துள் முடிக்கும் ஒலுவில் துறைமுகத்தையும், 3 மணிநேரத்துள் கல்முனையிலிருந்து கொழும்புக்குச் செல்லும் சுப்பர் வீதியினையும், கல்முனை நகரில் நவீன விளையாட்டு அரங்கிற்கான அடிக்கல்லையும்இதுவரை பூரண வசதிகள்எதுவும் அமையாத தென்கிழக்கு பல்கலைக் கழகத்தினையும் முஸ்லிம்களுக்கு பெற்றுத்தந்திருக்கிறது.

எமக்கு சலுகைகள் அவசியமல்ல, உரிமைகளே முக்கியம் என முழங்கிய முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைமையும் குட்டிச்சுவராக்கப்பட்டிருக்கும் அரசின் தீர்வுப் பொதியினை கண்மூடித்தனமாக வழவேற்றதுடன் அதில் முஸ்லிம்களுக்கு என்ன தீர்வு என்பதை இன்று வரை தெளிவுபடுத்தாமல் முஸ்லிம் மாகாணம் என்றும், தென்கிழக்கு மாகாணம் என்றும் ஒரே நாளிலேயே தடுமாறிப் பேசுகிறது. (ஆதாரம்: அம்பாறை மாவட்டத்தில் தொழில் பயிற்சி நிலையங்களின் திறப்பு விழாவினை ஒட்டி வெளிவந்த பத்திரிகைச் செய்திகள்)

அது மட்டுமல்ல அம்பாறை மாவட்டத்தில் பல தையற்பயிற்சி நிலையங்களைத் திறந்து வைத்து உரையாற்றிய அஷ்ரஃ 40 வருடங்களாக முஸ்லிம் சமூகம் பெறாதிருந்த உரிமைகளை இப்போதுதான் பெற்றுவருகிறோம்என்று முழங்கி அடுத்த தேர்தலுக்காக முஸ்லிம் சமுதாயத்தின் மடமையினை அளவிட்டுச் சென்றிருக்கின்றார்.

முஸ்லிம் சமூகத்தினது தனித்துவத்தினையும், உரிமைப்போராட்டத்தையும் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் வியாபாரமாக்கிச் செல்கின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் விட ஆரம்பித்திருக்கும் வரலாற்றுத் தவறானது தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழர் உரிமைப் போராட்டம் சிதறடிக்கப்பட முக்கிய காரணமாக அமைந்ததை போன்று முஸ்லிம் காங்கிரசும் முஸ்லிம்களின் உரிமைப் போராட்ட ஐக்கியத்தை சிதறடிக்க செல்வதற்கான திசைகளை காட்டத் தொடங்கியிருக்கிறது.

இதன் வெளிப்பாடே சிறீலங்கா முஸ்லிம் கட்சியின் தோற்றம். அட்டாளைச்சேனையில் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் அடுத்த முறையும் ஜனாதிபதியாக வருவதற்கு உழைப்போம் என்று அஷ்ரஃ உறுதி கூறியதை எதிர்த்து முஸ்லிம் காங்கிரஸ் முன்னைய தவிசாளரும் தற்போதைய முஸ்லிம் கட்சியின் ஸ்தாபகருமாகிய சேகு இஸ்ஸத்தீன் அவர்கள் பத்திரிகையொன்றில் மறுப்பறிக்கையே விட்டார் என்ற முக்கிய காரணத்தை மனதில் வைத்திருந்து தனது பிழைப்புவாத அரசியல் தலைமைத்துவத்திற்கு தடையாக உருப்பெருவார் என அஞ்சி சந்தர்ப்பம் பார்த்து கட்சியிலிருந்து அவரைத்தள்ளிவிட்டார்.

முஸ்லிம் கட்சி அண்மையில் அக்கரைப்பற்றில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதிலிருந்து என்ன விளங்குகின்றது என்றால் முஸ்லிம்காங்கிரசின் பாதையில் அதிருப்தியும், விரக்தியும் அடையும் முஸ்லிம்கள் தமது அரசியல் விடுதலைக்கான வேறு மார்க்கங்களை நாட ஆரம்பிக்கின்றனர். மு.கா. முஸ்லிம்களின் உரிமைப்போராட்டத்தினை உரிய முறையில் முன்னெடுத்து செல்லாததன் விளைவே முஸ்லிம் கட்சியில் தோற்றம் பெற்றிருக்கிறது.

இனிவரும் காலங்களிலும் முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைமைத்துவமும் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை புறக்கணித்து பதவிகளை தக்க வைத்துக்கொள்வதில் குறியாக செயற்படுமானால் முஸ்லிம்கள் மத்தியில் இது போல இன்னும் பல கட்சிகள், இயக்கங்கள் தோன்றுவது தவிர்க்க முடியாதது.

– *அலறி*

# பேரினவாதத்தை ஆதரிப்பது யார்?

"முஸ்லிம் காங்கிரஸ் இருக்கும் வரை நிபந்தனையற்ற வடகிழக்கு இணைப்பிற்கு இணங்கமாட்டோம். சிங்களப் பேரினவாதத்தையோ, தமிழ்ப் பேரினவாதத்தையோ சகித்துக்கொள்ளவும் மாட்டோம்" என மதிப்பிற்குறிய சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தனது அண்மைக்கால அரசியல் மேடைகளிலும் கூட்டங்களிலும் வழமையாக வாய்மொழிந்து வருகின்ற வார்த்தைகளாகும்.

தலைவர் அவர்கள் பேரினவாதம் என்பதை முழுமையாக அறிந்திருந்தாலும் அது தன் அருகிலேயே இருப்பதை மறைத்தே அண்மைக்காலங்களில் பேசிவருவதை அவதானிக்க முடிகிறது. தற்போதைய சிங்களப் பேரினவாதத்தை ஒரு தலைப்பட்சமாக மறைத்து வருவதானது அவர் அதனை மறைமுகமாக ஆதரித்து வருகின்றார் என்பதையே விளக்குகின்றது. அன்று பிரேமதாச அரசாங்கத்தில் வெளிப்படையாகவே இலங்கைச்சிறுபான்மை இனத்திற்கு எதிராக பேரினவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட சந்தர்ப்பத்தில் வீடியோ ஒளிப்பதிவுகள் மூலம் முஸ்லிம் மக்களின் வாக்ககுளை அக்கட்சிக்காக சேகரித்துக் கொடுத்த கதையும் உண்டு. அவ்வேளையிலேயே சிறீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை முஸ்லிம்களுக்கு நிரந்தர எதிரி என அன்று சுட்டிக்காட்டிய அமைச்சர் அவர்கள் இன்று அதே குடையின் கீழ் இருந்து பேரினவாதத்தைப் பற்றிக் கதைப்பதை எப்படிக் கொள்ளலாம்? இது அவருடைய பதவிக்கான காப்பீட்டுக் கதைகள் என்றே சொல்லாம் எனவும் தோன்றுகிறது.

நிரந்தர வடகிழக்கு இணைப்பு என்பதை மிக நீண்ட காலமாக ஆதரித்து வந்தார் என்பதை மறைக்க முடியாது. 'அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழினத்தைப் பெற்றுத் தராவிட்டாலும் நான் பெற்றுத் தருவேன்' எனக் கூறிய கதை எவ்வகையினுள் அடக்கக் கூடியது. கால சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப கருத்துக்களின் வடிவம் மாறலாமே ஒழிய கொள்கையை முழுமையாக மாற்றுதல் என்பது சுயலாபமே தவிர வேறல்ல.

தலைவர் அவர்கள் தனது கருத்துக்களை தனது நிரந்தர இருப்பினைக் கருத்தில் கொண்டும் இலங்கை முஸ்லிம்களை அபாயத்தினுள் சிக்கவைக்கும் அடிப்படையிலேயே முன்வைத்துள்ளமை, சிந்திக்க வேண்டிய விடயமே.

தற்பொழுது சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரசினால் முன்வைக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்தினை அடிப்படையாகக்கொண்ட முஸ்லிம்களுக்கான தனியான அதிகார அலகு உப அலகு என்பதை எல்லோரும் வரவேற்கலாம். ஆயினும் அது எந்த அடிப்படையில் வைக்கப்பட்டுள்ளது என்பதை இன்னும் தன்னை நம்பியிருக்கின்ற முஸ்லிம்களுக்கு இத்தலைமைப்பீடம் முன்வைக்கவில்லை இன்னும் இது பற்றிய கருத்துக்களோ ஆலோசனைகளோ எவரிடமிருந்தும் முன்வரவில்லை.

1995 ஆகஸ்ட் 30ம் திகதி வெளியிடப்பட்ட தீர்வுப்பொதியில் இவைபற்றி எதுவுமே குறிப்பிடாத நிலையில் முஸ்லிம்கள் இதற்கு நூற்றுக்கு நூறு வீதம் ஆதரவு தரவேண்டும்என்று ஒருதலைப்பட்சமான வேண்டுகோளை விடுத்தது எந்த அடிப்படையில் என்றும் தெரியவில்லை.

உண்மையில் இவ்வாறான தனியான அலகு கோரப்படுவதாயின் பலவாறான முக்கிய விடயங்கள் இதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. அவைகளைப் பின் வருமாறு வரையறுத்துக் கூறலாம்.

1. அதிகார ரீதியான தொடர்புள்ளதும் நிலரீதியாகத் தொடர்பற்றமான தென்கிழக்கு பிராந்திய அலகோ அல்லது உப அலகோ கோரி முன்வைக்கப்படுகின்ற நிலையில் இம்மாகணத்துக்கு அப்பால் வாழ்கின்ற மட்டக்களப்பு தெற்கு முஸ்லிம்கள், வடக்கு முஸ்லிம்களை நிர்வாக அலகினுள் எந்த அடிப்படையில் அதிகார ரீதியில் எதிர்காலத்தில் தொடர்புபடுத்தலாம். அதற்கான சாத்தியமான அம்சங்கள் என்ன என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

2. மாவட்ட எல்லை மீள் நிர்ணயம் செய்யப்படுகின்றதெனில் இவ் அலகில் இருந்து நீக்கப்படவிருக்கின்ற அம்பாறைத் தேர்தல் தொகுதியில் உள்ள முஸ்லிம்களின் வர்த்தக, நெல்விளை நிலங்கள், நீர்ப்பாய்ச்சு நிலங்களுக்கு எவ்வாறான காப்பீடுகள் வழங்கப்படப்போகின்றன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். ஏனெனில் சேனநாயக்க சமுத்திரத்தின் நீரைநம்பியே ஏராளமான முஸ்லிம்களின் நெல் விவசாயம் (5000ஏக்கருக்கு மேல்) தங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

3. வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம், தமிழ் மக்களின் இன ஒற்றுமை என்பது கூடிய அக்கறையுடன் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். ஏற்கெனவே தேய்வான நிலையில் இருந்த தமிழ் - முஸ்லிம் இன ஒற்றுமை தற்காலத்தில் சற்று வழமைக்குத் திரும்பி வருவதை அவதானிக்க முடிகிறது. இந்நிலையில் இக்கோரிக்கையினால் செயற்திறனான திட்டங்கள் முன்வைக்கப்படாவிடின் அதாவது இன ஒற்றுமை வலுப்படுத்தக்கூடியவாறான கோரிக்கையாக அது காணப்படுகிறதா? இல்லையா? என்பதைக் முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். இத்திட்டம் முன்வைக்கப்படுகின்றபோது தமிழ் மக்களின் தலைமைத்துவங்களுடன் இணைந்து இவ்வுலகினுள் வரும் தமிழ் மக்களுக்கான சாத்தியமான நடவடிக்கை எது என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

இவ்வாறான சம்பவங்களைக் கருத்தில் கொண்டு இதற்கான சாத்தியமான அம்சங்களை பொதுக்கூட்டங்களின் மூலமும் விவாதாங்களின் மூலமும் தலைமைத்துவம் விளக்கவேண்டும். மாறாக அப்பாவி முஸ்லிம்களின் வாக்குகளை மீண்டும் ஒரு முறை கவரும் ஊடகமாக இதனைப் பயன்படுத்த நினைத்தால் தனது நிரந்தர இருப்பிற்கு அது ஆபத்தையே விளைவிக்கும் என்று கூறலாம்.

4. தனது கட்சியினுள் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துதல்; சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் முக்கிய உறுப்பினர்களினுள் இவ்வுலகுப்பற்றிய கருத்தொற்றுமை என்றவிடயத்தில் பல்வேறான கொள்கை வேறுபாடுகள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. கட்சியினுள் இவ்வாறான வேறுபாடுகளைத் திருத்தாமல் சாதாரண மக்களுக்கு மத்தியில் காணப்படும் முரண்பாடுகள் தீர்க்கப்படுவது சாலச் சிறந்த விடயமல்ல. எனவே கட்சியினுள் இதுபற்றிய திடமான முடிவினைப்பெற்று அதனை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இல்லாவிடின் மீண்டும் ஒரு முறை முஸ்லிம்களைப் பலிக்கடாக்களாக தானேமாற்றிய கதை வந்தே சேரும் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

பல ஆண்டுகாலமாக ஏமாற்றப்பட்டு வந்த தமிழ் மக்கள் அரசியல் தீர்வில் நம்பிக்கையிழந்து மாற்று வழிகளைத் தேடிச்சென்ற அனுபவங்கள் எம்முன்னே காணப்படுகின்றன என்பது வெளிப்படையே. ஒருவன் ஒரு நாள் ஏமாற்றப்படுவதற்கும் தொடர்ந்து ஏமாற்றப்படுவதற்கும் வித்தியாசங்கள் பல காணப்படுகின்றன.

உண்மைகளைப் பொய்கள் தற்காலிகமாக இன்று இவ்வுலகில் இருந்து மறைக்கலாம். அவை ஒரு நாள் உணரப்படும் அல்லது உணர்த்தப்பட்டே தீரும்.

*எம்.ஐ.எம்.சாதாத்*

# முல்லைத்தீவு: தவறாத குறி?

ரிவிரச IIIஇன் குறிக்கோள்களை நிறைவேற்றிய பின்னர் சிவில் நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்த கணிசமான படையினரை குடாநாட்டிலிருந்து வெளியெடுத்து விசேட படைகளின் (Special Forces) துணையுடன் மிகத் துரிதமாக வன்னிப் பிராந்தியத்தின் பிரதான நகரங்களையும், பாதைகளையும் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவந்து விடலாமென்று அரசு எண்ணியிருந்தது. இதற்கான சில முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் ரிவிரச III நடவடிக்கையின் பின் மேற்கொண்டு வந்தது. புலிகளும் வன்னியை நோக்கிய பெரிய படை நகர்வை மேற்கொள்ளலாம் எனவும் அவ்வேளை தாமும் சில பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டியேற்படலாம் எனவும் அவர்களுடைய விடுதலைப் புலிகள் பத்திரிகையில் தெரிவித்திருந் தனர். இதன் பிரதான காரணம் அரசுக்கு மிக அவசியமாக இன்று தேவைப்படும் குடாநாட்டுக்கும் வன்னிக்கும் இடையிலான தரை வழிப்பாதையாகும். இவ்வாறான ஒரு பாதையை (Main supply Route - பிரதான வழங்கற் பாதை என இராணுவத்தினரால் குறிப்பிடப்படுவது) எப்பாடுபட்டாயினும் திறக்க வேண்டிய ஒரு நெருக்கடியை அரசு எதிர்நோக்குகின்றது. ஏனெனில் ரிவிரச நடவடிக்கைகளுக் காகவும் குடா நாட்டை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்காகவும் அங்கு கொண்டு போய் குவிக்கப்பட்ட 40,000க்கும் மேலான படைகளுக்கும், போர்த் தளபாடங்களுக்கும் தேவையான உணவு , ரவைகள் , எரிபொருள், உதிரிப் பாகங்கள் போன்றவற்றை பெருமளவில் கொண்டுபோய் சேர்க்க வேண்டிய நிலையிலிருக்கின்றது இராணுவம்.

இதற்கு இன்று இருக்கும் பிரதான வழி கிழக்குப் பிராந்திய கடலேயாகும். இக்கடலில் கடற்புலிகளின் தாக்குதல் அடிக்கடி நிகழ்ந்து வந்ததால் அதுவும் சிக்கலுக்குரிய ஒரு வழியாயிற்று. இதனாலேயே அரசு, விரைவில் வன்னிப் பிராந்தியத்தினுள் நுளையும் என எதிர்பார்க்கப்பட்டது. பின்வரும் காரணங் களுக்காக இலங்கை இராணுவத் தலைமைப் பீடமும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் இவற்றுக்கு இன்று திரைமறைவில் உற்ற தணையாக நிற்கும் இந்திய நடுவண் அரசும் இத்தரைவழிப் பாதையை அமைக்கும் முயற்சியை புலிகளால் தடுக்க முடியாது என எண்ணின.

1. யாழ்ப்பாணம் கைப்பற்றப் பட்டதனால் புலிகளுக்கு ஒரு பெரிய மரபு வழிப் படையை பேணுவதற்கான பொருளாதார அடித்தளம் போய்விட்டது என்பது.

2. ரிவிரச நடவடிக்கைகளின் போது புலிகளின் படைகள் கணிசமாக அழிந்து விட்டன என்பது.

3. இந்திய அரசு வெற்றிகரமாக புலிகளுக்கு வரும் ஆயுதக் கப்பல்களை இடைமறித்து அழிக்கும் அல்லது அழிக்க இலங்கை கடற்படைக்கு நேரடியாக உதவும். இதனால் பெரிய படை நகர்வை மேற்கொள்ளக்கூடிய ஆயுதங்களோ அல்லது கைவசமுள்ள ஆயுதங்களுக் கான ரவைகளோ கிடைப்பது மிக அரிதாகிவிடும் என்பது.

4. இந்தச் சூழ்நிலையில் புலிகள் ஒரு சமாளிக்கக்கூடிய வகையிலான கெரில்லா குழுவாகவே செயற்படுவர் என்பது.

அண்மையில் "ரொய்ட்டர்" செய்தி ஸ்தாபனத்துக்கு வழங்கிய செவ்வியில் இலங்கை இராணுவத் தளபதி ரொகான் தலுவத்தை "புலிகளால் பூநகரி மீது மேற்கொள்ளப்பட்ட "தவளைப் பாய்ச்சல்" போன்ற பெரிய தாக்குதல்களை இனி மேற்கொள்ள முடியாது" எனத் தெரிவித்தி ருந்தார். அவரது கூற்று நாம் மேற்கூறிய காரணங்களை அடிப்படையாகக் கொண் டது. ஆனால் தமது அனைத்து இராணுவ வளங்களையும் கவனமாக எடுத்துக் கொண்டுதான் புலிகள் குடாநாட்டிலிருந்து வெளியேறினார்கள் என்பதை மிக சிறுபிள்ளைத்தனமாகவும் முட்டாள்தனமாகவும் மேற்சொன்னோர் கருத்திற் கொள்ளத் தவறினர். எதிரியின் இராணுவ உடைமைகள், வளங்கள் என்பன கணிசமாக அழிக்கப்படும் போதுதான் ஒரு போர் வெற்றி அடைந்ததாகக் கருதப்பட லாம் என்பது போரியல் அறிஞர் கூறும் அரிச்சுவடி. இத்துடன் யாழ்ப்பாணத்தில் படையினரின் தளங்களைச் சுற்றி காவற் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பல புலிப்படையணிகளும் வன்னியை நோக்கியும், கிழக்கை நோக்கியும் சென்று களத்தில் இறங்கினர். இந்தப் பின்னணியிலேயே நாம் முல்லைத்தீவு தளத்தின்மீது புலிகள் மேற்கொண்ட அதிரடிப் படை நகர்த்தலை நோக்க வேண்டும். தாக்குதலின் முதலாவது கட்டத்தில் இராணுவம் நடப்பதை சரியாக உணர்ந்து கொள்வதற்கு முன்னரே பெருமளவிலான புலிகளின் விசேட அதிரடி அணிகள் முகாமின் மையப் பகுதியினுள் புகுந்து நிலை கொண்டு தாக்கத் தொடங்கியிருந்தன. இதே வேளை தளத்தின் கிழக்குப் பக்கம் கடற்கரையோரமாக அமைந்தி ருந்த கடற்படையின் சிறுதுறை கடற்கரும்புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி வீழ்ந்தது. அங்கிருந்த ரேடார் கருவி அகற்றி எடுத்துச் செல்லப்பட்டது. கடற்கரைக்கு அண்மையிலிருந்த தளத்தின் கட்டளையகமும் அதோடு அமைந்திருந்த தொலைத்தொடர்பு கோபுரமும் தகர்க்கப்பட்டிருந்தன. இத்துடன் முல்லைத்தீவு தளத்துக்கும் கொழும்பு, அனுராதபுரம் போன்ற இன்னோரன்ன இடங்களில் உள்ள தொலைத்தொடர்பு தளத்துக்குமான தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது. தளத்தில் பெரிய படைக்களக் களஞ்சியம் சில புலிப்படையணிகளால் வழித்துத் துடைக்கப்பட்டது. (பெருமளவு படைக்கல ங்களை புலிகள் பல ட்ரக் வண்டிகளில் ஏற்றிச் செல்வதை தாம் கண்டதாக திங்களன்று (22.07.96) காட்டின் ஊடாக தப்பியோடி வெலி ஓயா (மணலாறு) போய்ச்சேர்ந்த 15 இராணுவத்தினர் கூறியுள்ளனர்) அங்கு நின்ற 7 கவச வாகனங்களையும் 3 சாதாரண வாகனங்களையும் புலிகள் கைப்பற்றி அகற்றினர். முல்லை தளத்தில். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் மிக முக்கியமானவை இரு 122MM பீரங்கிக ளாகும். 1991ம் ஆண்டு ஆனையிறவு முகாமை தாக்க முற்பட்ட காலத்தில் இருந்து மரபு வழிப்பட்ட பெரிய படை நகர்வுகளில் அக்கறை காட்டிவந்த புலிகளுக்கு கனரக பீரங்கிகள் கைவசம் இல்லாமல் இருந்தமை பெரிய இடைஞ்சலாக இருந்தது. கனரக பீரங்கி இல்லாமல் மரபு வழிப்படை நகர்வுகளை மேற்கொள்ளுவது என்பது குண்டுத் தோட்டா இல்லாமல் யானை வேட்டைக்கு போவது போல் ஆகும். கடந்த காலத்தில் புலிகளின் சில மரபு வழிப் போர் முனைப்புகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டமைக்கு அவர்களிடம் கனரக பீரங்கிகள் இல்லாமல் இருந்ததும் ஒரு முக்கிய காரணம். இன்று படையினரிட மிருந்த இரு கனரக பீரங்கிகள் புலிகளின் வசப்பட்டுள்ளன. எனவே வருங்காலத்தில் அவர்களுடைய மரபுவழிப் போரிடு திறன் மேலோங்குமென எதிர்பார்க்கலாம். வெள்ளியன்று அலம்பிலுக்கு அண்மையில் உலங்கு வானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட அரசின் விசேடப் படைகள் முன்னேற முற்பட்ட வேளையில் அவர்கள் மீது புலிகள் இந்த 122 MM பீரங்கிகளை பிரயோகித்ததாகவும் அதன் காரணமாவே சில இழப்புகள் ஏற்பட்டதாகவும் சில வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. அது மட்டுமன்றி புலிகள் மீது 'குண்டு வீசுவதாக எண்ணி தரையிறக்கப்பட்ட படைகள் மீது சில விமானங்கள் குண்டு வீசியதாகவும் அதனால் 8 படையினர் வரை உயிரிழந்ததாகவும் தெரிய வருகிறது. முல்லைத்தீவிலிருந்த இரு நெடுந்தூர தாக்கு விசை கொண்ட 120MM எரிகணை செலுத்திகளையும் (mortar) புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர். மேலும் படைகளுக்கு ஈழப்போர் வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு முல்லைத்தீவுத் தளத்தில் ஏன் இழப்புகள் ஏற்பட்டது?(தளத்திலிருந்த 1200-1500 வரையிலான படைகளில் தப்பிய சிலரைத் தவிர ஏனையோருக்கு என்ன நடந்தது ஏன்று தெரியவில்லை. இவர்கள் இறந்திருக்கலாம் என்ற ஊகமே 23.07.96 அன்று வரை கிடைத்த தகவல்களிலிருந்து தெரிய வருகிறது). இதற்கு முதலாவது காரணம் தளத்தின் அமைவிடமாகும். அதன் கிழக்கெல்லைக் கடல். மேற்கெல்லை நந்திக் கடல் எனப்படும் பரந்த களப்பு. வட எல்லை வட்டுவாகல் கிராமம் தெற்கெல்லை புதற் காடுகள் பரந்த சிலாவத்தைப் பிரதேசம் புலிகளின் தாக்குதல் அனைத்து முனைகளினூடாகவும் நடாத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில் தளத்தைச் சுற்றிய மேற்கூறிய எந்தப் பிரதேசத்திலும் படைகள் பின்வாங்கி ஒருங்கிணைந்து பதிலடி கொடுக்கக் கூடிய அல்லது பாதுகாப்பாக நின்று போரிடக் கூடிய இயற்கை அரண் நிலைகள் ஏதுமில்லை. பூநகரி பிரதேசத்தில் காணப்பட்ட பெரும் மணற் குன்றுகளும் பனை வடலிகளும் அத்தளத்தில் இருந்த பெருமளவிலான படையினர் தப்பிப்பதற்கு சாதகமாக அமைந்தன என்பது இங்கு மனங் கொள்ளத் தக்கது. நாம் ஏலவே குறிப்பிட்டது போல புலிகள் முதற் கட்டத் தாக்குதலின் போதே தளத்தின் அக அரண் பகுதிகளினுள் பெருமளவில் நுழைந்து தாக்கத் தொடங்கியதாலும் தளத்தின் கட்டளைத் துறை முற்றாக சீர்குலைந்ததாலும் அரச படை அணிகளுக் கிடையிலான தொடர்புகள் சிதைவடைந்ததாலும் நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் வியாழன் பொழுது புலர்வதற்கு முன்னரேயே கொன்றழிக்கப்பட்டு விட்டனர். ஞாயிற்றுக்கிழமை நன்பகல் போலத்தான் அரசு கடல் மார்க்கமாக சில படையணிகளை அலம்பிலுக்கு சற்று வடக்கே தரையிறக்கக்கூடியதாயிற்று. இம்முயற்சியில் 'ரணவிரு" என்ற பெரிய போர்க்கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. முன்னேற முற்பட்ட படைகளுக்கு உதவியாக ஒரு உலங்கு வானூர்தி சேதமாகி புல்மோட்டையில்' தரையிறங்கிற்று. இறுதியாக செவ்வாய் மதியம் தரையிறக்கு கலங்கள் மூலமாக இரண்டு பட்டாலியன்கள் (Battalions) தளத்திற்கு தெற்காகக் கொண்டு போய் இறக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவித் தன. ஆனாலும் செவ்வாய் மாலை வரை முல்லைத் தீவு முகாம் அமைந்திருந்த பகுதியை படைகள் அண்மிக்க முயற்சி செய்து போராடிக்கொண்டிருந்தனர்.

இத்தளத்தையும் அதன் கடற்படை நிலையத்தையும் மீண்டும் நிலைநிறுத்திப் பாதுகாக்காத பட்சத்தில் யாழ் குடாநாட்டிற்கான கடல் வழிப்பாதையைப் பாதுகாப்பாக வைத்திருப்பது என்பது முடியாத காரியமாகிவிடும். தன்னுடைய இராணுவ மூலோபாயத்தை முழுமையாக மறுபரிசீலனை செய்யவேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கு புலிகளின் முல்லைத் தீவு அடி அரசை தள்ளியுள்ளது. எனினும் முல்லைத்தீவில் நிகழ்ந்த அனர்த்தத்தின் கதிகலக்கத்தில் இருந்து சற்றுவிடுபட குறைந்தது சில வாரங்களாவது ஆகும் போல் தெரிகிறது.








— டி.சிவராம்



# கட்டாய இராணுவ சேவை!

'கறுப்பு யூலை' யை முன்னிட்டு புலிகள் கொழும்பில் ஏதாவது தாக்குதலை மேற்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்புடன் கொழும்பு மாநகர் முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வீடுவீடாக நடாத்தப்படும் சோதனைகள் மிகவும் அதிகரித்துள்ளன. கடந்த ஒரு வாரத்துள் மட்டும் பெண்கள் உட்பட அறுபது பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளதாக பத்திரிகைச் செய்திகளின் கூட்டுத் தொகை தெரிவிக்கிறது. இவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டாலும் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்ற சுந்தேகத்தின் பேரில் ஏனையோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் வெள்ளவத்தை 'ஹம்டன் லேனில்' உள்ள ஒரு வீட்டில் இருந்து வெடிமருந்துகள், கம்பியூட்டர்கள் மற்றும் தொலைத்தொடர்புச் சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்குக் காரணமாக இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கட்கு பதவி உயர்வும் பணப்பரிசும் வழங்கப்பட்டது தெரிந்ததே. இந்த நிகழ்ச்சி, பொலிசார் மத்தியில் தீவிரமாக கைது செய்யும் உற்காகத்தை ஏற்படுத்தி உள்ளது. வெளிநாடு போக ஏஜன்சியிடம் காசு கட்டிவிட்டோ அல்லது வெளி நாட்டிலுள்ள மணமகனிடம் மணமகளை அனுப்பவோ கொழும்பில் வந்து தங்கி நிற்கும் ஏராளமான 'தாங்கள் இங்கு இருப்பதற்கான காரணம் கூறமுடியாத' பலர் பொலிசாரினால் கைது செய்யப் படுவதும், அவர்களில் பலர் லஞ்சம் கொடுத்தோ வேறு வழிகளிலோ பொலிஸ் நிலயத்திலிருந்து மீண்டால் போதும் என்று நடந்து கொள்வதும் ஒன்றும் புதிய விடயங்களல்ல. இவ்வாறு பணம் பிடுங்கலாம் என்பதற்காகவே அடிக்கடி தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் படுவதும் இங்கு மிகவும் சர்வசாதாரமாக நடக்கின்ற ஒரு விடயம். ஆனால் இந்த பணப்பரிசும் பதவி உயர்வும் வழங்கப்பட்ட பின், இவ்வாறான நிகழ்ச்சிகளில் பொலிசார் அவ்வளவாக அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. மாறாக, எப்பாடுபட்டாவது ஒருவரை முக்கியமான புலி என்று நிருபித்துவிட வேண்டும் என்பதிலேயே கவனமாக இருக்கிறார்கள் என்கிறார் தனது சகோதரனை பொலிசார் பிடித்துச் சென்றது தொடர்பாக 'ஓடித்திரியும்' ஒரு பாடசாலை ஆசிரியர். பதவி உயர்வும் அரசாங்கம் கொடுத்த பணப்பரிசும் மிகவும் கவர்ச்சிகரமானதாகவும் பிரபல்யப்படுத்தப்பட்டதாகவும் இருந்ததால் விரைவிலேயே பல தமிழர்களது வீடுகளிலும் வெடிமருந்துகள் மற்றும் துப்பாக்கிகள் முழைக்கக் கூடும் என்று அபிப்பிராயப் படுகிறார் அவர். ஏற்கனவே நாரஹென்பிட்டியிலுள்ள தொழிற் செயலகத்தில் தொழில் அதிகாரியாக வேலைசெய்த தர்மலிங்கம் தங்கியிருந்த 'பன்சல' வளவிற்குள் பொம்மைகட்குள் அடைக்கப்பட்ட 'றொக்கற் லோஞ்சர்'கள் அகப்பட்டது தெரிந்ததே!

எவ்வாறாயினும், இம்முறை தமிழர்கள் கறுப்பு யூலையை நினைவு கூறுகிறார்களோ இல்லையோ அரசாங்கம் அதை நினைவு கூறுகிறது!

கொழும்பில் இந்த விடயங்கள் ஒருபுறமிருக்க, யாழ்குடாநாட்டை தக்க வைத்துக் கொள்வதற்காக அங்கு அனுப்புவதற்கு பெருந்தொகையான படையினர் தேவை ஏற்பட்டுள்ளதும் அரசுக்கு முக்கிய தலையிடியாக உள்ளது. இதற்காக படைக்கு ஆட்சேர்ப்பதற்கான 10.000 பேருக்கான விண்ணப்பங்ள் கோரப்பட்டிருந்தும் இதுவரை 1800 பேர் மட்டுமே விண்ணபித்துள்ளார்கள். படையில் சேர்ந்து கொள்வதற்கு பொதுவாகவே தயக்கம் காட்டப்படுவது மட்டுமல்லாமல், இராணுவத்திலிருந்து ஓடிப்போன 20.000 பேரில் மூவாயிரம் பேர் மட்டுமே அரசாங்கத்தின் பொதுமன்னிப்பு அறிவிப்பை அடுத்து திரும்ப வந்து சேர்ந்துள்ளனர். தற்போது முல்லைத் தீவில் நடந்து கொண்டிருக்கும் பெரும் யுத்தத்தில் பெருமளவு இராணுவத்தை குவிக்க வேண்டியுள்ள வேளையில், இராணுவத்தில் சேர்ந்துகொள்ள பெருமளவில் இளைஞர்கள் முன்வராமை அரச மட்டத்தில் பெரும் அதிருப்தியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்திவிட்டுள்ளது. அண்மையில் கண்டி மத்திய சந்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய உள்துறை பிரதி அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல வெளிப்படையாகவே இதைத் தெரிவித்துள்ளார். மீளக் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைத் தக்க வைத்துக்கொள்ள ஒருலட்சம் இராணுவ வீரர்கள் தேவையாக உள்ளனர். இவ்வாறு இராணுவத்தில் சேர்வதற்கு யாரும் முன்வராத பட்சத்தில், பல பிறநாடுகளில் உள்ளது போல கட்டாய இராணுவ சேவையை நடைமுறைக்கு கொண்டுவருவது தவிர்க்கமுடியாமல் இருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். இராணுவத்தில் சேர்வது தேசத்தைக் காப்பாற்றும் ஒரு புனிதப் பணியாக இனவாத வெறியூட்டும் விதத்தில் அறிவிக்கப்பட்டும், இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான வயதெல்லையைக் குறைத்தும் கூட பெருமளவில் இளைஞர்கள் கவரப்படாமை இத்தகைய கட்டாய இராணுவ சேவையைப் பற்றிய முடிவை நோக்கி அரசாங்கத்தை தள்ளிவருகின்றது எனலாம்.

'இந்த நாட்டின் ஆரம்பத்தில் அதாவது போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த 1505ம் ஆண்டளவில் இலங்கையில் நூறுவீதம் சிங்களவர்களே இருந்தார்கள். இப்போது அவர்களது சதவீதம் 70வீதம் ஆக குறைந்து விட்டது. எவ்வளவு விலை கொடுத்தாயினும் இந்த நாட்டின் சிங்கள பௌத்தர்கள் தொகை அருகிவருகின்ற துயரமான நிலையை நிறுத்தியாக வேண்டும்" என்று பிரதியமைச்சர் அக் கூட்டத்தில் மேலும் பேசியிருந்தார்.

இத்தகைய வராற்றுப் பொய்களைப் புனைந்து உணர்ச்சியேற்றிய போதும், தம்மைக் கொலைக்களத்துக்கு அனுப்பும் தேவையற்ற ஒரு யுத்தத்திற்கு பலியாக சிங்கள இளைஞர்கள் தயாரில்லை என்பது இப்போது தெளிவாகி வருகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பிரதானமாக இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது யுத்தத்தை நிறுத்தி, சமாதானவழியில் பிரச்சினையை அரசியல்ரீதியில் தீர்ப்பதாகக் கூறிக் கொண்டே பதவிக்கு வந்தது. ஆனால் அரசியல் ரீதியாக பிரச்சினையை அணுகுவதில் அரை மனத்தன்மையைக் காட்டியபடி யுத்தத்தில் தீவிரமாக தனது சகல சக்திகளையும் ஒன்று குவித்துள்ளது. யுத்தத்தால் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் அழிவுகள், பொருளாதார இழப்புக்கள் என்பவை நாட்டைப் பெரும் பொருளாதார நெருக்கடியை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே கடந்த ஓராண்டு காலத்துள் 1000 கோடி ரூபா மேலதிகமாக யுத்தத்திற்காக செலவு செய்யப்பட்டு விட்டதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார். இந்தத் தொகை இனிவரும் காலங்களில் இன்னும் அதிகமாக அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

> வராற்றுப் பொய்களைப் புனைந்து உணர்ச்சியேற்றிய போதும், தம்மைக் கொலைக்களத்துக்கு அனுப்பும் தேவையற்ற ஒரு யுத்தத்திற்கு பலியாக சிங்கள இளைஞர்கள் தயாரில்லை என்பது இப்போது தெளிவாகி வருகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பிரதானமாக இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது யுத்தத்தை நிறுத்தி, சமாதானவழியில் பிரச்சினையை அரசியல்-ரீதியில் தீர்ப்பதாகக் கூறிக் கொண்டே பதவிக்கு வந்தது. ஆனால் அரசியல் ரீதியாக பிரச்சினையை அணுகுவதில் அரை மனத்தன்மையைக் காட்டியபடி யுத்தத்தில் தீவிரமாக தனது சகல சக்திகளையும் ஒன்று குவித்-துள்ளது.

தவிரவும் அரசாங்கம் கொடுத்த எந்த வாக்குறியைத் தானும் இன்றுவரை நிறைவேற்றியதாகக் கூறமுடியாது. பாண்விலை ஏற்றப்படாது என்பது முதல், 1995 ஜலை 15ம் திகதிக்குள் ஜனாதிபதி ஆட்சிக்கு முடிவு கட்டப்படும் என்று அறிவித்தது வரை எந்த தேர்தல் வாக்குறுதிகளையும் அது நிறைவேற்றவில்லை. நிறைவேற்றா விட்டாலும் பரவாயில்லை. சிலவற்றில் அதற்கு நேரெதிராகவும் செயற்பட்டுவருகிறது. உதாரணமாக அமெரிக்க ஒலிபரப்பு நிலயத்திற்கு(Voice of America) அனுமதி வழங்கியது. மின்சார சபையை தனியார் மயமாக்க முயற்சிப்பது. அமெரிக்க இராணுவ அதிகாரிகளை தருவித்து இலங்கையிலுள்ள படைத் தளங்களில் பயிற்சி வழங்குவது போன்ற இலங்கையின் சுயாதிபத்தியத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட வருகிறது.

இத்தகைய வெறும் வாய்ச் சொல்லில் மட்டுமே சாதனையை செய்துவரும் ஒரு அரசாங்கம் 'சிங்கள பௌத்தத்தைக்' காப்பற்றும் என்று எப்படி நம்புவது? எந்த நம்பிக்கையில் சாகத் தயாராக இராணுவத்தில் சேர்வது? இதுவே இன்றுள்ள சிங்கள இளைஞர்கள் மத்தியிலான கேள்வியாக உள்ளது.

'தொழிலாளர் சாசனம்' வரையப்பட்டு அது தொழிலாளர் நலன்களைக் காக்க சட்டமாக்கப்படும் என்று பரவலாகப் பிரச்சாரம் செய்யப்பட்ட போதும், இப்போது அதை உடைப்பில் போட்டுவிடலாம் என்ற அபிப்பிராயம் ஆளுங்கட்சிக்குள் வலுத்துவிட்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலிட வரமாட்டார்கள் என்பதால் இவையெல்லாம் நடைமுறைக்கு உதவாத தேவையற்ற ஒன்று என்ற அபிப்பிராயத்தை இப்போது சிரேஷ்ட அமைச்சர்களே சொல்லத் தொடங்கியு ள்ளனர். தொழிலாளர் நலன் பற்றி நிறையப் பேசிய அரசாங்கம் அவர்களின் வேலைநிறுத்தத்தை துப்பாக்கி முனையில் நசுக்கிய வரலாறு ஒன்றும் புதியது அல்ல.

இந்த நிலையில் புலிகளுக்கு எதிராக பயங்கரவாத்திற்கு எதிராக யுத்தத்தில் தாம் ஈடுபட்டிப்பதாகவும் அதனால் முழு உலகமும் தம்மை ஆதரிப்பதாகவும் அரசாங்கம் எவ்வளவு தான் கூறிய போதும் அது தன் நாட்டு மக்களது ஆதரவை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது என்பதே உண்மை. ஆயுத வியாபாரத்தில் கவனமாக உள்ள அமெரிக்காவும் (அது அண்மையில் பலரக ஆயுதங்களை இலங்கைக்கு விற்றுள்ளது என்று ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது) அது போன்ற பிற நாடுகளும் இந்த யுத்தத்தை ஆதரிக்கலாம். ஆனால் யுத்தத்தின் பலனை இரத்தமும் சதையுமாக அனுபவித்துக் கொண்டிருக்கிற, தமது சொத்துக்களையும் உறவினர்களையும் நாளுக்கு நாள் இழந்து கொண்டுடிருக்கிற இலங்கை மக்கள், அவர்கள் தமிழர்ளோ சிங்களவர்களோ முஸ்லிம்களோ யாராயினும் ஆதரிக்கப் போவதில்லை.

எனவே யுத்ததுக்கு பலாத்காரமாக ஆட்சேர்க்கும் முயற்சியை தேசத்தின் முழு இளம் சமுதாயத்தையுமே அநியாயமாக அழிக்கின்ற ஒன்றாகவே அவாகள் இனங்காண்பார்கள்.

அரசாங்கம் இன்று செய்து கொண்டிருப்பது ஒரு ஆக்கிரமிப்பு மனோபாவத்துடனான யுத்தம் என்பதே உண்மை. ஒரு சில வரலாற்றுக் குருடர்கள் கருதுவது போல இது ஒன்றும் சமாதானத்துக்காக நடாத்தும் யுத்தம் அல்ல.

ஜனாதிபதி சந்திரிக்கா முன்னொருமுறை சொன்னார்: 'நாடு ஏற்கெனவே பிளவுண்டு தான் இருக்கிறது. அதை ஒன்றிணைப்பது தான் எமது தேவை" என்று. ஆனால் பதவிக்கு வந்தபின் அவர் அதை மறந்துபோய்விட்டார்.

பிளவுண்டிருப்பதை பலவந்தமாக ஒன்றிணைக்க முடியாது என்பதை அவர் மறந்து போனது ஒரு துரதிர்ஷ்டம் தான். இந்த யுத்தம் அவரது ஒட்டு முயற்சிக்குப் பதில் மேலும் மேலும் மோசமான பிளவை நோக்கித்தான் நாட்டை இட்டுச் செல்கிறது.

இதை ஜனாதிபதி உணராவிட்டாலும், இலங்கையின் மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள்.

விரைவில், வியட்நாமில் யுத்தத்திற்கு 'எமது பிள்ளைகளை அனுப்பாதே' என்று கோரிய அமெரிக்கர்களின் குரலை ஜனாதிபதி அவர்கள் தெற்கிலே கேட்கத்தான் போகிறார் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

ஆயினும், இன்னமும் காலம் பிந்திவிடவில்லை என்ற உண்மையையும் நாம் மறக்கக் கூடாது.

'இன்னுமுள்ள காலம்
அச்சந்தரும் வண்ணம்
மிகச் சிறியதே ஆனாலும்
இருக்கிறது'

இதை அரசாங்கம் புரிந்து கொள்வது நல்லது!..

நாச மறுப்பான்

### அட்லாண்டா ஒலிம்பிக், ஜூலை 19 — ஒகஸ்ட் 04

# பத்துக் காரணங்கள்!

*மலேஷியா பினாங்கு பயனீட்டாளர் சங்கம் வெளியிடும் பத்திரிகையான ''பயனீட்டாளர் குரலி' லிருந்து இக்கட்டுரை நன்றியுடன் மீள் பிரசுரம் செய்யப்படுகிறது. சகலவிதமான பாவனைப் பொருட்கள், நுகர்வுப் பொருட்கள் பற்றிய சாதக, பாதக அம்சங்களை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து பயனீட்டாளர்களுக்கு அறிவுரை, ஆலோசனை வழங்கும் ஓர் இதழாக இப்பத்திரிகை திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.*

*இப்பயனீட்டாளர் சங்கம் பல பயனுள்ள நூல்களை வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களின் அண்மைய வெளியீடு வாலி + வைரமுத்து = ஆபாசம் என்பதாகும்.*

இச்சங்கத்தினுடனான தொடர்புகட்கு
Consumers' Association of Penang,
228,Jalan Macslister,
10400. Pulau Pinang,
Malaysia.

**ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை எதிர்ப்பதற்கு நிறையக் காரணங்கள் உள்ளன. இது 1996லும் 2000லும் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிக்கு மட்டும் அல்ல, ஆனால் எல்லா விளையாட்டுப் போட்டிகளுக்கும் அடங்கும்.**

**பல ஆய்வுகளுக்குப் பிறகு கிடைக்கப் பெற்ற விபரங்கள் இங்கு சுருக்கி கொடுக்கப்பட்டுள்ளன.**

**இருப்பினும் ஒலிம்பிக் போட்டிகள் எதிர்ப்புக்கு எந்த வித ஆதரவும் இது வரையில் தரப்படவில்லை. மாறாக நாட்டு அரசாங்கங்கள் மற்றும் வர்த்தக ரீதியிலான ஆதரவு மட்டும் இப்போட்டிக்கு தொடர்ந்து கிடைத்து வருகிறது.**



ஒலிம்பிக் விளையாட்டுப்போட்யிடில் பங்கு கொள்ளும் விளையாட்டாளர் மற்றும் ஆதரவாளர்களுக்கு யாரும் கண்டனம் தெரிவிக்கவில்லை. நடத்தப்படும் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டியையும் அறவே பொருள் தராத ஒன்றாகவும் நான் கூறவரவில்லை.

ஆனாலும்இந்த ஒலிம்பிக்விளையாட்டுப் போட்டியில் ஒரு பெரிய பிரச்சினையே அடங்கியுள்ளது. இப்பிரச்சினைகள் முற்றாகத் தீர்க்கப்பட வேண்டும்.

***தேசபக்தி***

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியே அரசியல்பலத்திற்கு ஒரு தளமாக விளங்கி வருகிறது. 1936ல் நடந்த பெர்லின் விளையாட்டுப்போட்டியை நாசி ஆட்சி அதனுடைய செல்வாக்கை உயர்த்துவதற்காக பயன்படுத்திக்கொண்டது.

சோவியட் யூனியன் ஆப்கானிஸ்தானுக்கு படையெடுப்பு செய்வதை நிறுத்தும் பொருட்டு அமெரிக்க அரசாங்கம் 1980ல் மாஸ்கோவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியை எதிர்த்தது.

அமெரிக்காவின்இந்த செயலை பழிவாங்கும் பொருட்டு சோவியட் அரசாங்கம் 1984ல் லாஸ் ஏன்ஜல்சில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவில்லை.



அரசியலுக்கும்விளையாட்டுப்போட்டிக்கும்எந்த வித சம்பந்தமும்இல்லையேயாயினும், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் ஆரம்பத்திலிருந்தே அரசியல்வாடை வீச ஆரம்பித்துள்ளது.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் எந்த நாடு பங்கெடுக்கப்போகிறது என்பதை நிர்ணயிக்கும் அதிகாரம் அரசியலுக்கே இருந்து வருகிறது. ஒரு நாடு ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொள்ளவில்லையானால், அந்நாட்டில் உள்ள விளையாட்டாளர்களும் பங்கெடுத்துக்கொள்ள இயலாது.

விளையாட்டார்ளர்களுக்கு இடையே ஏற்பட வேண்டிய போட்டி நாடுகளுக்கு இடையேநடக்கும் போட்டியாக மாறிவிடுகிறது. ஒரு நாட்டின் விளையாட்டாளர் வெற்றிபெற்றாரானால் அவருடைய நாட்டின் கொடி உயர்த்தப்பட்டு தேசிய கீதமும் பாடப்படுகிறது.

***வர்த்தகம்***

வர்த்தக ரீதியிலான நோக்கங்களும் ஒலிம்பிக் போட்டியின் வாயிலாக நிறைவேற்றிக்கொள்ளப்படுகின்றன. போட்டியின் மூலம் ஏற்படும் வெற்றி நிறுவனங்கள் அவர்களுடைய பொருட்களை விற்பதற்கும், மற்றும் தங்கப்பதக்கங்களினால்விளையாட்டாளர்களும் விளம்பரப்படுத்துபவர்களும் தங்களுடைய பொருட்களை விற்கவும் முடிகிறது.

ஒலிம்பிக், தொலைக்காட்சியின் மூலம் ஒரு பெரிய வியாபாரமாக ஆகி வருகிறது. உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் இப்போட்டியினை கண்டுகளிப்பதற்கென தொலைக்காட்சி விளம்பரமும் செய்து வருகிறது.

தொலைக்காட்சி விளம்பரங்களின்மூலம் அகில உலக ஒலிம்பிக் செயற்குழு பன்னாட்டு நிறுவனத்தைப் போல் செயல்பட்டு வருகிறது.

***போட்டிகள்***

ஒலிம்பிக் விளையாட்டு, போட்டிகள் நிறைந்த ஒரு விளையாட்டாகும். பெரும்பாலான போட்டியாளர்கள் பேரிழப்பையே அடைந்து வருகின்றனர்.

மக்கள் தங்களுடைய கவனத்தை அதிகம் வெற்றியாளர்களிடமே செலுத்தி வருகின்றனர். பல் வருடங்கள்இதில்வெற்றிகாண முயற்சி செய்து வரும் பலர் தோல்வியையே தழுவி வருகின்றனர்.

வெற்றி பெற வேண்டும் என்ற மன அழுத்தத்தினால் அவர்கள் போதை மருந்துகளை பயன்படுத்தி வருகின்றனர். பயிற்சி முறைகளில் இரகசியங்களை கையாண்டு வருவதோடு உடல் காயம் அடைந்த நேரத்திலும் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளையாட்டுக்கள் மக்களுக்கு உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் மனநிறைவை அளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஆனாலும் இந்நோக்கம் நிறைவேற்றப்படுவதற்கு விளையாட்டு, போட்டியாக அமையாமல் பங்கெடுப்பாக மட்டுமே இருக்க வேண்டும்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி இந்த பங்கெடுப்பு மற்றும் ஒத்துழைப்பை பயன்படுத்துவதாகவே அமைகிறது.

***ஆண் ஆதிக்கம்***

ஆரம்பத்திலிருந்தே ஒலிம்பிக் போட்டியில்பங்கெடுப்பவர்கள் பயிற்சியாளர்கள் மற்றும் அதிகாரிகளில் பெண்களை விட ஆண்கள் அதிகமாகவே இருந்து வருகின்றனர். பெண் பங்கெடுப்பானவர்களுக்கு குறைவான நீதி தருதலும் மற்றும் அவர்கள் பங்கெடுக்கும் போட்டிகளும் குறைவாகவே உள்ளன.

பெரும்பாலான தேசிய ஒலிம்பிக் செயற்குழுவில் பெண் உறுப்பினர்கள் கிடையாது. அதோடு அவர்கள் பெண்களையும் போட்டிக்கு அனுப்புவதில்லை.

போட்டி விளையாட்டுக்களும் ஒருவருடைய பலத்தையும் வேகத்தையும் நிர்ணயிக்கும் ஒன்றாகவே இருந்து வருகின்றன. உதாரணமாக பெரும்பாலும் நீந்துதல் மற்றும் ஓடுதல் போட்டிகள் சில விநாடிகள் அல்லது நிமிடங்களில் முடிவு பெறுபவையாக உள்ளன.

இதேபோல்திறமை மற்றும்நிபுணத்துவம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும்போட்டிகள் ஆண்களை விட பெண்களுக்கும் அதிக வாய்ப்பு அளிக்கும் விளையாட்டுப் போட்டிகளாகும். ஆனாலும் ஆண்கள் அதிகம் பங்கெடுக்கும் போட்டிகளிலியே பெண்களும் புகுத்தப்பட்டு வருகின்றனர்.

→ 13

# கிறவல் தோண்டிக் கிடங்காகும் திருப்பெருந்துறை!

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ள மிகவும் பழமைவாய்ந்த கிராமமே திருப்பெருந்துறை கிராமமாகும். இங்கு பிரபலமான முருகன் கோயில் ஒன்றும், மன்ரேசா மிசனெறியொன்றும் மீளக்குடியேற்றப்பட்ட மாதிரிக்கிராமமொன்றும் உண்டு. இங்கு சுமார் 400 குடும்பங்களைக்கொண்ட 1500 மக்கள் வாழ்கின்றார்கள். இக்கிராமம் கிறவல் வளம் கொண்ட பகுதியாக இருந்தமையினால், மட்டக்களப்பின் அபிவிருத்தியில் இந்தப் பகுதி கிறவலே முக்கிய பங்கு வகிக்கின்றது. இங்கு கிறவல் அகழ்வு நடைபெற்றமையினால், சுமார் 20ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பகுதி பாரிய குழிகளுடன் காட்சியளிக்கின்றது. இப்பகுதி நகர வாவியுடன் தொடர்புபட்டால் நீரினால் இப்பகுதி தாழ்ந்து விடும். எனவே சென்ற இரு வருடங்களிலிருந்து இப்பகுதியில் கிறவல் தோண்டுவது தடுக்கப்பட்டு குறிப்பிட்ட சில தேவைகளுக்கு மட்டும் மண்முனை வடக்கு பிரதேசசெயலகத்திலிருந்து அனுமதிப்பத்திரம் பெற்று கிறவல் ஏற்றுவது நடைமுறைக்கு வந்தது. ஏனைய தேவைகளுக்கு மாவடி ஓடை, கொடுவாமடு, வாழைச்சேனைப் பகுதியில் கிறவல் ஏற்ற அனுமதிப்பத்திரம் கொடுக்கப்பட்டது. ஆனால், இன்று திருப்பெருந்துறை கிராமத்திலேயே கள்ளத்தனமாக கிறவலும், வாவியை அண்டிய பகுதியில் வெள்ளை நிற மண்ணும் ஏற்றுவது வழக்கமாகிவிட்டது. அத்துடன் ஏனைய பகுதிக்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர்களும் இங்குதான் கிறவலை ஏற்றுகிறார்கள். இந்த சட்டவிரோத செயலில்ஈடுபடுவோர்இப்பகுதி கொந்தராத்துக்காரர்களும் குறிப்பிட்ட சில தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுமே இந்த சட்ட விரோத செயலுக்கு மண்முனை வடக்கு பிரதேச செயலக அதிகாரிகளும் துணைபோவதுதான் மிகவும் மனவேதனைக்குறிய விடயமாகும்.

கடந்த ஜுன் 19ம்கதிகதி காலை 10 மணிக்கு பிரதேச செயலாளரின் பணிப்பின்படி மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திலிருந்து சுற்றாடல் உத்தியோகத்தர், திருப்பெருந்துறை கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் 3 பட்டதாரி உத்தியோகத்தர்களும் அனுமதிப்பத்திரமின்றி கிறவல் ஏற்றும் உழவுஇயந்திரங்களைப் பிடிப்பதற்காக சம்பந்தப்பட்ட பகுதிக்குச் சென்றனர். மேற்படி உத்தியோகத்தர்களினால் அனுமதிப்பத்திரமின்றி கிறவல் ஏற்றிய இரு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டது. இதில் ஒன்று அன்றாடம் கிறவலை நம்பித் தொழில் செய்யும் சாதாரண பிரசையினுடையது. மற்றையது நகரில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக இருந்து பல இலட்சங்களை சம்பாதித்த நபருடையது. இந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர் மாரடைப்பால் சென்ற வருடம் காலமானதைத் தொடர்ந்து இந்தியாவிலே தங்கியிருந்த இவரது மகன் மட்டக்களப்புக்கு வந்து தந்தையின் வழியிலேயே மைத்துனர்களின் பங்களிப்புடன் செயல்படத்தொடங்கினார். மேற்படி இவருடைய உழவு இயந்திர இலக்கம் 45-1497 பெட்டியின் இலக்கம் 37-2505ஆகும். இந்த உழவு இயந்திரமானது கைப்பற்றப்பட்டு அருகில் உள்ள பொலிஸ் காவல் சாவடிக்கு அண்மையில் நிற்பாட்டப்பட்டிருந்தது. இதற்கிடையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக காணி அதிகாரி விக்கினராஜா அவர்களின் கைங்கரியத்தினால் 18ம் திகதி கே. மகேந்திரன் என்பவருக்கு திருப்பெருந்துறையிலிருந்து நாவற்குடாவிற்கு கிறவல் ஏற்ற வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திலிருந்த உழவு இயந்திர இலக்கம் வெட்டப்பட்டு கைப்பற்றப்பட்ட உழவு இயந்திர இலக்கம் இடப்பட்டது. இது 19ம்திகதி 11.30 மணியளவில் நடைபெற்றது. பின்னர் எதுவுமே அறியாத பிரதேச செயலாளரினால் மாற்றப்பட்ட இலக்கத்திற்கு அருகில் ஒப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டது. (அனுமதிப் பத்திரத்தைப் பார்க்கவும்) இதன் மூலம் காணி அதிகாரியினால், பிரதேச செயலாளர் ஏமாற்றப்பட்டார். கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரம் விடுவிக்கப்பட்டது. கிறவலை நம்பி சீவியம்நடாத்தும்சாதாரண ஏழை நீதிமன்றத்திலே ஒப்படைக்கப்பட்டார்.

மேலும் ஒரு உழவு இயந்திரத்திற்கு ஒரு நாளைக்கு 5 லோட் கிறவல் ஏற்றவே அனுமதி வழங்கப்படும். இதன்படி இரு தினங்களுக்கு 20லோட் கிறவல் ஏற்ற அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கே பிரதேச செயலாளர் கையொப்பமிட்டார். ஆனால், மேலும் ஒரு தினத்திற்கு சம்பந்தப்பட்ட அதிகாரியினால், 21.06.90 என திகதி போடப்பட்டிருந்தது. மேற்படி விடயத்தினை 19ம் திகதி பி.ப. 2.00 மணிக்கே பிரதேச செயலாளர் கண்டுகொண்டார். இதை பிரதேச செயலாளரே வெட்டி அருகில் தனது ஒப்பந்தத்தை இட்டார். இதன் பின் சுற்றாடல் உத்தியோகத்தருக்கும் கிராம சேவை உத்தியோகத்தருக்கும் மற்றைய மூன்று பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கும் காணி அதிகாரியின் முன்வைத்தே இனிமேல் இப்படியான பிழை நடைபெறமாட்டாது என பிரதேச செயலாளர் கூறினார்.

மேலும்சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இந்த கள்ளமண் ஏற்றும் பணக்கார கும்பல்களுக்குமிடையே மிகவும் அன்னியோன்னியமான உறவு நிலவுவதை சகலருமே அறிவார்கள். 19ம் திகதி மேற்படி விடயத்திற்காக சம்பந்தப்பட்ட அதிகாரி மதிய உணவுக்கே செல்லாது காரியலயத்தில் அலுவல் பார்த்தார். இத்தனைக்கும் இவ்வதிகாரி பென்சன் பெற்றுவிட்டு கொன்ரக்ட் அடிப்படையிலேதான் கடமை புரிகின்றார்.

மேலும்கிறவல் ஏற்றுவது முற்றாகத் தடை செய்யப்படும் என்ற காரணத்தினால், சகல கொந்தராத்துக்காரர்களும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் தமது வளவுக்குள்ளே கிறவலை சேகரிக்க தொடங்கிவிட்டார்கள். சிலர் பிள்ளையாரடிக் கிராமத்தில் உள்ள தமது வளவினிலேயே மலைபோல் கிறவலை சேமித்து வைத்துள்ளனர். இன்னுமொரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் ''உப்புகராச்'' எனச் சொல்லப்படும் இடத்திலுள்ள மாடு வெட்டும்பகுதிக்கு முன்பாகவுள்ள தனது வளவிலே கடந்தவாரம் வரை 180 லோட் கிறவலை சட்ட விரோதமாக குவித்து வைத்துள்ளார். இவை இன்னும் சில வாரங்களில் காத்தான்குடி, ஆரையம்பதி போன்ற பகுதிகளுக்கு ஒரு லோட் 1500 ரூபா வரையில் விற்கப்படும். ஆனால், வாழைச்சேனையிலிருந்து எடுக்கப்பட்டது என்று அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு இவை விற்பனை செய்யப்படும்.

சென்ற மாதத்தில் ஒரு நாளில் மட்டும் திருப்பெருந்துறையிலிருந்து 61 உழவு இயந்திரங்கள் கிறவல் ஏற்றிக்கொண்டு காத்தான்குடி பகுதிக்குச்சென்றன. இதைத் தடுத்து நிறுத்த பொதுமக்கள் முயன்ற போது ஊறணி பொலிசாரினால் நன்கு கவனிக்கப்பட்டார்கள். 3 பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தில் அன்று தடுப்புக் காவல் வைக்கப்பட்டனர். இதனால் தற்போது மக்கள் அடங்கிக்கொண்டார்கள். ஒரு உழவு இயந்திரத்திற்கு நாள் ஒன்றுக்கு 50 ரூபாய் அத்துடன் சாரய்ம் சிகரெட், இதனால் ஊறணி பாதுகாப்புச்சாவடியில் எதுவித பிரச்சினையும் இல்லை. சகல விதமான லஞ்சத் தொடர்புகளுக்கும் பிள்ளையாரடி முதலாளியே பொறுப்பாக இருக்கின்றார். கொடுக்கல் வாங்கல்களில் தொல்லை கொடுக்கும் உழவு இயந்திர உரிமையாளர்களை பிரதேச செயலாளரின் கவனத்திற்கு உட்படுத்தி நீதிமன்றம் வரை கொண்டு போகவும் இவரது தகவல்கள் சிலவேளைகளில் உதவுகின்றன.

எனவே இந்த திருப்பெருந்துறையைப் பாதுகாக்க வேண்டும் எனில், பிரதேச செயலக மட்டத்திலேதான் முதலில் நடவடிக்கைகள் ஆரம்பிக்க வேண்டும். சூழல் பாதுகாப்பு என்று வாய் நிறைய கத்தியும் விழாக்கள் எடுப்பதிலும் எதுவித பிரயோசமும் இல்லை. பிரதேச செயலாளர் இப்பகுதியை கிறவல், மண் ஏற்றுவதை முற்றாகத் தடை செய்வதோடு மாநகர முதல்வரும் தன்னால் ஆன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

*பழனி*

"சாது ஜன ராவ" (நன் மக்கள் நாதம்) என்னும் தலைப்பிலான சமாதான இசை நிகழ்ச்சியின் 100வது நிகழ்ச்சி, கடந்த 16ம் திகதி கொழும்பு டவர் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்கான நிதி மற்றும் ஒழுங்கு வேலைகளை "சாது ஜன சமூகய" என்னும் பெயரிலான பல அரச சார்பற்ற அமைப்பு பொறுப்பேற்றிருந்தது. இந்நிகழ்ச்சியின் போது தமிழ் மொழியிலும் இரண்டு பாடல்கள் பாடப்பட்டன. மேடையில் பின்னணி இசை வழங்கும் பொறுப்பை இலங்கை இராணுவத்தின் வாத்தியக் குழு ஏற்றிருந்தது. இராணுவ சீருடையுடனான இவ்வாத்தியக் குழுவினர் சமாதான இசை நிகழ்ச்சிக்குப் பின்னணி இசை வழங்க அழைக்கப்பட்டிருந்தது பலரின் விமர்சனத்துக்கு உள்ளாகியது. கடந்த ஒன்றரை வருடங்களாகக் கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் தமது இந்த சமாதான இசை நிகழ்ச்சியை நடத்தி வரும் பாடகரான திரு.ஜயதிலக்க பண்டார, அவரது இசைக்குழுவைச் சார்ந்த மகிந்த சந்திரசேகர, குமார எப்பாவெல, ஆரியசேன இரத்நாயக்க ஆகியோருடன் இலங்கையின் பிரபல சிங்களப் பாடகரான குணதாச கப்புகே, விவுல்கனே ஆகியோரும் பங்குபற்றினர். ஜயதிலக்க பண்டார அவர்களுடனான சரிநிகரின் நேர்காணல் இது:

நேர்காணலின் போது முதலில் அவரைப் பற்றியும் 'சாது ஜன ராவ'யின் தோற்றம் பற்றியும் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''நான் அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்தவன். பாண்டியன் கடுவ எனது பிறப்பிடம். ஆரம்பக்கல்வியை காமினி வித்தியாலயத்திலும் உயர் கல்வியை மத்திய மகாவித்தியாலயத்திலும் பயின்று கொண்டிருந்தபோது 1971ம்ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியில் இணைந்து கொண்டு சிறை சென்றேன். சிறையிலிருந்து விடுதலையானபின் ஜே.வி.பியின் 'விடுதலைக்கீதம்' குழுவில் இயங்கி வந்தேன். சில கருத்து ரீதியான முரண்பாடுகள் காரணமாக அதிலிருந்து விலகி ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ரஜரட்ட சேவையில் சித்தார் வாத்தியக் கலைஞராகவும், அறிவிப்பாளராகவும், நடிகராகவும் கடமையாற்றிக்கொண்டிருந்தபோது 1988இல் அன்றைய ஐ.தே.க. அரசாங்கத்தில் உதவி பொலிஸ் அதிகாரியொருவரால் எழுதப்பட்ட இனவாதப் பாடல்களைப் பாட முடியாது என எதிர்ப்பு தெரிவித்ததனால் நானும், கபுகே, திவுல்கனே ஆகியோரும் அங்கிருந்து விலக்கப்பட்டோம். நாட்டில் இளைஞர்களின் 'கலையுணர்வுச் சக்தி' மிகவும் பிற்போக்குதனமாக இருப்பதாக நாம் உணர்ந்ததால் நாங்கள் 'கம்பன' (அதிர்வு) என்ற இசை நிகழ்ச்சியை நடத்தினோம். அதில் தொழிலாளர்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும், ஏழைகளுக்காகவும் பாடினோம்.

ஒகஸ்ட் தேர்தலோடு ஐ.தே.க. எதிர்ப்பு பிரச்சார நடவடிக்கையை செய்தோம். 'இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு' என்ற நிலைப்பாட்டில் இருந்ததால் யுத்தம் இருக்கும் வரை இதற்கொரு தீர்வு மில்லை என்பதையும் உணர்ந்து கொண்டோம். பொ.ஐ.மு. அரசு பதவியேற்றதன் பின் யாழ் செல்லச் சந்தர்ப்பம் கிட்டியது. அங்கு சென்றபோதுதான் கலை கலாசார நிகழ்ச்சிகளுக்கு ஊடாக இந்தத் தமிழ் மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவானது.

அப்போதுதான் பேச்சுவார்த்தை முறிந்தது. யுத்தம் ஆரம்பமானது. அரச ஆதரவாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு இருந்தது. குறிப்பாக யுத்தத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும்.

சமாதான காலகட்டத்தில் அதற்கு ஆதரவாக இலகுவாகக் கதைத்து விடலாம். ஆனால் யுத்தம் நடைபெறும் சூழலில் அது சாத்தியமில்லை. அதனாலேயே நாங்கள் 'சாது ஜனராவ'வை ஆரம்பித்தோம். எமது முதல் நிகழ்ச்சி 1995 செப். 30ம் திகதி மகாவலி கேந்திர நிலையத்தில் நடந்தது.

எமது நிகழ்ச்சிக்கான பல பாடல்களை எழுதியிருப்பவர் சந்திரசேகர. அவரது பாடல்கள் பெரும்பாலும் இனப்பிரச்சினைபற்றியதே. உண்மையில் தாய் மகன் சாவதை விரும்பமாட்டாள். எனவே சமாதானத்தின் அவசியத்தை கலைக் கருக்கூடாக மக்களுக்கு விளக்குவது அவசியம்.

மக்கள் எமது இந்நிகழ்ச்சியை நடத்த பல இடங்களிலிருந்தும் அழைப்பு விடுத்தார்கள். நாங்கள் எதிர்பாராத அளவுக்கு எதிர்பார்ப்பு உருவாகி விட்டிருக்கிறது. ஆயிரமாவது சாது ஜனராவயையும் எட்டுவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

✱ ஒரு கலைஞர் என்ற அடிப்படையில் இனப்பிரச்சினையை எவ்வாறு புரிந்து கொள்கிறீர்கள்?

இனப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் இதற்கொரு அரசியல் தீர்வே முடிவான தீர்வென்பதில் நான் முழுமையாக உடன்படுகிறேன். கடந்த கால அரசாங்கங்களும் இனப்பிரச்சினையை குறும் இனவாத ரீதியில் தூண்டி வந்துள்ளன. அரசியல் தீர்வொன்றுக்கான வழிமுறையை நோக்கி மக்களை வழிப்படுத்த வேண்டியதன் அவசியம் இன்று அதிகரித்துள்ளது.

✱ இரண்டு தசாப்தங்களாக வளர்ந்து வந்த யுத்தம் பற்றிய உங்களது நிலைப்பாடு என்ன? இது மக்கள் மத்தியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என நினைக்கிறீர்கள்?

இத்தனை வருட யுத்தத்தில் நாம் கண்டதென்ன? எத்தனை மனித உயிர்கள்? எத்தனை பொருட்சேதம்? அகதிகளானோர் எத்தனை பேர்? தெற்கிலும் தமது மகன்மாரை பலிகொடுத்துவிட்டு ஏங்கும் எத்தனை பெற்றோரை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். எத்தனைபேர் மன நோயாளிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்? யுத்தத்தினால் சீரழிந்து போன சமூகத்தில் யுத்தத்தின் கொடூரத்தை கலைகளுக்கு ஊடாக மக்களுக்கு கொண்டு செல்வதனூடாகவே அம்மக்களின் மனவடுவை சாந்தப்படுத்த முடியும்.

இது போன்ற முயற்சிகள் இதற்கு முன்னரும் உலகில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அப்படியான கலை, இலக்கியங்களினூடாக மக்கள் மத்தியில் இதனைக் கொண்டு சென்றதனாலேயே இன்று மக்கள் நிலை ஓரளவு சமநிலைப்படுத்தப்பட்டிருக்கிறது.

✱ யுத்தத்திற்கெதிரான இப்பாடல்களை நீங்கள் கிராமங்கள் தோறும் பாடிச் செல்கிறீர்கள். இது அம்மக்கள் மத்தியில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியதாக உணர்கிறீர்கள்?

எமது நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட இடங்களிலெல்லாம் மக்களின் அழுகையும், அவர்கள் எங்களில் காட்டிய அன்பும், அவர்களது அபிப்பிராயங்களும் இந்நிகழ்ச்சியின் அவசியத்தை எமக்கு வலியுறுத்தியிருக்கின்றன. பல எல்லைப்புறக் கிராமங்களில் இப்போது கலையுணர்வுகள் மிளிரத்தொடங்கியிருக்கின்றன. அவர்கள் பாடல் எழுதுகிறார்கள். கவிதை வடிக்கிறார்கள். இதற்கொரு நல்ல உதாரணத்தைச் சொல்கிறேன்.

பதவியவில் புத்தங்கல மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் அஜித் பெரகும்ப ஜயசிங்க என்பவர் எழுதிய கவிதையை நான் சொல்கிறேன். வெலிஓயாவுக்கு புலிகள் தாக்குதல் நடத்த வந்தபோது அவர்களது சடலங்களை இராணுவத்தினர் ட்ரக்குகளில் அள்ளிப்போட்டுப்போவதை கண்ட அவர் எழுதிய கவிதை இது.

''தங்கை காள்
விளக்கொளியை நாடும்
விட்டில்களைப் போல
எங்கிருந்து வந்தீர்கள்'

தென்னை மர வாடி விட்டு
துரத்தப்பட்டவர்களா'
பிறந்தகத்துப் பாத்தியதை
மீட்கத்தான் வந்தாரா
முன்னாள் நண்பர்களை
பார்த்துப் பேச வந்தாரா'

காதணியும் மூக்குத்தியும்
காற்சிலம்பும் எங்கே
ஈடுவைத்த போது எல்லாம்
அறுதியாய்ப் போச்சுதோ'

செம்பஞ்சுக் கரங்களிலா
முரட்டுத் துப்பாக்கி'..

✱ இவ்வாறானநிகழ்ச்சிகளை எந்தெந்த தமிழ்ப்பிரதேசங்களில் நிகழ்த்தியிருக்கிறீர்கள்?

இது வரை அவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆயினும் மலையகத்தில் சில இடங்களில் நிகழ்த்தியிருக்கிறோம்.

✱ யாழ்ப்பாணம் சென்றிருக்கிறீர்கள் மரணத்துள் வாழும் அங்குள்ள மக்களைச் சந்தித்திருக்கிறீர்கள். அவர்கள் மத்தியில் இப்பாடல்களைப் பாடியிருக்கிறீர்கள். அப்போது உங்களுக்கு ஏற்பட்ட மன நிலை என்ன?

யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது நாங்கள் அம்மக்களின் உணர்வை விளங்கிக் கொள்ள முடிந்தது. அவர்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள். யுத்தத்தை பூரணமாக வெறுக்கிறார்கள். இதிலிருந்துவிடுபட முயல்கிறார்கள் நாங்கள் அம்மக்களைச் சந்தித்தபோது எமது கைகளைப் பற்றிக்கொண்டு விடுகிறார்களில்லை. வேற்று வாசிகளைப்போல எம்மைப் பார்க்கிறார்கள். அவர்களின் துயரம் தான் எம்மை இந்நிகழ்ச்சியை நடத்தத் தூண்டியது.

✱ நீயும் நானும் ஒரு தாய் மக்கள், நீ உயிர் நீத்த இடத்திற்கு சென்று நான் மண்டியிட்டு வணங்குவேன் என்ற கருத்துப்பட புலிகளின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த திலீபன் இந்திய அரசுக்கெதிராக உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தது குறித்து ஒரு பாடல் பாடுகிறீர்கள். யாழ்ப்பாணத்தில் திலீபன் உயிர்நீத்த இடத்திற்குச் சென்றீர்கள். அப்போது உங்கள் மனவுணர்வு எப்படியிருந்தது?

யாழ்ப்பாணத்துக்கு போகக்கிடைக்கும் திலீபனின் கல்லறையைக் காணக்கிடைக்கும் என நான் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. நான் திலீபனின் கல்லறைக்குச் சென்று வணங்கினேன். ஞாபகஸ்தூபியின் முன்னால் நின்று வாத்தியங்கள் எதுவுமில்லாமல் திலீபன் பற்றிய பாடலை துயரத்தோடு பாடினேன். எனக்கு அதனை மறக்க முடியாது.

✱ டவர் மண்டபத்தில் நடந்த 'சாது ஜன ராவ' நிகழ்ச்சியின்போது 'இலங்கை இராணுவத்தின் சிறிய 'பனர்'கள் தாங்கிய இராணுவ வாத்தியக்குழுவினர் இசையமைத்திருந்தனர். தென்னிலங்கையில் நடந்த படுகொலைக்கும் வடக்கில் பொது மக்கள் அனுபவித்து வரும் துயரத்திற்கும் இந்த இராணுவமே பொறுப்பு என கருதுகையில் பார்வையாளர்களான மக்களின் உள்ளம் எப்படியிருக்கும்?

இல்லை, அப்படிப் பார்க்கத் தேவையில்லை. இராணுவத்திலும் இன்று சமாதானத்துக்காக ஆர்வப்படும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். சில இராணுவ அதிகாரிகள் எமது நிகழ்ச்சியைப் பார்த்து பயப்படுகிறார்கள். இந்நிகழ்ச்சி இராணுவத்தின் மனோநிலையை மாற்றிவிடுமாம். இராணுவமும் இந்த முயற்சியில் முன்வருவது எவ்வளவு சிறந்த சகுனம். ஒரு வேளை விடுதலைப் புலிகளும் எம்மோடு இணைந்து கொள்வார்களேயானால், நாம் அதனை வரவேற்போம்.

✱ ஆனால், மக்கள் தமது அவலங்களுக்கு காரணகர்த்தாக்களாக இராணுவத்தை கருதும் வேளையில் மக்களுக்கு சொல்லப்போகும் சமாதான செய்தி இதன்போது சாத்தியப்படுமா?

நான் அப்படி நினைக்கவில்லை. மக்கள் அதனை வரவேற்பார்கள்.



## "உயிரையே ஈய்ந்த சகோதரன் திலீபனே நீயும் நானும் ஒருதாய் பிள்ளைகள்"

### என்கிறார் சிங்களக் கலைஞர் ஜயதிலக பண்டார

'சாது ஜன ராவ'வில் பாடப்படும் இரு பாடல்கள் இவை:

**சகோதரன் திலீபனே!**

....
உயிரையே ஈடாக்கிய சகோதரன் திலீபனே
நீயும் நானும் ஒரே தாயின்
பிள்ளைகள் நாம் திலீபன்
உமக்கும் எமக்கும் எதிரி யார்
என்பதை இனங்காணவில்லை
ஒரே தாயின் பிள்ளை என்பதைக்
கூட ஏற்கவில்லை
ஒரே பாதையில்
எம்முடன் இணையவுமில்லை
வாழ்ந்து கொண்டே
போராடவும் விரும்பவில்லை
நாம் சிங்களவர் நாம் தமிழர்
என்பது எமது மடமை
என்பதையும் அறியாமல்...

எதிர்காலத்திலும் நாட்டை
ஒன்றுபடுத்தி மனிதத்தை
நேசிக்கக்கூடிய நேரத்திலும்
உன்னை நினைத்து
கோவிலருகில் இருந்து கொண்டு
மண்டியிட்டு நினைவேன்
உன் கல்லறை முன் நின்று

(பாடலியற்றியவர்: கோ.ஆனந்த தேரோ)

**வெலிக்கடை படுகொலை**

உலகம் அறியா அதிசய மொன்றை
உரைப்பேன் கேட்பாயோ
உள்ளம் வெந்து வெதும்பிய வேதனை
இசைப்பேன் கேட்பாயோ

வெலிக்கடை படுகொலை
மனிதத்தின் பலிக்கதை

இனவெறி என்றொரு பேயிங்கே
தலைவிரித் தாண்டவம் ஆடியதே
தர்மமும் நீதியும் மானுட நேயமும்
பாதங்களின் கீழ் வாடியதே

புத்தன் என்ன போதித்தான்
போதித்தென்ன சாதித்தான்
பூட்டிய சிறையின் கைதிகள் மீது
வேட்டைப் பற்கள் பதிந்தனவே
வெலிக்கடை படுகொலை
மனிதத்தின் பலிக்கதை

நாட்டின் காவல் அரணாக
அரசென் றொன்று இருக்கையிலே
சிறைகளின் கதவுகள் திறந்ததும் உள்ளே
இனவெறி நுழைந்ததும் அதிசயமே
பேயர சாட்சி செய்ததுவோ
பிணங்கள் தின்றது சாத்திரமோ
மானுட தர்மம் மரித்தது என்று
உதிரம் சரிதம் எழுதியதோ

வெலிக்கடை படுகொலை
மனிதத்தின் பலிக்கதை
உலகம் அறியா....

(பாடலியற்றியவர்: ரி.பாலகரன் (மதுரகவி)

# தமிழ்த் தேசியவாதம் - ஓர் ஆய்வு

*தேசியவாதம் குறித்து ஏற்கெனவே சரிநிகரில் சில வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வந்தது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.*
*இவ்விவாதத்தின் போது முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பலவும் தேசியவாதம், இனத்தேசியவாதம் போன்ற 'விடயங்களுக்குள் மட்டுப்பட்டது மட்டுமன்றி 'இனவாதம்', 'தேசியவாதம்', 'இனத்தேசியவாதம்' போன்ற வார்த்தைகள் பற்றிய குழப்பங்களையும் தெளிவுபடுத்த முடியாதவையாக அமைந்திருந்தன.*
*டி. சிவராம் அவர்கள் தமிழ்த் தேசியவாதம் குறித்த வரலாற்று ரீதியான ஆய்வொன்றை முன்வைத்திருக்கிறார். இது தேசியவாதம் குறித்த விவாதங்களை மேலும் ஆழமாக எடுத்துச் செல்லும் என்று எதிர்பார்க்கிறோம்.*
*அவரது ஆய்வின் முன்னுரைப்பகுதி இவ்விதழில் வெளியாகிறது.*
*ஆ-ர்.*

டி.சிவராம்



''வாரீர்! சிறுத்தையின் உறுமல் சிங்கத்தின் சீற்றம்- கறுத்த கழுதையே அங்கேன் கனைக்கிறாய் என்று கேட்டிட வாரீர்!.... நாட்டு வெறிபிடித்த காளைகளே! கிலி பிடித்த மனிதர்களைக் கீறியெறியுங்கள்! புலி வாழ்வின் உச்சியிலே புதுமைதனைப் பொறித்திடுவோம்! என்று புரட்சிப்பண் பாடிட வாரீர்!''[1]

''அந்நாள் ஆண்ட மறத்தமிழன், கனகனையும் விசயனையும் களத்தினில் சந்திப்பான். போர் முரசு கொட்டிப் புலிப்பாய்ச்சல் நடத்துவான்''[2]

''நாங்கள் சாவதற்கு அஞ்சும் சமூகத்தினரா? சண்டைக்கும் ஒளியும் மரபினரா? பாண்டியன் பரம்பரையாயிற்றே! சேரன் சந்ததி ஆயிற்றே! சோழனின் சொந்தக்காரராயிற்றே! சொல்லுங்கள் அய்யா சொல்லுங்கள். போர் என்று சொல்லுங்கள்! ...திராவிடத்தனியாட்சி மலரும் வரை நம் தோள்களுக்கு ஓய்வில்லை. அதுவரை போர்! போரேதான்!''[3]

''திராவிடன், திராவிட நாட்டைத் தனி நாடாகப் பிரித்து தன்னரசு செலுத்திட நினைத்திடும், விடுதலை வேட்கையை நிறைவேற்றியாகவேண்டும். இதற்காக நாம் எவ்வளவு போர்ாட்டங்களை, போர்க்களங்களை, பிணக்குவியல்களைக் காணவேண்டுமோ தெரியாது... பிணங்களின் மீது திராவிடனின் பிணக்குவியல்களின் மீது ஓடியேனும் போரிட்டுப் போரிட்டுத் திராவிடத்தைப் பிரிப்போம் - வாழ்விப்போம் நாம்.''[4]

இவை இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி 1951 - 1953 காலப்பகுதியில் மேடைகளில்முழங்கியவை.

சி.என். அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி சி.பி.சிற்றரசு போன்ற பலர் திராவிடக் கழகத்தில் இருந்த காலத்திலும் அதிலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகமாக (தி.மு.க.) இயங்கிய வேளையிலும்பேசிய பேச்சுக்களும், எழுதியவையும் மிக மலிவான, (எட்டணா) எவரும் எளிதாய் புரிந்துகொள்ளும் உரை நடைகொண்ட சிறிய கைக்கடக்கமான நூல்களாக ஆயிரக்கணக்கில் 40களின் பிற்கூற்றிலிருந்து இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழுமிடமெங்கணும் விற்பனையாகின.

இங்குசிங்களப்பேரினவாதத்தை எதிர்கொண்டுதமிழ் பேசும் மக்களை ஓரணியிற் திரட்ட முனைந்து கொண்டிருந்த அரசியலாளர், தமிழாசிரியர், தமிழ் மொழிவழிக் கல்விகற்ற இளைஞர் எனப் பலருக்கு இச்சிறு நூல்களும் திராவிட இயக்கத்தின் பத்திரிகைகளுமே தமிழ்த்தேசியக் கருத்து நிலையின் (ideology) ஆதாரமாக அமைந்தன.

தமிழகத்தில் திராவிட இயக்கத்தினர் இந்தித் திணிப்பிற்கு எதிராகவும், தனிநாடு கோரியும், பேசியனவும், எழுதியனவும் இலங்கையில் சிங்கக் கொடி, தனிச்சிங்களம், குடியேற்றம் என்பவற்றை எதிர்த்து நின்றவர்களால் பலசந்தர்ப்பங்களில் இங்கிருந்த சூழலுக்கேற்ற சிற்சில மாற்றங்களோடு அப்படியே எடுத்தாளப்பட்டன.

பல இடங்களில் பொதுமையும், சுட்டப்பட்டது. ''வடக்கே இந்தி மொழியும் தெற்கே சிங்கள மொழியும் தமிழை அழிக்கப் பார்க்கின்றன'' எனப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பேசியதை 16.10.1955 ஞாயிறு தினகரன் கொட்டை எழுத்துக்களில் தலைப்புச் செய்தியாகப்போட்டது. (''தமிழ் மொழிக்கும்தமிழர் பண்பாட்டிற்கும் இன்று இடர்மிக்க காலம்'' என அவர்பேசியிருந்தார்)

திராவிட இயக்கத்தின் தமிழ் தேசியக் கருத்து நிலையின் தாக்கம் 50களில் இலங்கைத் தமிழர் ஒரு சாரரிடையே இலங்கையில் ''எமக்கும் ஒரு தனிநாடு வேண்டும்'' என்ற அரசியற் கோஷத்தையும் இயக்கத்தினையும் உண்டாக்கிற்று. (இதன் விரிவைப் பிறிதோர் ஆய்வில் காணலாம்) இக்கோஷத்தின் கருத்து நிலைவெளிப்பாடே பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை 1956இல் அரங்கேற்றிய 'துரோகிகள்' நாடகம்.

திராவிட இயக்கத் தமிழ்த் தேசியக் கருத்து நிலையின் பாதிப்பு பல இலங்கைத் தமிழ் அரசியலாளர், தமிழ் அறிஞர், தமிழ்ப் பற்றாளர், இளைஞர் மத்தியில் எந்தளவிற்குப்பரவியிருந்தது என்பதை இந்நாடகத்தில் பரக்கக் காணலாம். 'புலிநாடு' என்பதை ஒரு ஆயுதப் போராட்டத்தின் மூலம் தனியரசாக்கப் புறப்படும் தனித் தமிழ்ப் பெயர்கொண்ட சில இளைஞர்களின் கதையே பேராசிரியரின் 'துரோகிகள்' நாடகம்.

அன்று இலங்கையில் இருந்த தனித் தமிழ் நாட்டுக் கோட்பாட்டாளருடைய நடவடிக்கைகளையும், கருத்துக்களையும் தமிழரசுக் கட்சியினர் புறக்கணித்தாலும் அக்கட்சியின் அந்நாள் தலைமைப்பிரசாரப் பீரங்கியாகவும், அக்கட்சியினை வெகுஜனங்கள் மத்தியிற் கொண்டு செல்லப் பிரதான கருவியாகவும் இருந்த செல்லையா இராசதுரை திராவிடப்பிரிவினையாளரின் கருத்து நிலைப்பட்டவரேயாம். (தமிழரசுக் கட்சியின் அந்நாட் தலைவர்கள் பெரும்பாலும் ஆங்கில வழிக்கல்வி கற்றவர்கள். தமிழ் பேசும் மக்களை கவர்ந்திழுக்கக்கூடிய தமிழ் மொழியாற்றல் அவர்களிடம் இருக்கவில்லை)

இதுமட்டுமல்ல, கலைஞர் கருணாநிதி, அண்ணா, முரசொலிமாறன் போன்றோர் கதை வசனமும் பாரதிதாசன், கண்ணதாசன் ஆகியோர் பாடல்களும் எழுதி திராவிட இயக்கப் பிரச்சாரத்தை மையமாகக் கொண்டு 50களில் வெளிவந்த பல வெற்றிப்படங்களும் இலங்கைத் தமிழ்பேசும் மக்களைக்கடுமையாக ஈர்த்திருந்தன. அவர்கள் மத்தியில் தமிழ் தேசியக் கருத்து நிலைக்கு வடிவம் கொடுப்பதில் இப்படங்கள் முக்கிய பங்காற்றின எனின் மிகையாகாது.

1956 - திருப்பு முனையான ஒரு தேர்தல், அதன்பின் தனிச்சிங்களச் சட்டம், அதை எதிர்த்து தமிழ் பேசும் மக்கள் அணி திரண்டமை என்பன இலங்கையில் நடந்தேறிய வருடம். அவ்வருடம் கலைஞர் கருணாநிதியின் கதை வசனத்தில் சிவாஜி கணேசனின் நடிப்பில் (சிவாஜி அன்று தி.மு.க.வில் இருந்தவர்.) வெளிவந்தது ''ராஜா ராணி'. அத்திரைப்படத்தில் இடம்பெற்ற சேரன் செங்குட்டுவன் ஓரங்க நாடகம் இலங்கை வானொலியினால் பின்னர் அடிக்கடி ஒலிபரப்பப்பட்டு வந்தது. அதில் சேரன் செங்குட்டுவனாக சிவாஜி கலைஞரின் வசனம் பேசுவார்.

''வாளேந்தி, புகழேந்தி வாழும் வேங்கைப் புலிகளே! வந்து விட்டது உங்களுக்கு எல்லாம் அழைப்பு. வட நாட்டிலே மீண்டும் ஒரு முறை வீரத்தை நிலை நாட்ட நல்லதோர் வாய்ப்பு. இமயத்திலே பொறித்திருக்கும் நம் சின்னங்களைப் பழித்தார்களாம் சிறுமதி கொண்டோர் சிலர்! புலியைக் கேலி செய்தான் போர் முனை காணாப் புல்லன்!'' என.

ஏற்கெனவே பராசக்தி, மனோகரா, இரத்தக்கண்ணீர் போன்ற வெற்றிப்படங்களினூடே இலங்கைத்தமிழ் வெகுஜனங்களிடையே திராவிட தமிழ்த் தேசியக் கருத்து நிலை நேரடியாகவும், மறைமுகமாகவும் பதியப்பட்டிருந்தது. இதன் பின்னரும் அன்னையின் ஆணை, மாலையிட்ட மங்கை, நாடோடி மன்னன், தாய் மகளுக்கு கட்டிய தாலி, சிவகெங்கைச் சீமை, மன்னாதி மன்னன் எனப் பல வெற்றிப் படங்கள் 1956 - 60 காலப்பகுதியில் 'தமிழருக்குத் தனிநாடு' என்னும் கருத்தினை மிக நேரிடையாகவே இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மனத்தில் ஊட்டலாயின. இப்படங்களின் மக்கட்திரள் ஈர்க்கும் வசனங்களும் பாடல்களும் தமிழ் பேசும் வெகுஜனங்களால் பெரிதும் விரும்பப்பட்டவையாகும். பண்டிதர்களின் இலக்கண நேர்த்தி எல்லைக்குள் கட்டுண்டிருந்த தமிழ் மொழி, மக்களிடம் சென்றடைந்து சீராட்டப்படலாயிற்று. உதாரணத்திற்கு அன்று பிரபலமான சில பாடல் வரிகள்-

''இந் நாடும் இன்மொழியும் என் அன்னை தந்தாள்!
...அந்நியர்கள் கொள்வாரோ? அடிமைகளோ நாங்கள். ஆர்த் தெழுவோம் பழம் பெருமை போர்முனையில் காண்போம்! வெற்றித் திருநாடே வீரத்தின் விளை நிலமே!'' -(மாலையிட்ட மங்கை)

''செந்தமிழே வணக்கம் - ஆதித் திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும் (செந்தமிழே)'' -(நாடோடி மன்னன்).

''வீரர்கள் வாழும் திராவிட நாட்டை வென்றவர் கிடையாது!
வேலும் வாளும் தாங்கிய மறவர் வீழ்ந்ததும் கிடையாது'' -( சிவகெங்கைச் சீமை)

''அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா!
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா! ''-(மன்னாதி மன்னன்)[5]

திராவிட நாட்டுப் பிரகடனம் செய்த நாடோடி மன்னன் எம் ஜி.ஆரின் சொந்த நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. அந்நிறுவனத்தின் சின்னம் உதயசூரியன். 1957இல் திரைக்கு வந்த சக்கரவர்த்தித் திருமகன் படத்தில் கதாநாயகன் எம்.ஜி.ஆரின் பெயரும் உதயசூரியன். இவையெல்லாம் தி.மு.கவின் சின்னத்தை பிரபலப்படுத்த செய்யப்பட்ட முயற்சிகள்.





தி.மு.கவின் உதயசூரியன் சின்னமே தமிழரசுக் கட்சியின்சின்னமாகியது.

இக்காலப் பகுதியில் மட்டக்களப்பிலிருந்து தமிழகத்திற்குப் படிக்கச் சென்ற இளைஞர் காசி ஆனந்தன். அங்கு சி.பா. ஆதித்தனாரின் (தினத்தந்தி, ராணி) 'நாம் தமிழர் இயக்கம், மற்றும் தி.மு.க.வின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பவற்றில் ஈடுபட்டுத் திரும்பியவர். கலைஞர் கருணாநிதி ''அவர் தமிழர் எழுச்சிக்குக் கிடைத்த தக்கதோர் படைக்கலன்'' எனகாசி ஆனந்தனைப்பற்றி அன்று குறிப்பிட்டார். கவிஞர் பாரதிதாசனாலும் பாராட்டப்பட்டார். காசி ஆனந்தன், இராசதுரை, மசூர் மௌலானா போன்ற தமிழரசுக் கட்சிப் பிரச்சாரகர்கள் பாரதிதாசன், வாணிதாசன், கண்ணதாசன், போன்ற அந்நாள்திராவிட இயக்கக் கவிஞர்களின் கவிதை வரிகளை மூலம் கூறாது மிகத் தாராளமாகவே எடுத்தாண்டு வடகிழக்குத் தமிழ் பேசும் மக்களை தமிழ்த் தேசியக் கருத்து நிலை வழி 'உணர்ச்சி' வயப்படுத்தினர்.

''பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில்வா! எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப் புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்! ''[6]

என்ற பாரதி தாசனின் கவிதை வரிகள் அடிக்கடி முழங்கின தமிழரசுக்கட்சி மேடைகளில்.

தாயின் சிறந்த தமிழ் நா டதனை நாம் ஆளுவோம்... வரிப்புலிகாள்! தாயகத்தை நாமடைவோம்!... வாரீர்![7]

என்பன போன்ற வாணிதாசனின் கவிதைகளும் காசியானந்தன் போன்றோரின் எழுத்திலும் பேச்சிலும் விரவி வந்தன.

1962இல் 'தி.மு.க' என்ற பெயரில் ஒரு இருவாரப்பத்திரிகை வெளியாயிற்று. அதன் பிரதான எழுத்தாளர் காசி ஆனந்தன்.[8]

திராவிட இயக்கப்போராட்டமும் இலங்கைத்தமிழர் உரிமைப் போராட்டமும் ஒன்றிணைய வழிசமைக்க வேண்டும் என அண்ணாத்துரைக்கு அறை கூவல் விட்டு அதில் முன்பக்கக் கட்டுரை வரைந்தார் அவர். அப்பத்திரிகையில் தான் பாரதிதாசன், வாணிதாசன் ஆகியோரது பாதிப்பில் காசி ஆனந்தன் எழுதிய 'மறக்குலம்' எனும் கவிதை வெளியாயிற்று. (10.07.1962)

''மறவர் படைதான் தமிழ்ப்படை
குலமானம் ஒன்றுதான் அடிப்படை
வெறி கொள் தமிழர் புலிப்படை
அவர் வெல்வார் என்பது வெளிப்படை''

என்பது அக்கவிதை.

மேற்கண்ட விடயங்களை நான் மேற்கண்ட சொன்முறையில் (Narrative Sequence) எடுத்துரைத்தமைக்கு ஒரு முக்கிய காரணமுண்டு. இன்று தமிழ்த் தேசியக்கருத்து நிலை (Tamil Nationalist ideology) பற்றி அரசியல் நோக்கிலும் ஆய்வு நோக்கிலும் பலவாதப் பிரதிவாதங்கள் நடைபெறுகின்றன. தமிழகத்தில் குணா, கருணா மனோகரன் 'நிறப்பிரிகை' பத்திரிகையினர் எனப்பலரும் தமிழ்த் தேசியத்தை அலசலுக்குட்படுத்தியுள்ளனர். ஆய்வு நோக்கில் அ. மார்க்ஸ் போன்றோர் இதன் பிரதிபலிப்பாக (?) தேசியம் பற்றிப் பொதுவாக மேலைத்தேயத்தார் கருத்தை அடியொற்றி எழுதவும் முனைந்துள்ளனர். இலங்கையில் தமிழ்த் தேசியக் கருத்து நிலை இன்று வெளிப்பட்டுள்ள விதமே இதன் பிரதான காரணங்களில் ஒன்று எனலாம்.

இலங்கையில் தமிழ்த் தேசியக் கருத்து நிலையை இக்காலகட்டத்தில் ஆராய வேண்டுமெனில் திராவிட இயக்கத்தை அதன் மூலங்களையும், பரிமாணங்களையும் பரிசீலனைக்கு உட்படுத்துவது இன்றியமையாதது என்பதைச் சுட்டவே - அதைச் சுருக்கமாகப் பதியச் செய்யவே - மேற்கண்ட விடயங்கள் மேற்கண்ட சொன்முறையில் எடுத்தியம்பப்பட்டன. இன்று வடகிழக்கில் மேலோங்கியுள்ள தமிழ்த் தேசியக்கருத்து நிலையின் இனமைய நிலை, தனித்தமிழ் நாட்டுப்பிடிவாதம், போர்முனைப்பு, வீரமரபுக் கலாசாரம், பாசிசம் என்பன போன்ற பல கூறுகளும் கருத்து விசைகளும் தமிழகத்திலேயே முதலிற் தேடப்பட வேண்டியவை என்பதும் இவற்றாற் தெளியும். இத்தேடலே இனிவரும் இதழ்களில் தொடரவுள்ள தமிழ்த் தேசியக் கருத்து நிலை பற்றிய இவ்வாய்வு.

(தொடரும்)

**அடிக்குறிப்புகள்.**

1. 'அறப்போர்' . கலைஞர் கருணாநிதி. முன்னேற்றப் பண்ணை, சென்னை. 4ம் பதிப்பு. 1953.
2. 'இனமுழக்கம்!'. கலைஞர் கருணாநிதி முன்னேற்றப் பண்ணை. சென்னை, முதற் பதிப்பு. 1951. ப.24.
3. 'அறப்போர்' ப.12-13.
4. 'இரத்தச் சுவடு' கலைஞர் கருணாநிதி. கலை மன்றம். சென்னை. முதற்பதிப்பு. 1953.ப.96
5. இது போன்ற தகவல்களை மிக விரிவாக 'அறந்தை நாராயணனின் 'திராவிடம் பாடிய திரைப் படங்கள்' நூலிற்காணலாம். N.C.B.H. சென்னை.1994.
6. பாரதிதாசன் கவிதைகள். தொகுதி 2. ப.113.
7. சிரித்த நுணா. வாணிதாசன். ப.65 - 66.
8. 'D.M.K. (Fortnightly) ஆசிரியர் வெளியிடுபவர் வசந்தா அப்பாதுரை எனக் காணப்படுகிறது. எனினும் பத்திரிகை முழுக்க காசி ஆனந்தனின் தனிக் கைவண்ணமே தென்படுகிறது.

## குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே...-11



# பண்பாட்டைப் போதிப்பது எப்படி?

பண்பட்ட சுபாவம் அல்லது பண்புடமை என்பது ஒருவரது இயல்பின் அல்லது சுபாவத்தின் தனித்தன்மை, அல்லது சமூக நடைமுறைத் தேர்ச்சி என்ற இரண்டினாலும் உருவாகலாம். குழந்தைகள், பண்பட்ட இயல்புடைய பெற்றோர்களை அடையாளங்காண்பதனூடாகவும், அவர்களை பின்பற்றுவதனூடாகவும் இதனை உள்வாங்கிக்கொள்கிறார்கள். எல்லா நிலைமைகளின் கீழும், பண்பட்ட விதத்தில் நடந்து கொள்வது பற்றிய கல்வியூட்டல், பண்பட்ட வித்திலேயே கற்பிக்கப் படவேண்டும். ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் இவ்வாறு நடந்து கொள்வதில்லை. அவர்கள் மிகவும் கடுமையான முறையிலேயே இதைப்போதிக்கின்றனர்.

ஒரு குழந்தை யாரிடமிருந்தாவது எதையாவது பெற்றுக்கொள்ளும் போது 'நன்றி' (Thank You) சொல்ல மறந்துவிடுகின்ற சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் பிறர் முன்னிலையிலேயே அதைச் சுட்டிக்காட்டுகின்றார்கள். இவ்வாறு நன்றி சொல்லுமாறு கூறுதல் ஒரு பண்பட்ட செய்கை அல்ல என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். தாம் விடைபெற்றுக் கொள்வதற்கு முன்பாகவே குழந்தைகளை 'போய்வருகிறோம்' (Good - Bye) என்று சொல்லுமாறு அவசரப்படுத்துகிறார்கள். ஒரு உதாரணம் இது:

ஆறு வயதுச்சிறுவனான றொபேர்ட்டிற்கு உறையிலிடப்பட்ட ஒரு பரிசுப் பொருள் கிடைத்தது. அதனுள் என்ன இருக்கும் என்றுஅறியும் ஆர்வத்துடன் அந்த உறையை அழுத்திப்பார்த்தான் அவன்.

**தாய்:** றொபேர்ட் விடு, அதை அழுத்தாதே.. நீ அந்தப் பரிசுப் பொருளை நாசமாக்கப்போகிறாய். ஒரு பரிசுகிடைத்தவுடன் நீ முதலில் என்ன சொல்லவேண்டும்?

றொபேர்ட்: (கோபத்துடன்) 'தாங்க்யூ..'

தாய்: அதுதான் நல்லபிள்ளைக்கு அழகு.

தாய் இந்த பண்பாட்டை இன்னும் சிறப்பாக, பண்பாடான முறையில் கற்பித்திருக்க முடியும். தாய் இப்படிச் சொல்லியிருக்கலாம்:

''இந்தப் பரிசைத் தந்தந்தற்கு தாங்க்யூ... ஆன்ரி''

இத்தகைய ஒரு வார்த்தை றொபேர்ட்டையும், இதைத் தொடர்ந்து அவனது சொந்த நன்றியைத் தெரிவிக்க வைத்திருக்கும். அப்படி அவன் சொல்லாவிட்டால், பின்பு தனியாக இருவரும் இருக்கும் போது இப்படி நன்றி கூறும் சமூகப் பண்பாடு பற்றி கற்பித்திருக்க முடியும். உதாரணமாக, தாய் இப்படிக் கூற முடியும்:

அந்த ஆன்ரி உனக்கு ஒரு பரிசு கொடுத்து ஒரு முக்கியமான விடயம் அல்லவா? நாம் அவருக்கு நன்றிகூறி ஒரு கடிதம் எழுதுவோம். நாம் அவரை நினைத்தோம் என்று அவர் சந்தோஷப்படுவார்''

நேரடியான ஒரு கண்டனத்தை விட இது சிக்கல் மிகுந்த ஒன்றுதான் என்றாலும் மிகவும் சிறந்த பயன் விளைவினைத் தரவல்ல ஒன்றாகும். வாழ்க்கை முறையென்றும் கலையின் இத்தகைய அம்சங்கள் சம்மட்டியால் அடிப்பதன் மூலம் போதிக்கப்பட முடியாத வைகளாகும்.

சிறுவர்கள், பெரியவர்களது உரையாடல்களின்போது, இடையில் புகுந்து குழப்பும் விதத்தில் பேசும் போது பெரியவர்கள் அதை மிகவும் கோபத்துடன் எதிர்கொள்கிறார்கள்:

''இப்படி இடையிலே பூராதே... இவ்வாறு குழப்புவது பண்பு கெட்ட வேலை''

ஆனால், எப்படியாயினும், இடையிலே குழப்புவரை குழப்புவதும் கூட பண்பு கெட்ட செயல்தான்! பிள்ளைகளுக்கு பண்பாக நடந்து கொள்வதை போதிக்க பண்பற்ற முறைகளை பெற்றோர்கள் பயன்படுத்தக்கூடாது.

இச்சந்தர்ப்பங்களில் இவ்வாறு கூறுவது பொருத்தமாக இருக்கும்:

''நான் என்னுடைய கதையை முடித்துவிட விரும்புகிறேன் பிறகு நீ உனது கதையை தொடங்கலாம்''.

குழந்தையை பண்பற்று நடப்பதாக கூறுவதன் மூலம் எந்த நல்ல நோக்கங்களையும் நாம் அடைந்து விடுவதில்லை. நாம் எதிர்பார்ப்பது போல அது அவர்களை பண்பட்ட தன்மையை நோக்கி நகர்த்துவதும் இல்லை! இதில் உள்ள ஆபத்தான விடயம் என்னவென்றால், குழந்தை தன்னை ஒரு பண்பற்ற குழந்தை என்று கூறும் எமது மதிப்பீட்டை அது நம்புவதுடன் தன்னைப்பற்றிய தனது சொந்த இயல்பின் ஒரு பகுதியாகவும் அதை மாற்றிக்கொள்ளத் தொடங்கி விடுகிறது என்பதுதான் . அது தன்னை தான் ஒரு பண்பு கெட்ட குழந்தை என்று நினைக்க தொடங்கியவுடன், அதற்கேற்ற விதத்தில் நடந்து கொள்ளவும் தொடங்கிவிடுகிறது. 'பண்பு அற்ற குழந்தைகள், பண்பு கெட்ட விதமாக நடந்து கொள்வது தானே இயல்பானது!'

நண்பர்களதும், உறவினர்களதும் வீடுகளுக்கு விருந்தினராகப் போவது குழந்தைகட்கு பண்பட்ட பழக்க வழக்கங்கள் பற்றி விளக்க கிடைக்கின்ற சந்தர்ப்பங்களாகும். இத்தகைய விருந்தாகச் செல்லும் நடவடிக்கைகள் குழந்தைகட்கும் பெற்றோர்க்கும் சந்தோஷமளிப்பதாக இருக்க வேண்டும். இது எப்போது சாத்தியமென்றால், குழந்தைகளது பழக்க வழக்கங்களுக்கான பொறுப்பு குழந்தையையும் வரவேற்று உபசரிப்பவரையும் பொறுத்தாக இருக்கும் போதேயாகும். (எமது உதவியெல்லாம் குழந்தையின் விருப்பங்கள்ளயும் உணர்வுகளையும் விளங்கிக் கொள்வதை வெளிப்படுத்துவதுடன் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.)

குழந்தைகள் பிறருடைய வீடுகளில் வைத்து தம்மைக்கண்டிக்க நாம் விரும்ப மாட்டோம் என்பதை புரிந்து கொள்கிறார்கள். இதைத்தெரிந்து கொண்டு இத்தகைய இடங்களை அவர்கள் தாம் விரும்பிய படி நடக்கப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இந்தத் தந்திரத்தை விருந்தோம்புவரால் கட்டுப்படுத்த முடியும். அவர் தனது வீட்டின் சட்டதிட்டங்களை அறிவித்து அதை நடைமுறைப் படுத்துமாறு கோருவதன்மூலம் இதைச் செய்யலாம். மேரி ஆன்ரியின் வீட்டுச் சோபாவில் ஒரு குழந்தை துள்ளும் போது, அப்படித்துள்ளலாமா இல்லையா என்பதை மேரி ஆன்ரியே தீர்மானிக்க வேண்டும். அவர் அதன் எல்லையை குறிப்பிடலாம். பொதுவாக வெளியார் கட்டுப்பாடுகளை விதிக்கும் போது பிள்ளைகள் பெரும்பாலும் கட்டுப்படத் தயாராக இருப்பர். தாய், கட்டுப்படுத்தும் கடப்பாட்டிலிருந்து விடுபட்டவராய், குழந்தைக்கு தனிப்பட்ட முறையில் அவற்றைச் சொல்லி உதவ முடியும். 'இவையெல்லாம் இங்குள்ள சட்டதிட்டங்கள்'

இந்த நடைமுறை, விருந்தேம்புவருக்கும், விருந்துக்கு வந்திருப்பவருக்கும் இடையே எந்தெந்த விடயங்களில் தாம் பொறுப்புள்ளவர்கள் என்ற உடன்பாடு இருக்கும் பட்சத்தில் மட்டுமே சாத்தியப்படும். தனது வீட்டின் சட்டத்திட்டங்கட்கேற்ப இருக்குமாறு கோருவதற்கு விருந்தோம்பும் ஒருவருக்கு உரிமையும் பொறுப்பும் இருக்கிறது. விருந்துக்கு வந்திருக்கும் தாயாரோ/ தகப்பனாரோ தமது 'கட்டுப்படுத்தும்' கடமையிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பது அவர்களது பொறுப்பு ஆகும். இந்த விடயத்தில் போதியளவு தலையிடாமல் இருப்பதன் மூலம் பெற்றோர், உண்மையான நிலைமையை குழந்தை புரிந்து கொள்ள உதவ முடியும்.

அடுத்த இதழில்: சுதந்திரமும் பொறுப்புணர்ச்சியும்

**ஆங்கிலமூலம்:**
**டொக்டர் ஹெய்ம் ஜீ ஜினோல்ட்**
**தமிழில்: அருண்**




*பாங்கொலி ஓய்கிற போதெலாம்*
*அந்த தென்னஞ் சோலைக் கிராமத்தில்*
*ஓங்கி ஒலிக்கிறது*
*அந்த வேப்பமரத்தின் அழுகை ஒலி.*
*தேற்றுவரில்லை.*
*நேற்று நடந்ததை யாவரும் மறந்தனர்.*
*இன்று வந்தவர், பிறந்தவர்களுக்கு*
*நேற்றைய கதைகளைச் சொல்வாருமில்லை*

*அந்த போடியாரின் பெண்கள் இப்போ*
*எந்த வீட்டின் வாசற்படியிலும் குப்பைகொட்டலாம்.*
*அந்தப் போடியாரின் முன்னே இப்போ*
*வயல்காரர்கள் நிமிர்ந்திட அஞ்சினர்*
*எனினும் அந்த வேம்பின் கண்ணீர்*
*நல் மனசுகளில் வேர் விடுகிறது.*

*அந்தப் போடியார் பள்ளிக்குப் போகிறார்.*
*அதிகாரிகளுடன் மதுவிருந்தாடி*
*மனசுள் தன்னை எதிர்ப்பவர்களையும்*
*அச்சுறுத்துகிறார்.*
*சட்டிக்குத்தப்பி நெருப்புள் விழுந்த*
*அந்த ஊரின் சந்தியில் நின்று*
*அழுகிறது வேப்பமரம்.*

*நீதி செத்த அந்தப் பகலில்*
*போடியாரின் வெறுப்பைச் சுமந்ததால்*
*தமிழ் போராளிகளுக்கு தண்ணீர் தந்ததே*
*குற்றமாய்ச் சுமந்து*
*வெள்ளைச் சேலை முக்காடிட்ட துக்கமாய் குந்தி*
*'அல்லா...' என்று கண்ணீர் சிந்திய மரியத்துக்கு*
*நிழற் குடை பிடித்த அந்த வேப்பமரம்*
*டயரும் பிணமும் எரிகிற வாடையில்*
*காற்றே குமட்டி வாந்தி எடுத்த*
*அந்த இரவில் அழத் தொடங்கியதாம்.*

*ஏன் அழுகிறாய் வேப்பமரமே*
*நீதி கேட்டாயா*
*அல்லது எங்கள் மரியம் ராத்தாவின்*
*தண்ணீர் குடித்து உப்பைத் தின்றவர்கள்*
*அவளது சடலம், எரிந்த டயரில் நீட்டிக்கிடந்த சாம்பர்*
*கலைவதன் முன்னமே*
*பள்ளிவாசலில், தெருக்களில் இறங்கி*
*அவளது உற்றார் உறவினர் மீது*
*.செய் நன்றி கொன்ற பாதகம் நினைந்தா?*

வ.ஐ.ச. ஜெயபாலன்



# எங்களுக்குக் கூசுது.!

## எதிரின் எதிர்வினை

குறியீட்டு நாடகங்களை நாம் பெரும்பாலும் அளித்திருப்பதனால், அதைப் பறிய கேள்விகளுக்கும் விடைகளைத் தேடுவது அவசியமாகின்றது. இத்தேடலில் அரசியல் கோட்பாடுகளை ஆராய்வதும், வினாக்களை எழுப்புவதும் தவிர்க்க முடியாதது.

மாற்றுக் கருத்துக்கள் கேள்விகளினூடே வெளியாவதும், இருக்கும் வெகுஜன அபிப்பிராயத்தை கேள்விக்குள்ளாக்குவதும், புதிய வெகுஜன அபிப்பிராயத்தை கேள்விகளினூடே முன்வைக்க முனைவதும் எங்கள் அரங்க அளிக்கையின் வடிவம். ஆதலால், எங்கள் நேர்மையையும் கேள்விக்குள்ளாக்குவது டி.வி.ஆர்.எஸ் இனதும் எம் கருத்தை வெட்டிநிற்பவர்களினதும் கடமை ஆகின்றது.

எங்களின் அபிப்பிராயப்படி ஒரு தேசத்தின் 'அடித்தள அமைப்புத்தான்' சமூக உறவு, தனிமனிதஉறவு, கலாசாரம், பண்பாடு, யாவற்றையும் தீர்மானிக்கின்றது. அந்த அடித்தளம் என்பது பொருளாதாரக் கருதுகோளா அல்லது பொருளாதார அரசியல் மத உறவுகள் என்பன கலந்த அடித்தளமா? என்பதனை இன்னும் நாங்கள் முடிந்த முடிவாகக் கருதவில்லை. இதைப்பற்றி இன்னும் ஆராய வேண்டியுள்ளது. எனவே சமூக உறவுகள், கலாசாரம், தனிமனிதஉறவுகளை தீர்மானிக்கும் பாரம்பரிய கோட்பாடுகளுக்கு (Traditional Concept) புறம்பானவை நச்சுக்கருத்துக்களாயும், சிலவேளை மாற்றுக்கருத்தும் (Alternative Opinion) பிரதான மையக்கருத்தானவுடன் (Mainstrem Opinion) அதற்குப் புறம்பானது நச்சுக்கருத்து எனவும் 'குறுகிய' சமூகவியலாளர்கள் தீர்மானிக்கின்றனர். ஒரு சமூக அடித்தளத்தை தொடர்ச்சியான இயங்கியல் சக்தியாக நோக்குவோர் (அதாவது நிலையானதாக இல்லாதவாறு) இவைகள் கேள்விகளாலும் தேடல்களாலும் மேலாக இவற்றிற்கூடாக வரும் அரங்க தரவுகளை விஞ்ஞானரீதியாக ஆராய்வதினூடாகவுமே தீர்மானிக்கப்படுகின்றது, எனக் கொள்கின்றனர்.

ஒரு கருத்துக்கு இயங்கியல் சக்தியுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என எங்களுடைய ஆராய்வினூடே நாம் முடிவுக்கு வந்திருக்கிறோம். இந்தக் கருத்து மானிடத்தை உயர்த்தும் நோக்கில் தான் திசை திருப்பப்பட வேண்டும். எது மானிடம் என்பதும் அதன் முற்போக்கான நகர்வு எது என்பதும் மேற்கூறிய கோட்பாடுகளால்தான் தீர்மானிக்கப்படவேண்டும். மாறாக நாலு பேருடன் வெள்ளவத்தையிலோ, சுண்டுக்குளியிலோ கதைத்தல்ல, மாளிகைக்குள்ளிருந்தோ, பங்கருக்குள்ளிருந்தோ வெளியாகும் அறிக்கையாலுமல்ல. மாறாக வழமையானவை கேள்விக்குள்ளாகும் போது புதியன தோன்றும்.

எனவே நச்சுக்கருத்தென்பது ஒரு நாடகத்தில் உள்ளதா என்பது கேள்விகளால் ஆராயப்பட வேண்டும். மாறாக மாற்றுக் கருத்துக்களெல்லாம் ஒரு தளத்தில் இருப்பவருக்கு நச்சாகத் தோன்றுமாயின் சகிப்புத்தன்மை என்பதே ஒரு சமூகத்தில் அற்றுப்போகும்.

எங்கள் அளிக்கைகள் தேடலுக்கும், ஆய்வுக்குமான அரங்கு. இங்கு தேடலுக்குப் புத்துயிர் அளிக்க அளிக்கையில் எழுப்பப்படும் கேள்விகளை Reinforce பண்ண அளிக்கை முடிவில் கேள்விகளை எழுப்பி தேடவைக்க முனைகின்றோம். (உதாரணமாக கொள்கரி). எனினும், இந்த முறையில் கலந்துரையாடலும், தேடலும், நிகழாததால் கேள்விக் கொத்துக்களை ஓ..ஓ..விலும், -1 இலும் கொடுத்தோம். டி.வி.ஆர்.எஸ்.களின் அரங்கை விட இந்த அரங்கு வித்தியாசமானது. ஏன் எதிர்பார்த்த கலந்துரையாடல் நிகழவில்லை என்பதை மனங்கொண்டே வினாக்கொத்தைக் கொடுத்தோம். அரங்க அளிக்கையில் வினா எழுப்ப முடியாது என்பதல்ல. அப்படியாயின் டி.வி.ஆர்.எஸ். கூறுவாரா -1ல் கேள்வி எழுப்பத் தவறியது எங்கு என்று? 'ஈர்க்குத் தலைகளி'ல் வெற்றுப்பேப்பரைப் பங்காளிகளிடம் கொடுத்தோம். அவர்கள் புரிந்ததை, எங்களை நோக்கி கேள்விகளை எழுதச்சொல்லி. பங்காளிகள் சிரித்துவிட்டு, புகைத்துவிட்டு, செல்ல அரங்க அளிக்கைக்கு வருவதில்லை. அவர்களை விசிலடிச்சான் குஞ்சுகளாக நாம் கருதவில்லை.

ஒருசில நாடக விற்பன்னர்கள் / விமர்சகர்களின் நெஞ்சில் உருவான கருத்து' -1 ஒரு வானொலி நாடகம் என்பது. ஒருவரின் எழுத்தை விமர்சிக்கிற போது, அவரை மீண்டும் மீண்டும் எழுது என்ற வகையிலும் விமர்சிக்கலாம். 'அவரும் அவற்ற எழுத்தும்' என்ற வகையில் விமர்சித்து கைக்கடக்கமான பெட்டிக்குள் அடித்துப் போட்டும் விடலாம். நாம் சென்ற முறை குறிப்பிட்டது போல, வரையறைகளுடன் பிரவேசித்தவர்களுக்கு அதிர்ச்சிதான். அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு கேள்வியை எழுப்பலாம். ஏமாந்தது நானா? அல்லது -1 ஏமாற்றியதா? என்று. நடிகர்கள் மேடை முழுக்க ஒடிப்பிடித்து விளையாடி வசனம் பேசி செய்யும் அளிக்கை தான் அளிக்கையா? இருந்து, படுத்து, கை, காலை வீசிச்சொன்ன உடல், மொழி ஒன்றும் அர்த்தம் கற்பிக்கவில்லையா? ஒரு வேளை பேர்களில் கொம்பு முளைத்தவர்கள் அளித்திருந்தால், 'சிவனே' என்று பதிகம் செய்வாரோ என்னமோ?

இந்தக் குறியீட்டு அரங்கு மற்ற அரங்குகளை விட மூளைச்சலவையை மிகக்கூடிய அளவுக்குக் குறைத்துள்ளது. (இது சம்பந்தமாக சரிநிகர் இதழ் 97ல் ஆராய்ந்துள்ளோம்) இங்கு ஒரு முடிவு சொல்லப்படுவதில்லை. ஓ..ஓ..வில் பங்காளி ஒருவர் 'என்ன முடிவு சொல்லுங்கோ' எனக் கத்தினார். இவர் தனித்தோ / கூட்டாகவோ தீர்வு எடுக்கத் தயாரில்லை. இப்போது குறியீட்டு நாடகத்தில் முடிவுள்ளது எனக்கூறினால் அது முரண்பாடு இல்லையா? இந்த அளிக்கைகள் மூளையைச் சலவை செய்கிறது என்றால் அதனை எப்படிக் குறைக்கலாம் எனதயவுசெய்து கூறுங்கள். யதார்த்தத்திற்கு அப்பால் எழுப்பப்படும் கேள்வியான 'வித்து' என்பது சேரியலிச (Surrealistic) அரங்க வடிவமானதாயும் இருக்கலாம். அப்படியாயின் இவ் அரங்கை ஏன் நிராகரிக்கின்றீர்கள்? அதுவும் நஞ்சுக் கருத்தா?

வழிகாட்டி ஒருவரோ, இருவரோ... ஒரு அளிக்கையில் இருந்தாலும் அவர்களுக்கு நாடக இயக்குநருக்கான சர்வ வல்லமையும் கொண்ட அரங்க அதிகாரம் கிடையாது. மூன்றடி முன்னே வா, பின்னே போ, என்றோ இந்த இடத்தில் இந்த வசனத்தை இப்படிப் பேசு' என்றோ, கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளிப்பதற்காகப் பயிற்றுவிக்கப் படுவதைப் போலல்ல இது. அளிக்கையின் பங்காளிகள் அனைவருமே நகர்வையும் வசனங்களையும் ஒன்றாகத் தீர்மானிப்பர். மூலக்கரு ஒருவராகத்தான் மட்டும் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இருவராயும் ஏன் மூவராயும் இருக்கலாம். அதைப்பற்றிக் கேள்வி கேட்க எல்லா அதிகாரத்தையும் பங்காளி கொண்டிருப்பான். அது எவ்வாறு திசைப்படுத்தப்படும் என்பதனையும் மாற்றவும், திருத்தவும் பங்காளிக்கு அதிகாரம் உள்ளது என்பதனை இந்த அரங்கு வலியுறுத்துகின்றது.

எமது ஒவ்வொரு அளிக்கைகளுக்கும் சுவாரசியமான வரலாறு உண்டு. -1 ஐச் சுருக்கமாகப் பார்ப்போம். (எல்லா ஆய்வையும் தேடலையும் ஒரே தடவையில் சொல்லப்போனால் சரிநிகரின் பக்கங்கள் போதாது) இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் தோன்றிய ஒரு மூலக்கரு 'மிருகத்தை மனிதன் சித்திரவதை செய்வது'. இதனைப் பலருடன் கதைத்து சிறிது காலத்தின் பின் 'கழுகு புறாவை சித்திரவதை' செய்வது என மாற்றினோம். பின் 'ஒருவன் புறாவை சித்திரவதை' செய்வது என்று மாறியது. இவ்வாறு காலம் செல்லச் செல்ல 'ஒருவன் ஒரு ஜீவனை சித்திரவதை' செய்வது என்பதில் இருந்து ஒத்திகையை ஆரம்பித்தோம். ஒத்திகையின் போது காரசாரமான வாதப்பிரதிவாதங்கள். குழம்பிய நிலையிலும் அளிக்கையினை எவ்வாறாவது அளிப்பது என்ற வன்மம் எல்லோர் மனங்களிலும் குடிகொண்டிருந்தது. அரங்க அளிக்கையின் சில நாட்களுக்கு முன்னர் கூட அளிக்கையில் இருந்து நாம் எல்லோரும் நழுவி தனிப்பட்டவர்களையும் தாக்கி... ஏதோ மொத்தப் பங்காளிகளின் நல்லகாலம், மண்டபம் பணக்கஷ்டத்தின் மத்தியிலும் பதிவு செய்தாகிவிட்டது. இந்நிலையில் விட்டுக்கொடுப்புக்களுடன் அரங்க அளிக்கைக்கு வந்தோம். இதற்கும் புறம்பான ஒரு ஜனநாயக அரங்கு இருந்தால் அதையும் நாம் நேர்மையுடன் தேடுவோம்.

நாம் மீண்டும் பூரணமாக நம்புகிறோம். மானிடத்தில் கொள்கை ரீதியாக நம்பிக்கையுள்ளவர்கள் நாம். ஆதலால் இந்தப்பட்டறையில் சேர்கிறோம். மாறாக தடைகளை அகற்றுவதற்காக அல்ல. சொன்னதை திரும்பச் சொல்வோர் எண்ணிக்கை பட்டறையில் 10 ஆக ஒன்று சேர இங்கு நாம் பாலகருக்கு பாட்டுப் பயிற்சியோ, இராணுவப் பயிற்சியோ அளிக்கவில்லை. கிளிக்கு பேச்சுக் கற்றுக்கொடுக்கவுமில்லை. எத்தனையோ பச்சிளம் பாலகர்கள் நஞ்சைக் கடித்து தாமும் மாண்டு சமூகங்களின் எல்லா அத்திவாரங்களையும் மாய்க்கும் போது டி.வி.ஆர்.எஸ். உம் அவரை ஒற்றியவர்களும் -1 இல் பாலகனுக்கு நஞ்சூட்டியதை கேள்வி எழுப்பியதால் மிகவும் சந்தோஷம் அடைகின்றோம். இவர்களின் பார்வை விரிந்து சகல எசமானர்களையும் நோக்கி என்றோ ஒரு நாள் கேள்வி எழுப்புவார்கள் என்று நம்புகிறோம்.

மேலும் பாலகருக்கு (பங்காளிகளுக்கும்) வசனங்களை மாற்றவும் கேள்வி எழுப்பவும் உரிமையுள்ளது, கேள்விகள் சொந்த அனுபவங்களிலிருந்தே எழுகிறது. எம் அனுபவங்களை திணிப்பதாலல்ல. மேலும் வெளிவரும் வசனங்கள் அகபுற, எசமானர்களைக்கருதி சுயதணிக்கையின் அடிப்படையில (Self censorship) வெளிவருகின்றன.

நீங்கள் சொன்னதால செய்தன். பிறகு தப்புறதுக்காகச் செய்தன். திரும்ப அவன் செய்து போடுவான் என்ற பயத்தில் செய்தன். இப்படியே.. என்ர காலம் பூராவும் செய்யிறதோ? (இது -1இல் வரும் உரையாடல்) என்பது நஞ்சாயின் டி.வி.ஆர் எஸ்.களின் எதிர்வினை என்ன?

கேள்வி எழுப்புவது தெரியததாலா அல்லது சோதிப்பதற்காகவா என்பது ஒவ்வொரு பங்காளியினதும் தளத்திலிருந்தே தீர்மானமாகும். சோதிப்பது ஆயின், அந்தப்பங்காளி (பெண்) தப்பத்தான் முயற்சிப்பார் என்பது ஒன்றும் புதிதல்லவே! எங்கள் சமூகத்தில் அப்பியிருக்கும் பயம் ஒரு காரணியாக இருக்க முடியாதா?

இங்கே உதவி விஞ்ஞானி ஒன்றும் புரியாமல் திரும்பத் திரும்ப ஆராய்ச்சி செய்தாரோ அதே போன்று இன்று டி.வி.ஆர். எஸ்.களும் ....

திறந்த சந்தையில் கருத்துக்களை பகுத்துணரும் நிலை எல்லோராலும் எப்போது எட்டப்படும்? யார் தீர்மானிப்பது? டி.வி. ஆர்.எஸ்ஸா? பணபலம் கொண்டவர்களா? தசைப்பலம் கொண்டவர்களா? கருத்துப்பலம் கொண்டவர்களா? அல்லது ஆயுதக்கூட்டணிகளா? இல்லை என்பது எங்கள் கருத்து. இதற்கான திறந்த விவாதத்தை நடாத்தத் தயாராய் இருக்கிறோம். மேற்கோள் காட்டிய அறிஞர்களை குறிப்பிடுவது அபத்தம் என்றால், தமக்குப் புரியவில்லை என்றால், அபத்த அளிக்கை அரங்கு எவ்வாறு வளரும் என இவர்கள் கூறட்டும்?

எனவே நச்சுக்கருத்தை இனம் காண்பது சமூகக் காரணிகளிலும், சமூக ஓட்டத்திலும் தங்கியுள்ளது. நச்சுக்கருத்தை இனம் காண்பதும் தடுப்பதும் என்பது மாற்றுக் கருத்துக்களை சந்தையில் அனுமதித்து விவாதித்து தேடல் மூலமும் அரங்கப்பங்காளிகளை சுதந்திர சிந்தனை கொண்டவர்களாகவும், பகுத்துணர்வு கொண்டவர்களாகவும் அவர்களது ஆளுமையை வளர்ப்பதாலும்தான் சாத்தியமாக்கலாம். இதற்காகவே இந்த ''மக்கள் அரங்குகளை'' நிகழ்த்துகிறோம். மாறாக தடைசெய்வதாலோ ஒற்றர் வேலை செய்வதாலோ அல்லது அங்கீகாரம் தேடுவதாலோ நச்சுக்கருத்துக்களை தடுக்க முடியாது.

மக்கள் அரங்குகள் மட்டும் தான் மக்களது கருத்துத் தளங்கள். மாறாக பாராளுமன்றங்களோ மத்தியகமிட்டிகளோ, காட்டு விவாதங்களோ கருத்துத்தளங்கள் அல்ல. இவர்கள் தங்களுக்கு விளங்காததால் மக்களுக்கு விளங்காது என்கிறார்கள். பேராசியர்கள், புத்திஜீவிகள், புத்தகப் பூச்சிகளாவும், எப்போதும் தப்பும் நோக்கம் கொண்டவர்களாகவும் இருப்பதால் அவர்களுக்கு அளிக்கைகள் விளங்குவதில்லை. ஆனால், சாதாரண மக்கள் பிரச்சினைகளால் சூழப்பட்டவர்கள். ஆதலால் அவர்களுக்கு எங்கள் அளிக்கை புரிந்து விடுகின்றது. சூழலின் அனுபவங்களும், நடைமுறைகளுமே குறியீட்டு அளிக்கைகளின் புரிதலை ஏற்படுத்தும் என்பது எங்கள் கருத்து.

கொள்கரி தேறாது என்றால், ஏன் டி.வி. ஆர்.எஸ். அரங்கநாயகம் (M.A.) அவர்களின் விமர்சனத்திற்கு பதில் அளிக்கவில்லை. இப்பவும் டி.வி.ஆர்.எஸ். காரணிகளை எழுதலாம். தேறாது என்றால், பேராதனையிலும் புதிய கதிரேசன் மண்டபத்திலும் மேடையேறிய 'வரும்' நாடகம் கொள்கரியின் தாக்கத்தில் எழவில்லையா? ஏன் றோயல் கல்லூரியிலும், பம்பலப்பட்டி இந்துக் கல்லூரியிலும் மேடையேறிய நாடகங்கள் கொள்கரியின் தாக்கத்தை உள்வாங்கியிருந்ததே. இது புதிய அரங்க அளிக்கைக்கு வழி திறந்து விடவில்லையா? டி.வி.ஆர்.எஸ். களினது நாடகங்கள் மட்டும் தேறும் என்றால் பல்கலைக்கழக பேராசியர்களைக் கொண்டு ஒரு வரலாற்றுப் பதிவை ஏற்படுத்திக்கொள்ளட்டும். கொள்கரியின் உச்ச வடிவங்களை 94இற்கு பிறகு ஓ.. ஓ... விலும், ஈர்க்குத் தலைகளிலும் பின்பற்றினோம். இரண்டு வருடத்தின் பின் தான் -1 இனை நிகழ்த்தினோம்.

பின் பங்காளிகளிடமிருந்து எழுந்த கேள்விகளால் அதன் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் மாற்றத்தை தேடலுக்குட்படுத்தினோம். அரங்க அளிக்கை ஒடித்திரிவதால் அல்ல. இருந்து கொண்டும், படுத்திருந்தும் அரங்க மொழிகளாலும் அளிக்கலாம் என்பதனை பரிசோதனைக்குள்ளாக்கினோம். இது ஒரு அனுபவம். இதிலிருந்து இதற்கு கீழாகவோ, மேலாகவோ படைக்கலாம். கொள்கரி, -1 போன்றவை புதிய அரங்க வடிவங்கள் என்பதால், சில இடைவெளிகள் தோன்றும். அதைத் தேறாதது என்றால், பரிசோதனைகள் செய்வதையே கைவிட்டுவிடவேண்டியதுதான். பழைய மரபையே பின்பற்றினால், இடைவெளிகள் வராது. உடைப்புக்கள் ஏற்படினும், 'தேறாது, எட்டாது, விளங்காது, வானொலி நாடகம் என்கிற சொற்களைப் போட்டு நிரபபவேணடியது தானே. பழைய கோட்பாடுகளைக் கொண்டு அளக்கும் போது இந்தப் புதிய அளிக்கைகள் தேறாததாகத் தான் இருக்கும். ஆனால், நாங்கள் பழைய கோட்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்குகின்றோம்.

மாற்றுக் கருத்தும் கருத்துச் சிந்தனையும் இனிவரும் பரம்பரைக்கும் சொந்தமாக வேண்டாமா? சகிப்புத்தன்மை அற்ற சமூகமாவோ, மாற்றுக் கருத்தை மறுக்கும் சமூகமாகவோ, தடைசெய்யும் சமூகமாகவோ ரி.வி.ஆர்.எஸ்கள் மாற்ற விரும்பினால்,

- பிரேதப் பெட்டிகளில் எங்களை வைதது கடைசி ஆணியையும அடியுங்கள்.
- எங்களது மூளைக்கலங்களை பிண்ணாக்கு ஆக்குங்கள்
- மனோநோய் வைத்தியர்களை எல்லாத் தெருக்களிலும் நிறுத்துங்கள்

இந்த எழுத்துருவம் எங்களது அரங்க அளிக்கைகளை நியாயப்படுத்தவோ, தற்பாதுகாக்கவோ எழுந்ததல்ல. அப்படித் தோன்றினால், முடிந்த முடிவாகக் கருதாமல் சிந்தை இரங்குங்கள்.

நல்ல படைப்பா இல்லையா என்பதோ வரலாற்றில் பெயர் பதிக்கவேண்டுமென்றோ, படைப்புகள் சாகாவரம் கொண்டு நிலையாக வாழ வேண்டும் என்றோ நாம் சிந்திக்கவுமில்லை, விதிகளைத் தேடவுமில்லை.

ஒரு துளி சிந்தனையை வரும் பரம்பரைக்காக சிந்த விளைந்தோம்.

வெவ்வேறு தளங்களிலிருந்து கருத்து புரிதல் உருவாக்கும் குறியீட்டு அளிக்கைகள் மானுட சமூகத்தின் ஆளுமையை வளர்க்கின்றதா? சிதைக்கின்றதா? என வினா எழுப்பி இதனை முடிக்கிறோம்.

**-1ல் இருந்து பங்காளிகள்**

# யுகங்களை விழுங்கிய கணங்கள்

மு.பொவின்

*மு.பொ. என்றழைக்கப்படுகின்ற மு. பொன்னம்பலம் அவர்கள் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்கு மேலாக படைப்பிலக்கியத்திலும் விமர்சனத்துறையிலும் தடம் பதித்து வருபவர். 80களின் இறுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்த வெளிவந்த திசை என்ற வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தவர்.*

*''கலை இலக்கியம் பற்றிச் சொல்வதானால், இவற்றின் உருவ உள்ளடக்கங்கள் பாரிய மாற்றத்திற்கு உள்ளாகப் போகின்றன. அதற்குக் காரணம் மொழியில் ஏற்படப் போகும் மாற்றம். இந்த மொழியில் ஏற்படப்போகும் மாற்றம் என்பது ஒவ்வோர் கலைஞனும் எதிர்கால மனித வளர்ச்சிபற்றி எடுக்கப்போகும் மாற்றம் பற்றிக்கொண்டுள்ள தரிசனத்தைப் பொறுத்தே துரிதமடையும்'' என்று கலை இலக்கியம் பற்றியும்,*

*''நான், இன்றுள்ள கவிதை, கதை, நாவல்,கட்டுரை என்னும் வழமையான ஊடகங்களை உடைத்து எனது கலை நோக்கை வெளிக்கொணர முயல்பவன். இச்சிறுகதைத் தொகுதியே பல கால உறைபோடலுக்குப் பின்னர் வெளிவருகிறது'' என்று தனது படைப்புக்கள் பற்றியும் குறிப்பிடும் மு.பொ. அவர்களது 'கடலும் கரையும்'' என்ற முதலாவது சிறுகதைத் தொகுதி மிக நேர்த்தியான- அழகான வடிவமைப்புடன் வெளிவந்திருக்கிறது. இத்தொகுதியில் அவர் 1963இல் எழுதிய 'முடுபனி' என்ற கதையிலிருந்து 1995இல் எழுதிய இருப்பின் அடையாளம் எது? அடையாளத்தின் இருப்பு எது? என்பது வரையான 11 சிறுகதைகள் உள்ளன.*

*அது (கவிதை), விடுதலையும் புதிய எல்லைகளும் 1985, விலங்கை விட்டெழும் மனிதர் 1986, யதார்த்தமும் ஆத்மார்த்தமும், (கட்டுரைகள்) 1992, என்பன எனைய அவரது நூல்கள். கீழுள்ள கதை கடலும் கரையும் என்ற இத்தொகுப்பிலிருந்து நன்றியுடன் பிரசுரமாகிறது.*

*ஆ-ர்*

'மாஸ்ரர், உங்கட பிரச்சாரம் எல்லாம் எப்பிடிப் போகுது?''

யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவை நோக்கி ஓடிவந்த பஸ், அராலிச் சந்தியில் திடுதிப்பென்று தலையை முன்னால் குத்துவது போல் எகிறிவிழுந்து நின்றது. அதன் யந்திர ஒலி அடங்குவதற்கு முன்னரே, அப்பிரதேசத்தையே நிசப்தமாக்கி உள்ளதிர வைப்பதுபோல் அவனை நோக்கி எழுந்தது அந்தக் குரல்.

''மாஸ்ரர், உங்கட பிரச்சாரம் எல்லாம் எப்பிடிப் போகுது?''

அவனுடல் சில்லிட்டு பனிக்கட்டி யாய் உறைவது போல் இருந்தது.

பஸ்ஸின் முன்னால் இருவர் ஏ.கே. துப்பாக்கிகளுடன் கொலைகாரர் போல் நின்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் பஸ் முன்னிருக்கையில் இருந்த 'மாஸ்ரரை'' நோக்கி இடப்புற முன் ஜன்னலருகே வந்து மீண்டும் பலத்த குரலில் ''என்ன மாஸ்ரர், என்னைத் தெரியுதா? உங்கட பிரச்சாரமெல்லாம் எப்பிடிப் போகுது?'' என்றான் அதே குரூரமும் கேலியும் கலந்த குரலில்.

அந்தக் கேள்விக்கு இலக்கான 'மாஸ்ரரை' நோக்கி பஸ்சுக்குள் இருந்த சகல பிரயாணிகள் மட்டுமல்ல, சதா காற்றோடு கதைப்பறையும் அந்த வல்லை வெளியே ஒருக்கால் ஸ்தம்பித்து அவனை நோக்கி தன் பார்வையைக் குவிப்பதுபோல் இருக்க, அவனது உடல் வெலவெலத்து வேர்க்கத் தொடங்கியது.

மாஸ்ரரை நோக்கி கேள்வியை எறிந்து அதட்டியவன் தனக்குச் சற்று தள்ளி எதிர்ப்பக்கமாக நின்ற தனது சகாவின் பக்கம் பார்வையைத் திருப்பினான். ஆனால், அவனது சகாவோ இவனைப் பாராது பஸ்ஸின் பின்னால் இருப்பவர்கள் மேல் நோட்டம் விட்டுக்கொண்டு நின்றான்.

இனி நான் தப்பிக்கொள்ள வழியில்லை. பஸ்சை விட்டு இறக்கப்பட்டு இந்தச் சந்தியில் வைத்துச் சுடப்படப் போகிறேன். அது நிச்சயம்.

மாஸ்ரரின் எண்ணங்கள் தறிகெட்டுப் பாய்ந்தன.

கணப்பொழுதுகள் யுகங்களாக நீளும் பிரமை.

திகிலும் பீதியும் அவதியும் அவனுக்குள் அரக்கர் போல் ஒன்றை யொன்று கட்டிப்பிடித்து புரள்கின்ற அந்தரம். அந்த உணர்வுகளின் மற்போர் அங்கிருப் போருக்கும் காட்சிப்படுத்தப்படுவது போன்ற அவஸ்தை.

மாஸ்ரரின் பக்கம் அந்தக் கொலைகாரன் போல் நின்றவனின் பார்வை மீண்டும் திரும்புகிறது.

மாஸ்ரர் அசட்டுத்தனமான புன்சிரிப்புடன் அவனை வெறித்துப் பார்க்கிறார். அந்தப் பார்வையில் சிகரட் புகைபோல சாவின்களை மிதந்து பஸ்சுக்குள் நெளிவது எல்லோருக்கும் தெரிகிறது.

மாஸ்ரரின் பார்வையை வாங்கிய அவன், ஒரு முறை தன் உதட்டால் பற்களைக் கடித்துவிட்டு 'ஹா ஹா' வெனப் பலமாகச் சிரித்தான். அவன் சிரிப்பினால் மாஸ்ரரின் நடுக்கம் வெளியெடுக்கப்பட்டு எல்லார் முன்னிலையிலும் காட்சிக்கு வைக்கப் படுவதுபோல் இருந்தது.

இதுவரை பஸ்சின் பின்னால் தன் நோட்டத்தை எறிந்து கொண்டிருந்த அவன் சகா, அவன் சிரிப்பினால் தட்டிவிடப்பட்டு இவன் பக்கம் திரும்பி 'என்ன விஷயம்' என்பது போல் பார்த்தான்.

உடனே தன் சைகையால் தன் சகாவை அருகே அழைத்த அவன் மாஸ்ரரைச் சுட்டிக்காட்டி ''சுபாஸ், இவர்தான் அவங்கட பிரச்சாரப் பீரங்கி, ஆளைக் கவனி'' என்றான். மேலும் சத்தம் போட்டு. பின்னர் ரகசியமாக ஏதோ சொன்னான்.

மாஸ்ரரின் உயிர் ஊசலாடத் தொடங்கியது.

'ஆளைத் தட்டுவமா?' என்று அவன் சகாவிடம் சொல்லுகிறான் போலவே அவருக்குப்பட்டது.

இனி மாஸ்ரரை பஸ்ஸைவிட்டு இறக்குவதற்கு கட்டளையிடுவது தான் பாக்கி.

அவன் சகா மீண்டும் தன் பார்வையை மிக அக்கறையாக ப்ஸ்ஸின் பின்னால் ஓடவிட்டுக் கொண்டிருந்தான். அப்படி அவனை ஈர்ப்பது என்ன என்றறியும் ஆவல் அந்நிலையிலும் மாஸ்ரருக்குத் தோன்றியது. இருந்தாலும் அவர் திரும்பவில்லை. நேரே வெறித்துப் பார்த்தபடி இருந்தார்.

தோளில் தொங்கிய துப்பாக்கியை கைக்கு மாற்றியவாறே மாஸ்ரருக்குக் குரல் கொடுத்தவன் பஸ்ஸின் முன்னால் நின்று அக்கம்பக்கம் சுற்றி நோட்டம் விட்டான்.

வழமையாக பஸ்சுக்குள் ஏறி யாராவது சந்தேக நபர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து 'செக்' பண்ணி விட்டு பஸ்ஸை அனுப்ப வேண்டியவன் அதற்கு மாறாக இன்று மாஸ்ரரைக் கண்ட மாத்திரத்தே அவற்றையெல்லாம் மறந்து 'பெரிய காய்' ஒன்று அகப்பட்ட களிப்பில் முகம் மகிழ்ச்சியால் பொங்க, அங்குமிங்கும் பார்ப்பதிலிருந்தே அவர் ஆயுள் இன்றோடு முடியப் போகின்றதென்பது தானே அர்த்தம்?

அவன் பார்வை திடீரென்று மாஸ்ரர் மேல் வந்து குத்திட்டது.

அவன் குரல் கொடுக்கப் போகிறான்.

ஓய் மாஸ்ரர்; இஞ்சால இறங்கி வாரும்!

அவன் இன்னும் கட்டளை பிறப்பிக்கவில்லை. அதற்குள் மாஸ்ரரின் மனம் முந்திக் கொண்டு, அவன் குரலை குத்தகைக்கு வாங்கி ஒத்திகை பார்த்து.

ஓய் பிரச்சாரப் பீரங்கி, இப்படி இறங்கி வாரும்!

அவர் தன் மனதை எவ்வளவு கட்டுப்படுத்தியும் அது கட்டறுத்துக்கொண்டு முந்தியது. அவரை ஓர் நிலையில் இருக்கவிடாது மனம் அலை பாய்ந்தது. கடைசியில் அவரை அவராலேயே கட்டுப்படுத்த முடியாமல் போய்விடுமோ என்ற ஓர் அந்தரநிலை. மனம் போடும் 'கலை' ஆட்டத்தின் வேகத்தைப் பார்த்தால் இன்னும் கொஞ்சநேரத்தில் அவன் கட்டளை பிறப்பிக்காமலேயே தானாகவே அவர் அவனிடம் போய்த் தலையைக் கொடுத்துவிடுவாரோ என்பது போன்ற பீதியின் அமர்க்களம்.

'ஐயோ, என்னை யாராவது இறுக்கிப் பிடித்துக் கொள்ள மாட்டார்களா?' என்று அவர் மேல்மனம் ஓலமிட, உள்மனத்தின் கொந்தளிப்பைத் தாங்க முடியாத அவர் தனக்கருகில் இருப்பவரை 'வளர்த்த நாய் எஜமானரைப் பார்ப்பதுபோல்' பார்த்தார். அருகில் இருப்பவர் அப்படி ஒரு அந்நியரல்ல.



மாறாக அவருக்கு நல்ல பழக்கமுள்ள, அவரில் அன்புடைய ஒரு நண்பர் தான். ஆனால் அவர் இவரைப் பார்ப்பதாய் இல்லை. அவர் முகத்திலும் ஈயாடவில்லை. மேற்கில் வீழும் மாலைச்சூரியனின் கதிர்களால் அவர் கறுத்த முகம் காமாலைக்காரனது போல் வெளிறிப்போக, அவர் தூர வெறித்த பார்வையோடு அசையாதிருந்தார்.

அவர் மட்டுமல்ல. பஸ்ஸில் இருந்த அனைவரும் இப்படித்தான் இருந்தனர். திடீரென யாரோ ஒரு முனிவர் போட்ட சாபத்திற்கு இலக்கானவர்கள் போல் வெறித்த பார்வையும் அசையாத உடல்களுமாய் அப்படியே விறைத்துப் போயிருந்தனர். நிற்பாட்டப்படாத பஸ் என்ஜினின் 'கிர் கிர்' என்ற கரகரப்பைத் தவிர எங்கும் ஜட அமைதி.

ஆனால் அந்த அமைதி அதிகநேரம் நீடிக்காது போல்பட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில், பஸ்ஸில் உள்ள அனைவரும் ஏககாலத்தில் பீதியால் பெருங்குரலெடுத்துக் கத்தி விடுவார்கள் போல் மாஸ்ரருக்குப்பட்டது. இல்லாவிட்டால் மாஸ்ரரே அப்படிச் செய்து விடுவார் போல் அவர் நாக்கின் நுனி துடித்தது. வாயை அவர் மென்று மென்று விழுகினார். இருந்தாலும் அவரால் முடியாமற் போகவே எல்லோருக்கும் வழிகாட்டுவதுபோல் அவரே குரலை வெளிவரவிடாது தனக்குள்ளேயே கத்தினார். எங்கோ ஆழக்கணற்றின் அடியிலிருந்து அது வெளிவந்து மீண்டும் அதன் தொண்டைக் குழிக்குள் திரும்பிப்போகும் ஓசை.

''ஐயோ கொலைகாரர்! ஐயோ கொலைகாரர்! என்னைக் காப்பாற்றுங்கள்!! யார் யாரைக் காப்பாற்றுவது?

'சீ கத்தாதே! ஏன் இப்படிப் பயந்து சாகிறாய்? சாகப்போகும் நேரத்திலாவது அதைத் தைரியமாக எதிர்கொள்'

மனதின் மேல்முனை எதிர்க்குரல் கொடுத்தது.

இதுகாலவரை உயிரோடு வாழ்ந்தும் உயிரென்பது எதுவென்று தெரியாது வாழ்ந்த அவருக்கு முதன்முதலாக ஒரு அனுபவம் கிட்டியது. அவருக்குள் இருக்கும் உயிரைக் கையில் எடுத்துத் தடவிப் பார்த்து, அதன் கனதியையும் கையில் வைத்து எறிந்து எறிந்து எடை பார்க்கும் புதிய அனுபவத் தளம் அவருக்குக் கிட்டியதுபோல.

உயிர் இப்படிக் கனக்குமா?

வைத்து விளையாடும் பொருளை யாராவது பறிக்கப்போகும்போது குழந்தைப் பிள்ளைகள் அந்தப் பொருளைப் பறிக்கவிடாது தன்னுடல் முழுவதாலும் அணைத்து கூனிக்குறுகிக் கொள்வது போல், மாஸ்ரர் தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளக் கூனிக்குறுகினார். அது பெரும் பாறாங்கல்லொன்று கழுத்தில் தொங்குவதுமாதிரிக் கனத்தது.

மாஸ்ரருக்கு நினைவு வந்தது. சில கிழடுகள் சாகாது கனநேரம் கிடந்து 'சேடம்' இழுப்பதை அவர் பார்த்திருக்கிறார். உயிர் இருப்பதே பெரும் பாரமாக அவர்கள் உயிரோடு போராடும் அவஸ்தை, மாஸ்ரரும் அப்படியா?

அவர் உயிர் பாறாங்கல் மாதிரி கனக்க அவர் மேலும் கூனிக் கூனிக் குறுகிக் குறுகி.... அவருக்கு இனிமேலும் தாங்கமுடியாது, இனிமேலும் தாங்க முடியாது. அவர் மனம் தன்பாட்டில் கத்தியது.

ஐயோ இறைவா, இந்த அவலம் ஏன் எனக்கு?

என்னைக் காப்பாற்றமாட்டாயா, நான் தப்ப வழி இல்லையா?

அவர் மனம் பெருங்குரலெடுத்துக் கத்தியது.

ஆனால் அதற்கு நேர்மாறாய் அவருக்கு வெளியே - பஸ்சுக்குள்ளும் அதற்கு அப்பாலும் - எல்லாம் ஸ்தம்பித்தது போல் மயான அமைதி நிலவியது.

திடீரென அந்த அமைதியைக் கிழிப்பதுபோல் ''ஏய் சுபாஸ்'' என அந்தக் கொலைகாரன் போல் நின்றவன் தன் துப்பாக்கியின் அடிப்புறத்தை நிலத்தில் ஊன்றியவனாய் தன் சகாவை நோக்கி கத்தினான்.

மாஸ்ரருக்கு சன்னமொன்று அவர் காதோடு ஒட்டிய கன்னத்தைக் கிழித்துக்கொண்டு போவது போல் இருந்தது.

ஆனால் அவனது சகா திரும்பிப் பார்க்கவில்லை.

அவன் இன்னும் பஸ்ஸின் பின்புற நோட்டத்திலிருந்து மீளவில்லை. கூடவே இப்போ நகத்தை வேறு கடித்து கொண்டிருந்தான். அவனை அப்படி பின்னால் இழுப்பது என்ன?

மாஸ்ரர் அந்நிலையிலும் தன்நிலையை மறந்து ஒரு மின்வெட்டுப் பொழுதில் தன் முகத்தைப் பின்னால் திருப்பிப் பார்த்துவிட்டு மீண்டார். அந்தக் கணப்பொழுதில் நகத்தைக் கடித்தவாறு பார்வையை மேயவிட்டவனுக்கு பதில் அளிப்பது போல் ஓர் அழகி பின்னால் இருந்து முறுவலித்துக் கொண்டிருந்தாள்.

கத்தியவனுக்கு அவனது சகா பதிலளிக்காமல் போகவே தன் திட்டத்திற்கு ஆதரவு தர ஆளில்லாது

→

போன நிலையில் அவன் தொண்டையைக் கனைத்துப் பலமாகச் செருமினான். ஆனால் பலனில்லை. பஸ்ஸின் என்ஜின் மட்டும் இன்னும் 'கர் கர் கர்' என்ற இரைந்து ஓர் அவலச் சுருதி கூட்டியது.

பெண் மோப்பத்தில் ஈடுபட்டிருந்தவனும் தன் மயக்கம் தெளிந்து ''அப்படியா சங்கதி, இவர் அவங்கட ஆளா?'' என்று கூப்பிட்டவனோடு சேர்ந்து மாஸ்ரரை ஒரு பார்வை பார்த்திருந்தால் போதும், அவர் பஸ்ஸைவிட்டு இறக்கப்பட்டு அவ்விடத்திலேயே வைத்து சுடப்பட்டிருக்கலாம்.

இருந்தாலும் இன்னும் நிலைமை சுமுகமாகவில்லை.

அவர் உயிர் மயிரிழையில் தொங்கிக் கொண்டிருந்தது.

அதட்டியவனின் சகாவின் மோகம் இன்னும் முற்றுப்பெறவில்லை. அவன் மோப்பத்திற்கு ஏற்றவாறு அவள் 'தீனி' போட்டுக் கொண்டிருந்தாள்.

குதியுயர்ந்த செருப்பும் ஆளுமாய் தளுக்குமினுக்கோடு அவள் பஸ்ஸில் ஏறியபோது இவருக்கு ஏற்பட்ட எரிச்சல் இன்னும் ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் அந்த எரிச்சலை ஏற்படுத்தியவளால் தான் அவர் உயிர் இன்னும் இழுத்துப் பிடிக்கப்பட்டிருப்பதுபோல்...... என்முன்னே விஸ்வாமித்திரரைக் கலக்கிய மேனகை, இந்திரனைக் கீழிறக்கிய அகலிகை ஆகியோரின் கற்பனை முகங்கள் ஓடிவந்தன.... எது நன்மை? எது தீமை? ஒருவரின் நல்லியக்கம் மற்றவருக்குத் தீமையாகவும் இன்னொருவரின் தீய இயக்கம் அடுத்தவருக்கு நன்மையாகவும் மாறி மாறி முடிவில் எல்லாம் நன்மையும் தீமையுமற்ற ஒன்றாய் முடிவதாய் அவருக்கு அந்நேரத்தில் ஓர் மின்வெட்டு ஞானோதயம்.

மாஸ்ரர் ஒரு முடிவுக்கு வருகிறார்.

அந்தத் துப்பாக்கிக்காரர் பஸ்ஸுக்குள் வந்து தன்னை வலிந்திழுத்துக்கொண்டு போய் நாய் போல் சுட்டுத்தள்ளுவதை நினைக்கவே அவர் மனம் அருவருத்தது. சாகமுன்னர் தலை நிமிர்ந்து செல்ல வேண்டும். அந்த அற்பர்களோடு எந்த வித சமரசக் குழைவும் இல்லாமல் அவர்கள் முகத்தில் காறித்துப்பாத குறையாக சாவை வரவேற்க வேண்டும்.

அவர் பொறுமையிழந்த அந்த நிலையில் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார். இருந்தும் ஏனோ மனம் அலைபாய்ந்தது.

துப்பாக்கியைக் குத்தவைத்தவாறு குரல் கொடுத்தவன் மீண்டும் அதைத் தூக்கிக் கொண்டு பஸ்ஸைச் சுற்றிவரத் தொடங்கினான். அவன் பெரிதாகக் கத்தி, பறைசாற்றி பஸ்ஸில் இருந்தவர் விறைக்க, அவர்களைப் பயமுறுத்த எதையோ ஹீரோ பாணியில் செய்யும் வேட்கையில் நடந்தான். ஆனால் அதை அவனாலே செயல்படுத்த முடியாத பதற்றம், அதை வெளிப்படுத்த முடியாது நாக்கு உள்விழுந்து போய் விட்டது போல் வெறும் வாயைச் சப்பும் உதட்டசைவு.

துவக்கைத் தூக்கிக்கொண்டு பஸ்ஸை வலம் வந்தவன் மாஸ்ரர் இருந்த ஜன்னல் அருகே வந்ததும் துவக்கை தோளிலிருந்து சுழற்றி கையில் எடுத்தான்.

இனி சரி, அவன் பெரிதாகக் கத்தி என்னை கீழிறக்கப் போகிறான்.

'நான் அதற்குத் தயாராக வேண்டும்' -மாஸ்ரர் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவரது இதயம் அடிக்கும் ஓசை பஸ்ஸில் உள்ள எவர்க்கும் கேட்பது போல் உலக்கை போட்டு இடித்தது.

இரண்டு நாட்களுக்கு முந்தி இவர்களின் கூட்டத்தால் கொல்லப்பட்டு மாஸ்ரரின் வீட்டுக்கு அருகில் நூறு யாருக்கு ஒருவராக போடப்பட்டிருந்த மூவரின் முகங்கள் அவர் கண்முன் விரிந்தது. சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டிருந்த அவர்களின் முகங்கள், புதுவீடுகளின் முன் தோஷ நிவர்த்திக்காக மாட்டப்பட்டிருக்கும் ''கீர்த்தி முகங்கள்'' மாதிரி வீங்கி பருத்து அகோரமாகக் காட்சியளித்தன.

இவற்றோடு ஒன்றாய் மாஸ்ரரின் முகமும் அராலிச் சந்தியில் கிடக்கப் போகிறது. புதிய 'கீர்த்தி முகம்'...

அவர் ஜன்னலின் கண்ணாடிக்கருகே வந்தவன் அவரை குரோத வெறியோடு பார்த்துக் கொண்டிருப்பது போல் பட்டது.

அவர் அவனைப் பார்க்கவில்லை.

மாஸ்ரரின் பார்வை, அவர் அருகில் இருக்கும் நபரைப் போல் வலுவிழந்து வரவழைத்த சாந்த முறுவலோடு மறைந்து கொண்டிருக்கும் மாலைச் சூரியனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது. பென்னம் பெரிய தீப்பந்து, அரக்கனொருவன் வாய்க்குள் போவதும் பின்னர் வெளிவருவதும் போல் அந்தரப்படும் சூரியப்பந்து.

மாஸ்ரரின் நண்பருக்கு அருகிலிருந்த பஸ்சாரதி ஸ்ரியரிங்கில் தலைவைத்தவனாய் பீதியை மறைத்தபடி தன் இடக்கையில் இருந்த நேரத்தைப் பார்க்கிறான். ஐந்து நிமிடத்திற்குள் திணிக்கப்படும் ஆயிரம் நிகழ்வுகள் ஆயிரம் நிமிடம் போன்ற நேரச் சுமையில் இழுபட....

மாஸ்ரர் அருகில் நின்றவன் தொண்டையைக் கனைக்கிறான்.

சரி இனி அவன் கத்தியவாறே அவரை வந்து வெளியே இழுத்தெறியப்போகிறான்.

மாஸ்ரர் இருந்தது போதும் இறங்கி வெளியே வாரும்!

அப்படிச் சொல்லியவாறு அவரை வந்து பிடரியில் தள்ளிவிடப் போகிறான்.

இப்போ எல்லோர் பார்வையும் அவரையே நோக்கிக் குவிவது போன்ற உணர்வு.

ஆனால் இன்னும் அவன் தொண்டையைவிட்டு எந்த வார்த்தையும் வந்ததாக இல்லை.

அவன் தொண்டைக்குள்தான் அந்தச் சூரியப் பந்து போய் அடைத்துக் கொண்டது போன்ற ஒரு உறுத்தலின் வெளிக்காட்டலாய் 'கோர்க்' என்று பெரிதாக உள்ளிழுத்து ஒரு காறல் காறினான். அதைத் தொடர்ந்து வந்த ஒரு கண இடைப்பொழுதின் பின் 'தூ.....!'' வென்று பெரும் வெறுப்பை உமிழ்ந்த ஒரு துப்பல்.

இனி?

அவன் அவரை ஜன்னல் வழியாக ஒரே அலாக்காகத் தூக்கி வெளியே எடுக்கப் போகிறான் போலும்.

மாஸ்ரரின் அந்தரமும் ஆற்றாமையும் தம் எல்லைக்கோடுகளுக்கே சென்றுவிடுகின்றன. இனிமேலும் பஸ்ஸுக்குள் இருக்க முடியாது. வெளியே எழுந்து போவது தான் புத்தி. அவன் எதுவானாலும் செய்து கொள்ளட்டும். மாஸ்ரர் தயாரானார்

அவர் கண்கள் மங்குகின்றனவா அல்லது அவர் பார்வை விழும் வெளியிடங்கள் தான் மங்கிக் கரைந்து கொண்டு போகின்றனவா?

அவர் பார்வை விழும் அந்த மங்கல் வெளியிலே அவர் மனைவி, பிள்ளைகள், உறவினர், நண்பர்கள் அனைவரும் வந்து வந்து போகின்றனர். அவர்கள் கண்களில் கண்ணீர்... இன்னும் சிறிதுநேரத்தில் அவர் கண்ட 'கீர்த்தி முகங்'களில் ஒன்றாய் அவரது தலையும் அராலிச் சந்தியில் கிடப்பதை இந்த பஸ்ஸில் போகிறவர்கள் வீட்டாருக்கு அறிவித்து விட்டுப் போக, அங்கே....

வேர்வையால் மாஸ்ரரின் உடல் தெப்பமாக, கண்கள் இருண்டு கொண்டு வந்தன. அவர் தலையை மெதுவாக சீற்றின் பின்னால் சாய்த்தார். ஆனால் அந்த நேரந்தான் அவனின் குரல் படுபயங்கரமாக ஒலித்தது.

''மாஸ்ரர்!''

அவர் நெஞ்சில் யாரோ பலமாக அடித்தது போல தாக்கம். அவர் இதயம் துடிக்காமல் நின்றுவிட்டது போல் ஸ்தம்பித்து மீண்டும் படுவேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

மாஸ்ரர் சமாளித்துக் கொண்டு, செத்துக் கொண்டு போன தன் முகத்தை கூப்பிட்டவன் பக்கம் திரும்பி நேர்பார்வை எறிந்தார். அவன் பார்வை மாஸ்ரரின் பார்வையைச் சந்தித்த போது, அவன் வாய் ஏதோ கொடூரமாகச் சொல்லத் துடிப்பதும் அவன் கைகள் ஏதோ செயலில் இறங்க பதறுவதும் போல் தெரிந்தன.

மாஸ்ரர் அவன் பஸ்ஸுக்குள் நுழைந்து விடுவானோ என்ற ஐயத்தில் இருக்கையை விட்டு எழுவதற்கு நுனிக்கால் பாதங்களை உயர்த்தினார்.

ஓர் கணந்தான்.

இதுவரை 'காதல்' சமிக்கைகளில் கட்டுண்டு கிடந்த அவனது சகா திடீரென உஷார் பெற்றவனாய் ''ஏய் திலீப், அவங்கள் வாறாங்கள்ளடா'' என்று பலமாகக் குரல்கொடுத்து தன் முன்னால் வந்து கொண்டிருப்பவர்களைக் காட்டினான்.

தூரத்தே இருவர் அருகருகே துப்பாக்கிகளைக் காவிக் கொண்டு தாடி மீசை தலைப்பாகையோடு வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வரமுன்னரே சப்பாத்தி வாடை வீசுகிறது.

''தொலைவான்கள் வந்தா உபத்திரவம். அதை இதைக் கேட்டண்டு நிற்பாங்கள் கெதியா வெளிக்கிடு'' என்றான். திரும்பவும் அழகியில் ஐக்கியமாகியிருந்த அவனே.

குத்தவைத்திருந்த துவக்கை மீண்டும் தூக்கினான் மற்றவன்.

'என்னைப் பஸ்ஸுக்குள் வைத்தே சுடப்போகிறான் போல' என்று எண்ணி இறங்க ஆயத்தமாகி மாஸ்ரர் அவக்கென சீற்றை விட்டெழுந்த அதே நேரத்தில், அவரது காற்சட்டையை பலமாக இழுத்து அமரவைத்தார் அருகேயிருந்த நண்பர்.

''மாஸ்ரர், இனிமேலாவது உங்கட பிரச்சாரங்களை விட்டிட்டு ஒழுங்காக இருக்கப் பாருங்க'' என்று கூறியவன் ''உம் பஸ்ஸை எடும்'' என்றான் சாரதியைப் பார்த்து.

பஸ் புறப்பட்ட போது இதுவரை பாறாங்கல்லாக கனத்துத் தொங்கிய மாஸ்ரரின் உயிர், இப்போ எங்கே போயிற்று என்றே தெரியாத நிலையில் அவர் காற்றில் மிதப்பது போல் இருந்தார். ●

### [illegible]

கும்மிருட்டாய்
புதைந்து கிடக்கும்
மானுட பாத அடிகளின்
வரலாற்றில்
ஒவ்வொரு விடுதலையும்
அடிமைத் தனத்தின்
புதிய பரிமாணமாக...
இரத்தத்தால் வெல்லப்பட்ட
வீர படைப்புகளாக...

தருமத்தை சூது
கவ்வி சப்பித்துப்பிய
எச்சிலில் பிறந்த
இன்றைய நாட்களின்
நகர்வுகளில்
பின் புலமாக வரின்
கோடிடும் பழைய
மனிதர்களின் கண்ணீர்
கவிதைகள்

முட்களை பிடுங்கி
கற்களை நடுவதும்
தீயினை அணைத்து
அமிலங்களை தெளிப்பதும்....
ம்ம்ம்....
வரலாற்றில் உண்மையான
வீரர்கள் இல்லவே
இல்லைதான்

இரத்த உறைக்குள்
அமிழ்ந்து போயிருக்கும்
அழகிய தம் முகம் தெரிய
முகம் தெரிந்த
பெரு வெறியில்
மேலும் சாவுகள்
வாங்கிட தவறுகள்
எண்ணமாட்டாமல்
விரல்கள்
முறிகின்றன

இந்த பிழையான
சமன்பாடுகள் இனியும்
தொடரும்
உடைக்கப்பட்ட அடிமைத்தனம்
இன்னொரு அடிமைத்தனத்தையும்
வாங்குகின்ற சிறைகளையும்
டார்வின் கூர்ப்பு விதியின்
முரணாக வளரும்

சூது சப்பித் துப்பிய
எச்சிலில் பிறந்த
இன்றைய நாட்கள்
விகாரமாகி விஸ்வருபமாகி
கம்பி வேலிகளால்
முகம் அறையப்பட்ட
புதிய நாளையை
வாங்கித் தரும்

அறஜீசன்
-20.06.96

## அட்லாண்டா ஒலிம்....

### இன வேற்றுமை

ஒலிம்பிக்போட்டி ஐரோப்பியர்களால் நிறுவப்பட்டு மேற்கு நாட்டு போட்டி முறைகளைக் கொண்டு நடத்தப்படுகிறது. இதனால் மேற்கு நாடுகளில் பிரபலம் அடைந்த பல விளையாட்டுக்கள் வேறுபல நாடுகளில் அவற்றின் பிரபலத்துக்காகவே விளையாடப்பட்டு வருகிறது.

அகில உலக ஒலிம்பிக் செயற்குழு கடைப்பிடிக்கும் அம்சங்களும் மேற்கு நாடுகளை பின்பற்றுபவையாகவே இருக்கின்றன. இதில் மேற்கு அல்லாத விளையாட்டுக்களையும் யாரும் முக்கியத்துவம் அளிப்பதாகத் தெரியவில்லை.

### வன்முறை.

குத்துச்சண்டை, வில்வித்தை மற்றும் ஈட்டி எறிதல் போன்றவை சண்டையை ஆதரிக்கும் விளையாட்டுக்களாக இருந்து வருகின்றன.

கூடைப்பந்து போன்ற விளையாட்டுக்கள் வன்முறையை ஏற்படுத்தும் விளையாட்டுக்களாகவே அமைந்து வருகின்றன.

அளவுக்கு மீறிய போட்டி மனப்பான்மையையும்சில சமயங்களில் இயற்கையாகவே வன்முறையை ஏற்படுத்தி விடுகின்றன. சில வேளைகளில்இம்மாதிரியான விளையாட்டுக்களே உண்மையான சண்டைகளுக்கும்காரணமாகி விடுகின்றன.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நிறுவப்பட்டதன் உண்மையான நோக்கம் அமைதியையும் சுபீட்சத்தையும் நிலைநாட்டுவதே ஆகும். ஆனாலும் ஒலிம்பிக் போட்டி இன்று மக்கள் நாட்டினரிடையே வன்முறையை வளர்ப்பதாக அமைந்து வருகிறது.

1896ல் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி கிரீக் அரசாங்கம் துருக்கியுடன் 1897 போரை ஆரம்பிக்க ஒரு காரணமாக இருந்தது.

ஆக ஒலிம்பிக் போட்டி அதனுடைய உண்மையான நோக்கத்திலிருந்து தவறியுள்ளது.

### புகழ்

இந்த ஒலிம்பிக் போட்டி புகழ்ச்சி கலாசாரத்தை வளர்க்கும் ஒரு போட்டியாக வளர்ந்து வருகிறது. ஒலிம்பிக்கில் வெற்றிவாகை சூடும் ஒருவர் நல்ல உதாரணமாகத்திகழ்வார் என்று கூறிவிடமுடியாது. அவர்களுக்கு போட்டியின் வெற்றி பெறுவதற்கான சில திறமைகளும் தன்மைகளும் இருக்கக்கூடும். ஆனாலும்மனித உயர்வுக்குத் தேவையான வேறு சில தன்மைகள் இருக்கும் என்று உறுதியாகக் கூறிவிட முடியாது.

இம்மாதிரியான புகழ்ச்சி கலாசாரத்திற்கு தொடர்பு சாதனங்களே ஒரு முக்கிய காரணமாகும்.

### தொழில்நுட்ப தீவிரம்

ஒலிம்பிக் ரீதியிலான பங்கேற்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாதனங்கள், பயிற்சிகள் மற்றும் போதைப்பொருட்களின் (சட்ட ரீதியான அல்லது சட்டத்திற்கு புறம்பான) உபயோக அதிகரிப்பையே குறிக்கின்றது.

உதாரணமாக சைக்கிளோட்டும் போட்டியில் ஆக வேகமாக ஓடும் சைக்கிளுக்கும் வேகமாக ஓட்டும் போட்டியாளரே வெற்றி பெறுவார். இங்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் அதிகம் பங்கு வகிக்கின்றது. ஒரு மனிதனுடைய உடம்பு இயந்திரம் போல் நடத்தப்படுகிறது.

### ஒலிம்பிக் போட்டியை பார்க்கும் விதம்

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளைப் பார்ப்பதானது ஆதிக்கம் செலுத்தும் அம்சங்களையும் போட்டி மனப்பான்மையும் ஒருவருக்கு வளர்க்கிறது. ஒலிம்பிக் விளையாட்டில் கலந்து கொள்ளும் தங்களுக்கு விருப்பமான பங்கேற்பாளருக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் வாழ்க்கையே ஒரு போட்டி மனப்பான்மையில் உருவானதுதான் என்றும் வெற்றியாளருக்கே எல்லா சலுகைகளும் தரப்பட வேண்டும் என்றும் ஒருவரின் தோல்விக்கு அவரே காரணம் என்னும் மன நிலையை உருவாக்குவதாக உள்ளது.

### அரசாங்க அடக்கு முறை

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி சுதந்திரத்தைப் பறிக்கும் ஒரு விளையாட்டாக உருவாகி வருகிறது. ஒலிம்பிக் போட்டிக்கு அதிகமான இரசிகர்கள் இருப்பதால் பலர் இந்தப் போட்டிக்கு பல விதங்களில் இடையூறு விளைவிக்க பல விதமான நடைமுறைகளைக் கையாண்டு வருகிறார்கள்.

1972ல் நடைபெற்ற முனிச் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியை தீவிரவாதிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளனர்.

## ராதையுமில்லை...

புற்ற பெண்ணின் மீது சுமத்தப்பட்டிருக்கும் புனிதங்களின் மதிப்பீடுகள், அவள் முன்னே பல கேள்விகளை எழுப்பி விட்டன. இப்பொழுது அவள் ஆண் - பெண் உறவு பற்றி முற்றிலும் புதியதொரு விளக்கத்தைத் தர வேண்டியிருந்தது. வழிவழியாக வந்துகொண்டிருக்கும் ஆண் பெண் உறவுகளின் முன்னே ஒரு கேள்விக் குறி எழுப்ப வேண்டி நேர்ந்தது. அவற்றில் சில உறவுகளின் எல்லைகளை இனம் கண்டு கொண்டு முன்னேற வேண்டியிருந்தது. பெயரில்லாத புதிய உறவுகளைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டியிருந்தது. அம்ரிதா பிரீதமின் நாவல்கள் இப்புதிய யுகத்து விழிப்புணர்ச்சி பெற்றுள்ள பெண்ணை ஆணினுடைய நிலையிலிருந்தும், சம்பிரதாய முறைகளுக்கு சவால் விடுவது போல் புதிய விழிப்புணர்வை நடைமுறைக்கு கொண்டு வரும் 'புதுயுகத்து ஆண்மகனை ஒரு பெண்ணின் நிலையிலிருந்தும் புரிந்து கொள்ள முயற்சிக்கின்றன' என்கிறார்.

இன்று கலை இலக்கியம் குறித்து பெண்ணிய நோக்கிலான மறுவாசிப்புக்கள் இடம் பெறும் போது அம்ரிதா பிரீதமின் படைப்புக்கள் இன்னும் சில ஆழ்ந்த பார்வைகளை, தொடர்ந்த உரையாடல்களை நமக்குள் ஏற்படுத்தும் என்றே கருதலாம். இவரின் ஏனைய படைப்புக்கள் குறித்தும் நாம் கவனம் கொள்வது இன்னும் ஆரோக்கியமாகவே அமையும். ஹரிகிருஷ்ணாவுக்கு ஏன் ராதையும் கிட்டவில்லை ருக்மணியும் கிட்டவில்லை என்பதனை அறிந்து கொள்ள வேண்டுமாயின் முழுமையாகவே நாவலைப் படிக்கும் போதே புரிந்து கொள்ள முடியும்.

குறிப்பு:
அம்ரிதா பிரீதம் எழுதிய சிறுகதை ஒன்று ஏலவே சரிநிகர் ஒன்றில் வெளிவந்திருந்தது.



மல்லிகை முகங்கள்
மல்லிகைப் பந்தல்
234, B காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்
விலை 60/=

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வந்துகொண்டிருக்கும் மல்லிகை என்ற மாத இதழில் முகப்பில் வெளியான ஈழத்துப் படைப்பாளிகள், கலைஞர்கள், விற்பண்ணர்கள் 65 பேர் பற்றிய குறிப் புக்களேஇந்நூல். வ.ரா. எழுதிய தமிழகத் துப் பெரியார்கள்'' என்ற நூலின் பாதி ப்பேஇத்தொகுப்புக்கு காரணம்என்கிறார் இதனைத் தொகுத்த மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா.



துளிர்
வியூகம்
கல்முனை
விலை 40/=

அகால மரணமடைந்த ஆனந்தன் படி,களம் ஆகிய சஞ்சிகைகளில்எழுதிய நிரல்களின் (Coloumn) தொகுப்பு இது. ''எனைய நிரலியல்கள் வெளிரிய பத்திரிகைத் தாளுடன் வெளிறிப்போக ஆனந்தனின் நிரல்கள் இச்சிறிய நூலில் கலங்கிய கோடுகளுக்கு இடையே ஒரு தெளிவான கோடாகத் தெரிகிறது'' என்ற ஆனந்தனின் நிரல்கள் பற்றிக் குறிப்பி டுகிறார்சண்முகம்சிவலிங்கம்.



இளங்கதிர்'95
பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்ச் சங்கம்
பேராதனை

''எங்களுடைய நண்பர்கள் இருவர் (பொறியியல் பீட மாணவர்கள்) கைது செய்யப்பட்டு ஆறு மாதத்துக்கு மேலாகி யும்தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக் கிறார்கள்..... 1995இன் இறுதியில் வலிகாமத்திலிருந்து எல்லோரும் அகதி காளாக இடம் பெயர்ந்தார்கள். எமக்கோ எமது பெற்றோர்கள், உடன்பிறப்புக்கள், உறவினர்கள், நண்பர்கள் எங்கு இடம் பெயர்ந்திருப்பார்களோ என்ற ஏக்கம். இங்கோ மகிழ்ச்சி வெடிகளும், வெற் றிக்கு(?) கொடிகளும்... இடம் பெயர்ந்த வர்களுக்கு எதையாவது சேகரித்து அனுப்பக்கூட உரிமையற்றவர்களாக இருந்தோம். நாம் இரண்டாந்தரப்பிரஜை களோ என்றுகூடச் சிந்திக்கத் தோன்றி யது'' என்று மலரில் எழுதுகிறார் தமிழ்ச் சங்கத் தலைவர் பா. பால நந்தகுமார். இந்தச் சூழ்நிலைகளுக்குள்ளிருந்தும் இவ்வாறான ஒரு மலரை கொண்டு வந்தது பாராட்டுக்குரியதே.



ராதையுமில்லை
ருக்மணியுமில்லை
மூலம்: அம்ரிதா பிரீதம்
தமிழில் : சரஸ்வதி ராம் நாத்
வெளியீடு: நெஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

'ராதையுமில்லை ருக்மணியுமில்லை' என்ற அம்ரிதா பிரீதம் எழுதிய பஞ்சாபிய மொழியிலான படைப்பை சரசுவதி ராம்நாத் தமிழில் தருகிறார். இது அனைத் திந்திய நூல் வரிசையில் நாஷனல் புக்டிரஸ்ட் வெளியீடாக வெளி வந்துள்ளது.
அம்ரிதா பிரீதம் சிறந்த பெண் படைப் பாளி. சிறுகதை, நாவல், கவிதை, பயண இலக்கியம், விமர்சனம் என பல்வேறு துறைகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு உடைய வர். இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல் உலக மொழிகள் பலதிலும் இவரது படைப்புகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.
ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றிற்கு நாவல் வடிவம் கொடுத்து சிறப்புற படைத்துள்ள படைப்பே 'ராதையுமில்லை ருக்மணியுமில்லை' என்பதாகும்.
லூதியான நகரத்தின் மூன்று சிறுவர்கள் நண்பர்களாக வளர்ந்து பெரியவர்களாகி இந்தியாவின் மூன்று புகழ்பெற்ற கலைஞர்களாக ஆனது குறித்து வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சிகள் இங்கு கதையாக்கப்பட்டுள்ளது.
- ஹரிகிருஷ்ணா - ஓவியர்.
- சாகிர் லூதியானா - மக்களின் பேரன் புக்கு பாத்திரமான கவிஞர்
- ஜெயதேவ் - சிறந்த திரைப்பட இசை இயக்குனர்.
இம்மூவர் குறித்து ஓவியர் ஹரிகிருஷ்ணா என்பவரது வாழ்க்கை அனுபவத் தளத்திலிருந்து - அவரது சுயசரிதம் - இங்கு நாவலாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. நாவலின் இறுதியில் அம்ரிதா பிரீதம் ஓவியர் ஹரிகிருஷ்ணாவுடன் நடத்திய உரையாடல் இணைக்கப்பட்டுள்ளது. நாவலில் வரும் விடயங்கள் குறித்த இன் னும் மேலதிக விளக்கங்களுக்கும் சிந்த னைக்கான சில வாயில்களையும் திறந்து விடுகின்றன.
இதற்கு டொக்டர் ஸ்வரன்சந்தர் என்பவர் எழுதிய முன்னுரை ஆழமாகவும்அழகாக வும் இலக்கியம் குறித்து அறிவார்ந்த சில சிந்தனைகளை சுருங்க விளக்கி வைத்துள்ளார். பஞ்சாபில் இலக்கியம் குறித்த ஓர் அறிமுகத்தையும் இவர் தரமுற்படுகின்றார். அத்தோடு அம்ரிதா பிரீதம் குறித்த தெளிவான அறிமுகம் ஒன்றை விரிவாகவே தருகின்றார்.
அம்ரிதா பிரீதம் இதுவரை 26 நாவல்க ளுக்கு மேல் எழுதியுள்ளார். இவரது கவிதைகள் இன்னும் சிறப்பானவை என்று அறிய முடிகின்றது.
இவரது படைப்புக்களை ஆழ்ந்து படிக் கும் போது இவர் மனித உறவுகளைச் சித்திரிக்கும் எழுத்தாளர் என்பதும் பரம் பரையான மரபுத் தளைகளில் கட்டுண்டு இருக்காமல் 'மாற்றம்' குறித்த பிரக்ஞை யின் வெளிப்பாட்டு இயல்புதான் இவரது படைப்பின் மையமாகின்றது என்பதும் புலப்படுகிறது.
டாக்டரின் கீழ்வரும் இந்தக் கருத்து இன்னும் ஆழ்ந்து நோக்கக் கூடியவை. 'பிரபுத்துவ யுகத்தின் சமூக, கலாசார, கோட்பாடுகள் நாட்டின் பிரிவினைக்குப் பின்னரும் பஞ்சாபிய சமூகத்தில் முன் போல அப்படியே நிலைத்திருந்தன. ஆண் பெண் உறவுகளின் கடையாணி என்றும் ஆணாகவேயிருந்தான். ஒழுக்கம் சம்பந்தப்பட்ட புனிதங்கள் யாவும் ஆணாலேயே இணைக்கப்பட்டுள்ளன. திருமணத்திற்கு பின்னும் ஒரு ஆண் ஏற்படுத்திக்கொள்ளும் பாலியல் உறவுக ளுக்கும், உடலிச்சை நிறைவேற்றிக்கொள் ளும் சாதனங்களுக்கும் வழிமுறைக ளுக்கும் எவ்விதமான கட்டுப்பாடுகளும் இல்லை. ஆனால் புதிய யுகத்தின் விழிப்

→ 13



நெருப்பு
ஆசிரியர்: தேவகாந்தன்
வெளியீடு: குமரன் வெளியீட்டகம்
சென்னை.
விலை: 30/=இந்.ரூபாய்

தமிழகத்தில் வசித்துவரும் இலங்கை யரான தேவகாந்தனின் 85க்கும் 93க்கும் இடையில் எழுதப்பட்ட 16 சிறுகதைகள் இத்தொகுப்பிலுள்ளன. இதிலிருக்கிற எல்லா சிறுகதைகளையும் படிக்க ஆர்வ மிருக்கவில்லை. உடைந்த கண்ணாடி, ஞானத் தீ, சத்திய வேட்கை, பார்வைகள், வேறு வேறு, உள்ளும் வெளியும், தீர்ப்பு, நியாயங்கள் போன்றவற்றை மட்டுமே வாசித்து இக்குறிப்பை எழுதுகிறேன்.
இவரைப்போலவே தமிழகத்திலிருந்து எழுதும் இன்னொரு ஈழத்து எழுத்தாளர் செ. யோகநாதன் நல்ல படைப்புக்களை எழுதக்கூடிய திறமை இருக்கின்ற போதி லும்ஜனரஞ்சகமாக வாழவிரும்பும் போக் கினால், தன்னுடைய படைப்பு வாழ்க்கை யைச்சீரழித்துக்கொண்டிருக்கிறார்.
ஈழத்தையும், தமிழகத்தையும் பகைப் புலனாகக்கொண்ட கதைகள் இவை. 'ஞானத்தீ' என்ற கதையும், 'சத்திய வேட்கை' என்ற கதையும் அகிலன், மு. வரதராசன் வகையறா எழுத்துக்களை நினைவுபடுத்துகின்றன. இலட்சியவாத மாயைக்குள் நம்மைப் புதைப்பதன் மூலம் உக்கிரமடைந்த வாழ்வின் சிக்கல்களை மறைக்கும் எழுத்துவகை இது.
'தீர்ப்பு' கதை எஸ்.பொ.பாணியில் எழுதப்பட்ட ஒரு பைபிள் கதை.
உடைந்த கண்ணாடி, பார்வைகள் வேறு வேறு உள்ளும் வெளியும், நியாங்கள் என்ற கதைகளில் ஒரு நம்பிக்கை தரும் தேவகாந்தனை தரிசிக்கமுடிகிறது. இவ்வ கையாக இவர் தன்னை மேலும் புடமிட் டுக்கொண்டால் எதிர்காலத்தில் நல்ல உன்னதமான படைப்புக்களை இவர் தரக்கூடும்.
ஒரு புதுமைப்பித்தனையோ அல்லது இன்னும்மேலே போய்ஒருதகழியையோ ஈழத்தால் தரமுடியவில்லை. இதற்கு ஒரு காரணமாக முழு நேர எழுத்தாளர்களாக ஈழத்து எழுத்தாளர்கள் வராமையே என்று நாம் நினைப்பதுண்டு. ஆனால், செ. யோகநாதன் முதலியோரின் அனுபவங் கள் வித்தியாசமாக இருக்கின்றன.
எழுத வேண்டும் என்ற ஆசையோடு தமி ழகத்துக்கு வந்து முழு நேர எழுத்தாளராக இருக்கும்இவர் ஜனரஞ்சகமாக அதிகமாக எழுதுவதோடு முடிந்து போவது எப்படி? தேவகாந்தன் முழுநேர எழுத்தாளரோ தெரியாது. ஆனால், தீவிரமாக இலக்கிய தளத்தில் அவர் உழைப்பது மட்டும் தெரிகிறது. அவருக்கு தமிழகத்தில் ஈழத்து எழுத்தாளர்களுக்கு இருக்கும் வாய்ப் புக்களை விட அதிகவாய்ப்புக்கள் உண்டு. அப்படியிருந்தும் ஒரு ரஞ்சகு மாரின், ஒரு உமாவரதராஜனின் சிறுகதை என்னை கவர்ந்தமாதிரி தேவகாந்தன் கவராதது ஏன்? நாங்கள் சிந்தித்து உழைக்க வேண்டிய விடயங்கள் அநேகம் அவ்வளவே.

ந.செ.



மனிதருள் மாணிக்கம்
அப்துல் அஸீஸ்
ஆசிரியர்: பி.எம்.லிங்கம்
அஸீஸ் மன்றம்

'அஸீஸ் மன்றம்' வெளியிட்டுள்ள ஏறத்தாழ 200 பக்கங்களைக்கொண்ட இந்நூலை எழுதிய பி.எம்.லிங்கம் கடந்த பல வருடகாலமாக 'தினகரன்' பத்திரிகை யின் ஆசிரியர் குழுவில் இருந்து வருப வர்.
இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தாய்ச்சங்கமான இலங்கை - இந்திய காங் கிரசின் ஸ்தாபகரும், அதன் முதல் தலைவரும் அமரர் அஸீஸ் அவர்களைப் பற்றிய நூலே இது.
எனினும், தொண்டமானை மையப்படுத்தி வரலாற்று வடிவம் பெற்ற பல முக்கிய வெளியீடுகளின் மத்தியில் அஸீஸ் அவர்கள் திட்டமிட்டு மூடி மறைக்கப் பட்டார் என்பது கசப்பான உண்மையே. மலையக மக்களின் ஆரம்பகாலப்பேராட் டங்களில் அஸீஸின் வரலாற்றுப்பாத்திரம் நிச்சயமாக பதிவு பெற வேண்டிய, ஆவணப்படுத்தவேண்டிய அவசியம் கடந்த பல காலமாகவே பூர்த்தி செய்யப் படாமலேயே இருந்து வந்துள்ளது என் பது மனதிற் கொள்ளவேண்டிய ஒன்று.
இந்நிலையில் அஸீஸுடன் இறுதிக்காலம் வரைகூட இருந்த செபஸ்தியன் எழுதிய **"Abdul Aziz"** என்ற ஆங்கில நூல், அக்கு றையை ஈடுசெய்யும் என எதிர்பார்க் கப்பட்டபோதும் அது ஆதாரங்கள் காட் டப்படாத வெறும் அஸீஸை புகழ்ந்து ரைக்கும் நூலகவே அமைந்து விட்டிருந் தது. அதே நூலை 'விரிவான' தொடராக 'அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிர சின் பத்திரிகையான **'ஜனநாயகத் தொழிலாளி'**யில் எழுதப்போவதாக அவர் அறிவித்திருந்த போது மேற்படி குறை நிவர்த்திசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் **'வரலாற்று நாயகன்'** என்ற அத்தொடர் முடிவடைந்த நிலையில் அங்கும் அக்கருமம் பூரணப் படுத்தப்பட்டிருக்கவில்லை.
இறுதியாக லிங்கம் அவர்கள் 10 ஆண் டுகளாக அம்முயற்சியில் ஈபட்டு வரு வதை அறிந்த போது அவரின் நூல் பெரும் எதிர்பார்ப்பை கிளப்பியிருந்தது. ஆனால், இறுதியில் இந்நூலும் ஏமாற்றத் தையே தந்ததென்றால் மிகையில்லை.
நூலாசிரியர் அஸீஸ் தொடர்பான புகழேச் சியானது சில இடங்களில் சகிக்கவொ ண்ணா நிலையை ஏற்படுத்துகிறது. அவர் நூலைத் தொடங்கும் போதே 'தலைவர் அஸீஸ்' எனத் தொடங்கி அப்படியே உள் ளேயும் தொடருவது அவருடைய அஸீஸ் 'அபிமானத்தை' வெளிப்படுத்துகிறது.
சகல உப தலைப்புகளிலும் இந்தப் புகழ்ச்சியைக்காணக்கூடியதாகவுள்ளது. இந்நூலில் முக்கிய பல தகவல்களை நூலா சிரியர் கூறியிருப்பினும் அவை எங்கி ருந்து எடுத்தாளப்பட்டன என்பன பற்றிய உசாத்துணைகள் குறிப்பையோ அல்லது குறிப்பிட்ட பல நிகழ்வுகள் குறித்த தெளி வான ஆதாரத் தகவல்களையோ குறிப்பி டாதது அவ்விடயங்கள் தொடர்பான நம்பகத்தன்மை குறித்த சந்தேகங்களை வாசகர்கள் எழுப்ப வழிவகுக்கிறது. எதிர்காலத்தில் இந்நூலைக்கூட ஆதாரம் காட்ட முடியாத நிலையினை உருவாக்கி விடுகிறது.
விமர்சன பூர்வமற்ற பார்வை சம்பவங் களை செல்லுபடியற்றதாக்கிவிடும் ஒட் டம் என்பன இந்நூலின் பலவீனம். 'அப் துல் அஸீஸ்' அவர்கள் பற்றிய அஸீஸ் மன்றத்தின் பிரச்சார நூலாகவே இதனை இனங்காணக்கூடிதாகவுள்ளது. இந்நூல் மேலும் இதுகுறித்த தேடலினையும் எதிர்பார்ப்பையும் எழுப்பியிருப்பதில் இந்நூலுக்கு நிச்சயம் பங்குண்டு.

– கண்மணி



அகதி
-இதழ் - 9
வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு
15 A ரோஹினி வீதி,
கொழும்பு - 06
விலை 10/=

வடகிழக்கு விவகாரம் பேசப்படும் போதெல்லாம் வடக்கு முஸ்லிம்களது பிரச்சினைகளும் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு வடக்கு முஸ்லிம்க ளின் பிரச்சினைக்கும் தீர்வு அளிக்கக்கூடியதாக அமைய வேண்டும். அவர்களது உரிமைகள் மதிக்கப்பட்டு அவர்கள் தமது பூர்வீக பிரதேசங்களில் மீண்டும் ஐக்கியமாகவும், தன்மானத்துடனும் வாழ வழி சமைக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையுடன் வெளிவந்திருக்கிறது அகதியின் 9வது இதழ்.



குன்றின் குரல்
-96, ஏப் - ஜுன் இதழ்
தோட்டப் பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகம்,
30, புஷ்பதான மாவத்தை,
கண்டி.
விலை10/=

மலையகசிறுகதைகளும்இனத்துவமும் (சாரல் நாடன்), மலையக இலக்கியம் மறக்கப்படக் கூடாத மறுபக்கம் (பேரா. கா. சிவத்தம்பி), மலையக மக்களின் கல்வி வளர்ச்சி ஆய்வியல் முன்னோடி ஜி.ஏ. ஞானமுத்து (சோ. சந்திரசேகரன்) ஆகிய குறிப்பிடத்தக்க கட்டுரைகளைத் தாங்கி வந்திருக்கிறது இந்த இதழ்.



தமிழ் நயம் '95
றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம்
கொழும்பு

இம்மலரில் பாடசாலைகளில் ஏட்டுக் கல்விசாராத புறக்கிருத்திய நடவடிக்கை களில் மாணவர்கள் ஈடுபடுவது தொடர் பாக சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ளவர்களுடனான நிலக்ஷன் சுவர்ண ராஜாவின் உரையாடலும் பேரா.கா. சிவத்தம்பியின் 'நாடகக்கலை: அதன் அமைப்பும் அழகியற் கவர்ச்சியும் என்ற குறிப்பும் குறிப்பிடத்தக்கன. மாணவர் களின் ஆர்வத்துக்கு ஆசிரியர்கள் இன்னும் சிறப்பாக வழிகாட்ட வேண்டி யதை மலர் புலப்படுத்துகிறது.



## கவி வலி தெரியா விமர்சகர்!

யாழ்ப்பாண முஸ்லிம்கள் சார்பில் எழுதப்பட்ட கடிதம் (சரிநிகர் 99) ஒவ்வொரு தமிழனையும் வெட்கப்படச் செய்ய வேண்டும். ''இன்னா செய்தாரை ஒறுத்தல்'' எவ்வாறு என்று நன்றாகவே நடைமுறையில் காட்டியுள்ளனர். இத்தகைய நிதானமும் நற்பண்பும் கொண்ட ஒரு மடலைக் கண்டு வெகு காலம். இது பிற தேசிய இனத் தலைவர்கட்கு ஒரு நல்ல முன்மாதிரி.

சு.வி.கவிதைத் தொகுதிகளில் இரண்டை மட்டுமே படித்திருக்கிறேன்.காலத்துயர் இதுவரை கைக்கெட்டவில்லை. ''காற்று வெளிக்கிராமம் நான் மிகவும் விரும்பிய கவிதைகளையுடையது. சரிநிகரில் விமர்சித்தவர் சு.வி.யின் கவிதைகளின் வலிமையை உணர இயலாது தவிப்பது அவரது வரிகளிற் தெளிவாகவே தெரிகின்றன. கவிதையைப் போன தலைமுறைக் கவிதை, இந்தத் தலைமுறைக் கவிதை, இருபத்து மூன்றாம் நூற்றாண்டு தலைமுறைக் கவிதை என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி கொச்சைப்படுத்தி எழுதுவது எளிது. கவிதை வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு பொதுவாக எந்தக் கவிஞனும் கவிதை எழுத முற்படுவதில்லை. 'ஹைக்கூ' மாதிரி எதையாவது புதுமைக்குப் பண்ணி எவருமே கவிதையை வளர்த்ததும் இல்லை. சு.வியின் கவிதை மொழியழகு அவருக்குரியது. அவரது சமூகப் பார்வைக்கு விசுவாசமாகவே அவர் எழுதுகிறார். அதனுடன் உடன்பாடில்லையாயின் அதை விமர்சிக்கலாம். அவரது கவித்துவம் குறைபாடானதெனின் அதைச் சுட்டிக்காட்டலாம். அவரது எழுத்தில் நேர்மையில்லையாயின் அதைக் கண்டிக்கலாம். சு.வியுடன் எனக்குக் கருத்து உடன்பாடு அதிகமில்லை. ஆயினும் இன்னும் இன்னும் பல காலத்துக்கும் ஈழத்துக் கவிதை கணிப்பிலெடுக்க வேண்டிய முக்கிய கவிஞர் அவர் என்பேன். சு.வியின் பார்வையைத் திருத்துவதற்கு விரும்பும் விமர்சகர், மாதிரிக்கு இரண்டு கவிதைகளை எடுத்து தனது கருத்தையும் கவித்துவத்தையும் விமர்சன ஆற்றலையும் வெளிப்படுத்தியிருக்கலாம். இந்த மாதிரி அரை வேக்காட்டு விமர்சனம் எழுதுவதற்குப் புனைபெயர் நல்ல கவசம் தான். மதிலுக்குப் பின்னாலிருந்து கல்லெறிவதைவிடுத்து வெளியாக வந்து நெஞ்சில் உரத்துடன் விமர்சிக்கும் தைரியமுள்ள விமர்சகர்கள் தான் இன்றைய தமிழ் இலக்கியத்துக்குத் தேவை.

அரங்காடிகளது -1 விமர்சனம் எழுப்பிய விவாதம் ஓயாது போற் தொடர்கிறது. இயக்குநரின் பெயர் குறிப்பிடாதது ஒரு பாரிய பிரச்சினையாக சிலருக்கு தெரிகிறது. இது நமது ஆஸ்திக, குருகுல மரபின் வழிவந்த ஒரு கோளாறே தெரியாது. உலகத்துக்கு கடவுள் மாதிரி நாடகத்துக்கும் படைக்க ஒரு பிரம்மா, காக்க ஒரு விஷ்ணு, சுட்டெரித்து இடித்து அழிக்க ஒரு சிவபெருமான், தேவையோ தெரியாது. இது பற்றி தாஸீயஸுடன் பேசினேன். தான் பங்கு பற்றும் 'களரி' அமைப்பு கடந்த ஏழு வருடமாக இயக்குநர் என யாரையும் குறிப்பிட்டதில்லை என்றார். இப்போக்கு நவீன வீதி நாடகம் போன்ற செயற்பாடுகளுக்குப் பொருந்தும். சுவடி இல்லாத நாடகங்கள் பல இன்று உருவாகின்றன. குறிப்பிட்ட நாடகத்தை நாடகத்துறை பற்றிய புரிதலுடன் யாராவது விமர்சித்து அதன் குறைநிறைகளை மதிப்பிடுவார்களா? இந்த விவாதத்தினின்று -1 நாடகத்தைப் பற்றி என்னால் அதிகம் அறிய இயலவில்லை.

*சி. சிவசேகரம்,*
*லண்டன்.*

## ஆலோசனையும் சொல்லுங்களேன்!

கடந்த ஒரு தசாப்தகாலமாக முஸ்லிம் காங்கிரசானது இலங்கை வாழ் முஸ்லிம்களது வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கின்றது என்ற உண்மையினை இலங்கையில் சந்திரிகா அரசு உருவாவதற்கான அதன் சாதகமான பங்களிப்பின் பின்புலத்தில் நின்று பார்க்கும் எவரும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது.

இலங்கை முஸ்லிம்களின் தற்போதைய ஏக அரசியல் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரஃப்தான் என்பதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும். ஒரு சமூகத்தின் தலைவர் என்ற வகையில் சகோதரர் அஷ்ரஃப் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையும் அச்சமூகத்தின் வரலாற்றின் மிகப்பெரிய நிகழ்வுகளிற்கும் மாற்றங்களிற்கும் காரணமாக அமையலாம். ஆகவே, அவரின் ஒவ்வொரு செயற்பாட்டையும் துருவித்துருவி ஆராய்வது நியாயமானதுதான்.

இந்த அடிப்படையில் சகோதரர் அபூநிதால் என்பவர் அஷ்ரஃபின் எந்தவொரு நடவடிக்கையையும் மிகவும் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றார். அபூநிதால் அவர்களின் முஸ்லிம்கள் பற்றிய ஆழமான அறிவும், தூரநோக்குள்ள சிந்தனைப் போக்கும் எவ்வகையானதென்பதை அவரின் கட்டுரைகள் தெளிவுபடுத்துகின்றன.

அஷ்ரஃப் சம்பந்தமான அபூநிதாலின் விமர்சனங்கள் எத்தனை வீதம் உண்மையானவை அல்லது பொய்யானவை என்பது ஒரு புறமிருக்க, அபூநிதால் அவர்கள் ஒன்றைக்கவனத்தில் கொள்ள வேண்டும். எவ்வாறு நீங்கள் அஷ்ரஃபை விமர்சிக்கின்றீர்களோ அந்தளவுக்கு நியாயமான மாற்றுக்கருத்துக்களையும் முஸ்லிம் சமூகத்திற்கான தீர்வுத்திட்டங்களையும் முன்வைக்கவேண்டும். இவற்றை உள்ளடக்காத உங்களின் கட்டுரைகள் வெறுமனே மக்களை குழப்பியதாகவே அமையும்.

எனவே, உங்களது கடுமையான விமர்சனத்திற்கு ஏற்றவகையில் அதற்கான பிரதீயிடுகள் எவ்வாறு அமைய வேண்டுமென்றோ அல்லது அஷ்ரஃப் இவ்வாறான சிந்தனைப்போக்கில்தான் நகரவேண்டுமென்றோ அல்லது அஷ்ரஃப் இவ்வாறுதான் செயற்படவேண்டுமென்றோ எந்தவொரு செயற்திட்டத்தையும் உள்ளடக்காத உங்களது வெளியீடுகள் ஒருவகையான சந்தேகப்போக்கை வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்தி வந்திருக்கின்றது.

எனவே தொடர்ந்து உங்களது நியாயமான விமர்சனங்களை வெளியிடுவதோடு அவற்றிற்கான பதிலீடுகளையும் ஆலோசனைகளையும் நீங்களே முன்வைப்பது தான் பத்திரிகாதர்மமும் நாகரீகமுமாகும்.

*அஹமத் ஷிப்லி*
*காத்தான்குடி*

## தேவை அரசியல் மருந்து இல்லை!

தபால் தந்தி தொலைத்தொடர்புகள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அவர்களின் தேர்தல் பிரதேசங்களில் ஒன்றான வாழைச்சேனைப் பகுதியில் தொலைபேசிக்கு அடிக்கடி புற்றுநோய் ஏற்பட்டு சேவைகள் அடிக்கடி பல வாரங்களுக்கு தடைப்படுகின்றன. இது சம்பந்தமாக மாவட்ட தொலைத் தொடர்பு பொறியலாளருக்கு அறிவித்தாலும் அவர் எந்தவித நடவடிக்கையும் எடுப்பதுமில்லை.

நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் நான் அதற்குத் தயார் என்ற நிலைப்பாட்டிலேயே பொறியியலாளர் நடந்து கொள்வது வியப்பாகவுள்ளது. இந்த நாட்களில் சர்வதேச ரீதியான நவீன தொலைபேசி வசதிகள் விருத்தி பெற்றுள்ள இந்த நாட்களில் ஓட்டமாவடியில் இருந்து 20 மைல்களுக்கு அப்பால் உள்ள மட்டக்களப்புக்கு தொடர்பு கொள்வதாயினும் மிகவும் சிரமப்படவேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் விட ஒரு அதிசயம் ஒருவருடைய தொலைபேசி பழுதடைந்தால் அதைத்திருத்துவதற்கு ஒரு மாதகாலம் செல்கிறது. அதுவும் சனிக்கிழமைகளில்தான் திருத்துவதற்கு வருகின்றார்கள். ஏனெனில் அப்படியென்றால் தான் மேலதிக ஊழியம் (Over Time) கிடைக்குமாம்.

பிரதியமைச்சர் அவர்களே ஏதாவது மாற்று மருந்துகள் உண்டா? அந்த மருந்து அரசியல்ரீதியாக அல்ல, நிர்வாக ரீதியாக வழங்கப்பட வேண்டும். வழங்குவீர்களா பிரதியமைச்சர் அவர்களே!

*அஹமட் ஹிஸாம்*
*ஓட்டமாவடி*

## தொடர்க அபூநிதால்

சரிநிகர் இதழ் 100இல் அபூநிதாலின் கட்டுரை வாசித்தேன். அது பற்றி எனது கருத்தை தெரிவிப்பது கடமை என நினைக்கிறேன்.

அஷ்ரஃப் தற்காலிக நலன்களுக்காக வேண்டி இப்போது அரசியல் நடாத்துகிறார். வடமாகாண முஸ்லிகளையும், வடக்கிழக்கில் அம்பாறைக்கு வெளியே வாழும் முஸ்லிம்களையும் பலி கொடுப்பதற்கு அஷ்ரஃபின் அரசியல் மூளை திட்டமிடுவதை தமிழர்களுக்கான கிழக்குத் தனிக்கட்சி காட்டி நிற்கிறது.

இவ் ஆபத்து நிலைபற்றி முஸ்லிம்களில் எத்தனை பேர் சிந்தித்தனரோ எனக்குத் தெரியாது! யாரும் அஷ்ரஃபின் இச்செய்கைக்கு எதிராகக் குரல் எழுப்பியதாகத் தெரிவில்லை; அபூநிதாலைத் தவிர.

அஷ்ரஃபுக்கு தற்காலிக நலன்களே முக்கியமானது. அபூநிதால் முஸ்லிம்களின் நீண்டகால நலன்களிலிருந்து எழுதுகிறார் என ஆணித்தரமாக நம்புகிறேன். வடக்கிலிருந்து அனைத்தையும் இழந்து வந்து அவலமாக வாழும் எம்போன்றவர்களுக்குத்தான் நிலைமை புரியும். புரிந்தவர்கள் அஷ்ரஃபின் இந்நடவடிக்கைகளுக்கு ஒரு போதும் துணை போக மாட்டார்கள். முஸ்லிம் சமூகத்தில் அபூநிதால் போன்றவர்கள் இருக்கிறார்கள், நியாயமாக சிந்திக்கிறார்கள் என்பது நம்பிக்கையாக இருக்கிறது. உங்கள் பத்திரிகையில் அபூநிதால் தொடர்ந்தும் எழுத வேண்டும். முஸ்லிம் புத்திஜீவிகளின் மௌனம் முஸ்லிம் சமூகத்திற்கு ஆரோக்கியமாகாது.

*எம்.ஏ.றகீம்*
*பாணந்துறை*

## பங்களாதேஷ் தாரைவார்க்கவில்லை!

கடந்த 101வது ஜூலை இதழில் வெளிவந்த தங்களது ''பணிப்பெண் வாழ்வு'' என்ற ஆய்வுக்கட்டுரையைப் பார்த்ததும் தங்களை மிகவும் பாராட்ட வேண்டும் போல் இருந்தது. பாராட்டுக்கள்!! இன்றைய சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமானதொரு கட்டுரையாக அது அமைந்திருந்தது. எமது இஸ்லாமிய சிந்தனை வாதிகளை அக்கட்டுரை இவ்விடயம் சம்பந்தமாக பாரிய மாற்றத்திற்குட்படுத்தும், உட்படுத்த வேண்டும் என்பதே எனது அவாவாகும். அக்கட்டுரை சம்பந்தமாக ஒரு விடயத்தைக் கூறவேண்டும்.

நான் கடந்த 3 வருடங்கள் சவூதி அரேபியாவில் பணிபுரிந்து விட்டு சென்ற வருடமே நாடு திரும்பினேன். நான் சவூதியிலிருந்த மூன்று வருடக் காலப்பகுதியில் ''பணிப்பெண்ணாக வேலை செய்த ஒரு பங்களாதேஷ் முஸ்லிம் பெண்ணைக் கண்டதும் இல்லை. அறிந்ததும் கிடையாது. என்னால் நிச்சயமாக சவூதியில் பங்களாதேஷ் முஸ்லிம் பெண்கள் தாதி, சமையல், தையற்காரர், மேற்பார்வையாளர் போன்ற வேலைகளைத்தவிர வீட்டுப்பணிப்பெண்களாக வேலைசெய்யவில்லை எனக்கூறமுடியும். எமது நாட்டை விட எத்தனையோ மடங்கு கல்வியறிவிலும் பொருளாதாரத்திலும் கீழ்மட்டத்திலுள்ள பங்களாதேஷ் முஸ்லிம்நாடு என்ற ஒரே காரணத்திற்காக ஒரு முஸ்லிம் பெண்களைக்கூட பணிப்பெண்ணாக அனுப்பி (எம் நாட்டைப்போன்று) பலிக்கடா ஆக்கவில்லை. சவூதியில் மாத்திரமின்றி ஏனைய அரபு நாடுகளிலிலும் பங்களாதேஷ் முஸ்லிம் பெண்கள் பணிப்பெண்களாக வேலை செய்யவில்லையென்றே கூடுதலாக அறிகிறேன். இலங்கை, இந்தோனிஷியா, இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து பணிப்பெண்களாகச் சென்றாலும் 75% பெண்கள் இலங்கை, இந்துனேஷியா, ஆகிய நாடுகளிலிருந்தே செல்கிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

எனவே தங்களது சிறந்ததொரு கட்டுரை தொடர்பாக பங்களாதேஷ் தனது நாட்டில் வறுமை காரணமாக அராபிகளின் தனவந்தனத்திற்கு முஸ்லிம் பெண்களை தாரை வார்க்கவில்லை, எனவும் அக்கட்டுரையில் அப்பந்தி) மாற்றத்திற்குட்பட வேண்டியது எனவும் அறிந்ததை கூறிவைக்க விரும்புகிறேன்.

*எம்.எஸ்.எம் பாயிஸ்*
*காத்தான்குடி - 06*

## யாழ்ப்பாணம்- பாஸ்பாணம்

''சரிநிகர்'' எமதூர் ஓவியர்களான சாமி - மொறாயஸ் போன்றோரையும் முக்கியப்படுத்தலாம்.

குழந்தைகள் பற்றிய ஒரு தெளிவான புரிந்துணர்வை அடிகோலும் ''குழந்தைகளுக்கும் உங்களுக்கு மிடையே..'' கட்டுரை ஒரு தரமான முயற்சி பலனுள்ளது.

முஸ்லிம் சமுதாய உலமாக்கள் சம்பந்தமாயும் புத்திஜீவிகள் சம்பந்தமாயும் புதியதொரு அடிப்படைத் தேவையின் பக்கம் திசை திருப்பியிருக்கிறார் ''அபூநிதால்''.

இனி யாழ்ப்பாணத்தை ''பாஸ்பாணம்'' என மாற்றினாலும் மாற்றி விடுவார்கள் போலிருக்கிறது.

தொடர்பு சாதன கெடுபிடிகளுக்கு மத்தியிலும் ''சரிநிகர்'' தனது செயல்பாட்டில் உறுதியாக இருப்பதாக எனக்குப்படுகிறது.

*'முல்லைத்தமிழினி'*
*ஒட்டுசுட்டான்*

## அடிப்படைக் காரணம் யார்?

சரிநிகர் தனது நூறாவது இதழையும் சந்தித்து விட்டதை இட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். எனக்கு சரிநிகரை 3 வருடமாகவே தெரியும். இந்த 3 வருடத்திலும் நீங்கள் பட்ட இன்னோரன்ன துன்பங்களை நான் நன்கு அறிவேன். பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் சரிநிகரின் குரல் மேலோங்கி ஒலித்ததை இட்டுப் பெருமைப்பட வேண்டியது சரிநிகர் அல்ல; உன் வாசகர்களாகிய நாங்களே! உன் பணி என்றும் தொடர நல்வாழ்த்துக்கள்.

அத்தோடு உன் நூறாவது இதழில் வெளியாகிய 'இலவன்குளம் படுகொலை'' பற்றிய தகவல்கள் என்னை மிகவும் சோகத்துக்கு உள்ளாக்கி விட்டது. ''கிளிவெட்டி குமாரபுரத்தில்'' நடந்த கொடூரமான செயலையும், இலவன்குளம் படுகொலைச் செயலையும் படித்த எனக்கு என் கண்களில் கண்ணீர் பெருகியது. அத்தோடு ஒரே விதமான மனக்கவலை உருவாகியதே தவிர இரண்டிலும் எனக்கு வித்தியாசம் தோன்றவில்லை. யாராயினும் உயிர் அல்லவா? இன்றைய இலங்கையின் பிரச்சினை காரணமாக பாதிப்படைவது அரசியல் வாதிகளா? அல்லது ஏழைமக்களா? நாட்டில் நடக்கும் பிரச்சினைக்கு இந்த ஏழைகள் தான் பலிக்கடாக்களா? அல்லது இவ்வாறான கொடூரமான செயல்களை செய்வதன் மூலம் பிரச்சினை தீர்ந்து விடுமா? படையினர் தம் கோபத்தை தமிழ் மக்கள் மீதும், புலிகள் சிங்கள மக்கள் மீதும் காட்டுவதால் இவர்கள் என்ன தான் பயன் அடைகிறார்கள்? உண்மையில் மேற்கூறிய நிகழ்வுகள் நடப்பதற்கு அடிப்படைக் காரண கர்த்தார்கள் யார் என்பது விடைகாணப் படவேண்டிய கேள்வி?

*எம். கருணாகரன்*
*எட்டியாந்தோட்டை*

## வசதிக்கேற்றபடி நேரசூசிகை!

ஏறாவூர் பொது நூலக வாசகர் பகுதி குறிப்பிட்ட நேரத்திற்குத் திறக்கப்படுகின்றது. ஆனால், அதனுள் இருக்கும் புத்தகம் இரவல் பெறுகின்ற பகுதி திறக்கப்படுவதில்தான் அடிக்கடி நேரமாற்றம் செய்யப்படுகிறது. இது உத்தியோக பூர்வமாக செய்யப்படும் நேரமாற்றமல்ல, ஊழியர்கள் தங்களின் வசதி, வாய்ப்புக்களுக்கேற்ப அடிக்கடி வழக்கமாக செய்து கொள்ளும் ஒரு மாற்றம்தான். இருந்தாலும் நூலக நுழைவாயிலில் வாசகர்களின் நலன் கருதி நூலகம் திறக்கப்படும் நேரமும், புத்தகம் இரவலாகக் கொடுக்கப்படும் நேரமும் தெளிவாக தொங்கவிடப்பட்டுள்ளதுடன் அவைகள் மூடப்படும் நேரமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தாலும் அந்த நேர சூசியின் பிரகாரம் நூல்நிலைய ஊழியர்கள் இயங்காததால் வாசகர்களுக்கும், நூலக ஊழியர்களுக்கும் இடையே அடிக்கடி வாய்த்தகராறுகள் ஏற்பட்டு வருகின்றன. இதைத் தவிர்க்க வழி தெரிந்தோர் வகை செய்வார்களா?

*ஈஸன்*
*ஏறாவூர்*

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

# தொண்டர்படை?

''யாழ்நகரை ஒரு சமாதான நகராகக் கட்டியெழுப்புவோம்'' எனச் சில வாரங்களுக்கு முன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க அவர்கள் கூறியிருந்தார்கள். கவர்ச்சி மிகுந்த வார்த்தைகளை மிகவும் ஜனரஞ்சகமான வகையில் தொர்பூடகங்களின் மூலமாகப் பிரச்சாரம் செய்வதில் கடந்த இரு வருடங்களாக ஜனாதிபதி பெரும் சாதனையையே புரிந்து வந்துள்ளார். ஆனால், அவரின் வாக்குறுதியில் சமாதானம் தொடர்பானவை வெற்று வார்த்தைகளாகவே திகழ்கின்றன என்பதை மறுத்துவிட முடியாது.

இந்த ''சமாதானப் பணியைப்'' பூர்த்தி செய்வதையும் யாழ் குடாநாட்டைப் புனரமைப்பதையும் நோக்கமாகக் கொண்ட பத்தாயிரம் பேரைக்கொண்ட ''சமுர்த்தி தொண்டர் படையைத்'' திரட்டப் போவதாக அரசு அறிவித்துள்ளது. இவர்களுக்கு மூன்று வார கால இராணுவப் பயிற்சி அளிக்கப்படும் என்றும், மூவாயிரம் ரூபாய் மாதாந்த சம்பளமாக வழங்கப்படுமென்றும் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இந்தப் பத்தாயிரம் பேரும் வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் இருந்து திரட்டப்படவிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

பேரினவாத ஆதிக்கத்தை தமிழ் மக்கள் மீது நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக உருவாகிய யுத்தத்தினால் யாழ் குடாநாடு சின்னாபின்னமாக சிதைக்கப்பட்டது. எனவே இப்பிரதேசத்தைப் புனரமைப்புச் செய்யும் பணியில் தென்னிலங்கை மக்களின் தோழமையையும் சமூகக்கடமையையும் நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டு சுயேச்சையான தொண்டர்களின் பங்களிப்பைச் செலுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்வது என்பது வேறு விடயம். இது சிதைந்து போயுள்ள இன உறவுகளை சீர் செய்யவும், பல்லின மக்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்க்கவும் வழி வகுக்கும். ஆனால், அரசு மேற்கொண்டுள்ள இம்முடிவு பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. யாழ் குடாநாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் இருக்கும் போது அவர்களுடைய பிரதேசத்தைப் புனரமைப்பதற்கு தென்னிலங்கையிலிருந்து சம்பளம் கொடுத்துத் தொண்டர்களை அனுப்ப முடிவு செய்தது ஏன்? புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபடும் தொண்டர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டியதன் நோக்கம் தான் என்ன? பலலட்சம் ரூபாய்களைச் செலவு செய்து பல்வேறு தொடர்பூடகங்களினூடாக மாபெரும் பிரச்சாரங்களை மேற்கொண்டும், நாடு பூராவும் சுவரொட்டிகளை ஒட்டியும் ''ரிவிரசவின் வெற்றியை'' பெருவிழாவாகக் கொண்டாடியும் பத்தாயிரம் சிங்கள இளைஞர்களை அரசின் சிங்கள மயப்படுத்தப்பட்ட இராணுவத்திற்கு சேர்த்துக்கொள்ள முடியாமற்போன இவ்வரசு அக்குறைப்பாட்டை இம்முயற்சியின் மூலம் தீர்த்துக்கொள்ள முற்படுகின்றதா? என்பன எழுகின்ற கேள்விகள்.

இன சமாதானத்திற்கான ''ஒளிப்பந்தத்தை'' தலைக்கு மேல் ஏந்திக்கொண்டு பதவிக்கு வந்த இவ்வரசு, இவ்வரசின் மேல் நம்பிக்கை வைத்த தமிழர்களுக்குத் துரோகம் செய்ததே ஒழிய இதுவரை தமிழ்மக்கள் நம்பத்தகுந்த வகையில் எதையுமே செய்யவில்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பினரை இலக்காகக்கொண்டு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையை, இழுத்தடிப்பதாக அரசின் மீது குற்றம் சாட்டி புலிகள் முறித்துக் கொண்டதன் விளைவாக முழுத்தமிழினமும் பாதிப்படையக் கூடிய வகையிலான யுத்தமுனைப்புகளில் இறங்கியது அரசு. ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் யாழ் நூலகம் எரித்து சாம்பராக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், அதைப் புனர்நிர்மாணம் செய்யப்போவதாகவும் கூறிக்கொள்ளும் அரசு, அந்நூலக எரிப்பை விட மிகக் கொடூரமான முறையில் முழுமையான இராணுவ சக்தியையும் பயன்படுத்தி யாழ்நகரைக் கேந்திரமாகக்கொண்ட யாழ் தமிழ் மக்களின் பாரம்பரிய கலாசாரத்தையே ரிவிரச -1 நடவடிக்கையின் மூலமாக சின்னாபின்னமாக்கியதன் பின்னணியிலுள்ள உள்நோக்கத்தை மறந்து இந்த ''சமுர்த்தி தொண்டர் படைதிரட்டல்'' நடவடிக்கையைப் பற்றிச் சிந்திக்க முடியாது.

இவ்வரசுடனான பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டு புலிகள் போரை ஆரம்பித்ததன் பின், புலிகளுடனான மட்டுப்படுத்தபட்ட யுத்ததை நடத்திக்கொண்டு மறுபுறத்தில் தமிழ் மக்களுக்கு அளித்த சமாதானத்திகான வாக்குறுதியை நிலைநாட்டும் அரசியல் முயற்சிகளில் இறங்குவதாகத் திரும்பத்திரும்பக் கூறிய போதும் அவற்றை மந்த கதியில் விட்டு விட்டு முழு முயற்சியையும் யுத்த முனைப்புகளுக்காகப் பயன்படுத்துவதே இவ்வரசின் செயற்பாடுகளாக உள்ளன.

இது சமாதானத்தீர்வை விட இராணுவத்தீர்விற்கான இவர்களின் முனைப்பை தெளிவாக அம்பலப்படுத்துகின்றது.

யுத்தகளத்தின் வெற்றிகள் என இவ்வரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு பிரச்சாரமும் தென்னிலங்கையின் பேரினவாத, யுத்தவாத சக்திகளை உற்சாகமடைய வைக்கின்ற அதேவேளையில் அரசின் தீர்வுத்திட்டம் படிப்படியாக தரம் குறைக்கப்படுவதற்கும் காரணியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இத்தகைய நிகழ்வுகளின் அடிப்படையில்தான் இராணுவ மயப்படுத்தப்பட்ட ''சமுாத்தி தொண்டர் படையை'' யாழ் புனர் வாழ்வுப் பணிகளுக்கு அனுப்ப அரசு எடுத்துள்ள முடிவை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

யுத்தத்தினால் சின்னாபின்னமாக்கப்பட்ட யாழ் குடாநாட்டைப் புனரமைக்க வேண்டிய கடமை இலங்கை அரசைச்சார்ந்தது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஏனெனில் அப்பிரதேசம் சின்னாபின்னமாவதற்கு வழிவகுத்ததும் பதவியிலிருந்த அரசுகளே எனவே இப்பணி சிறந்த முறையில் நிறைவேற்றப்பட வேண்டுமேயானால், தமது வளங்களை இழந்து தவிக்கும் யாழ் குடா நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழ், முஸ்லிம் மக்களைக் கொண்ட தொண்டர் அணியை உருவாக்குதல் வேண்டும். அதற்குத் தேவையான சிவில் நிர்வாகச் சூழ்நிலை யை உருவாக்குவதை மிக முக்கிய கடமையாகக் கருதிச் செயற்படல் வேண்டும்.

வெளிமாகாணங்களில் இருந்து தொண்டர் அணியை அனுப்பவேண்டுமேயானால், அப்படி அனுப்புவதற்கான தீர்மானத்தை எடுக்கவேண்டிய பொறுப்பு யாழ் குடாநாட்டுத் தமிழ், முஸ்லிம் மக்களுக்கே இருத்தல் வேண்டும். அத்தோடு இப்படி அனுப்பப்படும் அணியினர் இராணுவமயப்படுத்தப்படாதவர்கள் என்பதை உத்தரவாதப்படுத்துதலும், இப்புனர்வாழ்வுப் பணி முழுமையாக இராணுவக் கட்டமைப்புக்குள் இருந்து விடுவிக்கப்பட்டு முழுமையாக சிவில் நிர்வாகப் பொறுப்பின் கீழ் மேற்கொள்ளப்படுவது உத்தவாதப்படுத்தப்படலும் அவசியமாகும்.

சமாதானப் போர்வைக்குள் யுத்தமுனைப்புக்களை முன்னெடுத்துச்செல்ல ''சுது நெலும்'' இயக்கத்தை அமைத்தது போல யாழ் குடாநாட்டில் புனர் நிர்மாணப் போர்வைக்குள் இராணுவ முனைப்புக்களை முன்னெடுத்துச் செல்ல ''சமுர்த்தி தொண்டர் படையை அமைக்க முயற்சிக்கிறது அரசு!.

இம்முயற்சி அரசு சொல்கிற சமாதானத்தையோ, புனர்நிர்மாணத்தையோ ஏற்படுத்த வழிவகுக்காது. பதிலாக அதற்கு எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும். இதனை அரசு புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளுமா?

## மட்டக்களப்பு:

# அலை வேகம் — 2 ஆல் அகதிகள் ஆயிரம்!

மட்டக்களப்பின் நகரங்களிலும் பிரதான வீதிகளிலும் நிலைகொண்டிருந்து வீதிப்பாதுகாப்பு நடவடிக்கைகளிலும், தாங்கள் நிலை கொண்டிருக்கும் கிராமங்களில் சுற்றிவளைப்பு தேடுதல்களிலும், மட்டக்களப்பின் ஷெல்தாக்குதல்களிலும் ஈடுபட்டிருந்த படையினர் நீண்ட காலத்திற்குப் பின்னர் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் பிரதேசங்களை நோக்கி அலைவேகத்தாக்குதல்களை தொடுத்து இரண்டு நாட்களின் பின்னர் மீண்டும் விரைவாக தங்கள் முகாம்களுக்கே திரும்பியுள்ளனர்.

10ம் திகதி புதன்கிழமை அதிகாலை மாங்கேணியில் ஹெலிமூலம் இறக்கப்பட்ட இராணுவ அதிரடிப்படையினரும் கடல் மார்க்கமாக வந்திறங்கிய இரண்டு இராணுவ அணிகளும் சேர்ந்து வாகரை நோக்கி நகர்ந்தன.

பனிச்சங்கேணியில் நடந்த மோதலைத் தவிர, புலிகளுக்கும் வாகரையை நோக்கி முன்னேறிய படையினருக்கும்இடையே பெரிதாக எந்த மோதல்களும் இடம்பெறவில்லை. ஆனால், பொதுமக்கள் குடியிருப்புகளை நோக்கி விமானங்களும் ஹெலிகளும் கடுமையாக தாக்கின. முன்னேறும் படையினர் ஷெல்வீச்சுக்களை நடத்தினர். இதனால் பாடசாலைகள், வீடுகள் என்பன கடும் சேதமடைந்ததுள்ளதாகத் தெரியவருகிறது.

படையினரின் இந்த நடவடிக்கைகளினால் வாகரை, பனிச்சங்கேணி, கதிரவெளி, பண்டித்தீவு, பால்சேனை, அம்பந்தனாவெளி ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இருப்பிடங்களை விட்டு ஒட்டமெடுத்தனர். 20கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரத்தை கால் நடையாக நடந்தே நாசிவன் தீவுக்கு வந்து அங்கிருந்து தோணி மூலம் வாவியைக் கடந்து வாழைச்சேனையைச் சேர்ந்தனர்.

பேத்தாளை அகதி முகாம், விநாயகபுரம் அகதிமுகாம், பேத்தாளை விபுலானந்த வித்தியாலயம், புதுக்குடியிருப்புக் காளி கோயில் என்பனவற்றில் ஆயிரக கணக்கான அகதிகளும் இடம் தேடிக்கொண்டனர். இன்னும் பலர் இரால்ஒடை, காயங்கேணி, நாசிவன்தீவு ஆகிய இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். வாகரை மட்டும் சென்று இரண்டு நாட்களில் தங்கள் முகாம்களுக்குத் திரும்பிய படையினரின் சாதனை எல்லாம் நூற்றுக்கணக்கான வீடுகளை நாசமாக்கியதும், ஆயிரக் கணக்கான மக்களை இருப்பிடங்களை விட்டு வெளியேற்றி அதிகளாக்கியதும் தான்.

மீண்டும் அலை வேகம் -2 என்ற பெயரில் மட்டக்களப்பில் கிரான், சித்தாண்டிக்கு மேற்கேயுள்ள தொப்பிகலை, புலிபாய்ந்தகல், பகுதிகளை நோக்கி வியாழன் மீண்டும் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது. புலிபாய்ந்தகல் பகுதியில் புலிகளுடன் நடந்த கடும் மோதலை அடுத்து படையினர் அன்றைய தினமே முகாம்களுக்குத் திரும்பினர். படையினரின் கடுமையான ஷெல் தாக்குதல்கள், குண்டுத்தாக்குதல்களினால், புலிப்பாய்ந்தகல், பெண்டுகள் சேனை, கோராவெளி, பூலங்காடு ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் முரக்கொட்டாஞ்சேனை வாவியைக் கடந்து கிரான், முரக்கொட்டாஞ்சேனை, சித்தாண்டி ஆகிய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

முன்னரும் இரண்டு தடவை இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் படையினரின் திடீர்த்தாக்குதலினால், அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். வயலும் காடு சார்ந்ததுமான இவ் விவசாயக் கிராமங்களிலிருந்து அகதிகளாகும் இம்மக்களுக்கு அரசின் நிவாரணப் பொருட்கள் கூட ஒழுங்காகக் கிடைப்பதில்லை.

இதைவிட மட்டக்களப்பில் அரச படைகள் நிலைகொண்டிருக்கும் இடங்களில் பொதுமக்கள் மீண்டும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளனர்.

மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலத்தைச்சேர்ந்த மாணவனான் மாணிக்கம் புஷ்பாகரன் 18ம்திகதி வியாழன் ஏறாவூர் வம்மியடியில் வைத்து இராணுவத்தால் விசாரணைக்கென கூட்டிச்செல்லப்பட்டு பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இப்போது மட்டக்களப்பு நகரம் கூட ஆறுமணியுடன் ஒய்ந்து விடுகிறது. காலைவேளையில் கோட்டை முனைப் பாலத்தடியில் நகருக்குச் செல்லும் அனைவரும் நீண்ட வரிசையில் நிற்பதைக் காணக்கூடிதாக உள்ளது. கடும் சோதனையின் பின்னரே நகருக்குள் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். முன்னைய காலங்களில் அரச படைகளின் அடாவடித்தனங்களும் இருள் சூழ்ந்த நிகழ்வுகளின் அச்சங்களும் மெல்ல மெல்ல மட்டக்களப்பு எங்கணும் பரவிக் கொண்டிருக்கிறது.

*மட்டக்களப்பிலிருந்து*
*குருஷேத்திரன்.*

# ஆளுங்கட்சியினர் ஆர்ப்பாட்டம்!

அமைச்சர் அஷ்ரஃபின் கீழ் இயங்கி வரும் இலங்கைத் துறைமுக அதிகார சபையில் இனவிகிதாசாரத்துக்கும் அதிகமாக முஸ்லிம்கள் நியமிக்கப்படவிருப்பதாக அறிந்த சிங்கள மக்கள் திருகோணமலை அலுவலகத்துக்கு முன்னால் கடந்த ஜூலை 11 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருக்கிறார்கள்.

ஆளுங்கட்சி அரசியல் பிரமுகர் ஒருவராலேயே இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

துறைமுக அதிகார சபைக்குள் நுழைந்த சிங்கள இளைஞர் பலர் அங்குள்ள அதிகாரிகள் சிலரையும் பயமுறுத்த முனைந்ததாகத் தெரிய வருகிறது.

தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு நேர்முகத் தேர்வுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசுக்கமைய 73 முஸ்லிம்களும் 34 தமிழர்களும் அழைக்கப்பட்ட போதே இச்சம்பவம் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்துடன் இணைந்து தமிழ் ஊழியர்கள் சிலரும் சிறிது நேர பிக்கெட்டிங் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

துறைமுக அதிகார சபை நியமனங்களில் தொடர்ந்து தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதாக இவர்கள் குற்றஞ் சாட்டினர். பழைய ஆட்சியில் சிங்களவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. அப்போதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள். புதிய ஆட்சியில் முஸ்லிம்களுக்கு நியமனம். இப்போதும் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்கள் என்று அவர்கள் தெரிவித்தனர்.

எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத வகையில் முஸ்லிம்கள் விகிதாசாரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், சிங்களவர்களாகிய எங்களுக்கு ஒரு விகிதமும் கூட இல்லையே என்று சிங்கள ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அதிகார சபை அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது நேர்முகத் தேர்வுகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல் படியே நடைபெறுகிறது. அநேகமாக இவர்கள் நியமனம் பெறக்கூடும். சிங்கள இளைஞர்களுக்கான பட்டியல் வரக்கூடும் என எதிர்பார்க்கிறோம்' என்றார்.

இதே ஆர்ப்பாட்டக்காரர்கள் தமிழ் இளைஞர் ஒருவரின் சான்றிதழ்களைக் கிழித்து விட்டனர். இது வருந்தத்தக்கது. எவ்வாறெனினும் கிழிக்கப்பட்ட சான்றிதழ்களுடனும்தான் நேர்முகத் தேர்வுக்கு சமூகமளித்ததாகவும் அவர் கூறினார்.

*விவேகி*

## புனர்வாழ்வு யாருக்கு?

அம்பாறை மாவட்டத்தில் ஒரு எம்.பி. அவர் தான் போகுமிடமெல்லாம் ''தமிழர்கள் எனது கண்களில் ஒன்று. அவர்களது சரித்திரம் எனக்குத் தெரியும். உங்களின் நலன்களைக் கவனிக்கவே என்னை தலைவர் நியமித்துள்ளார்'' என்று தேனொழுகக் கூறுவார்.

இதுவரை அவர் தமிழ் மக்களுக்கு செய்த உதவி என்ன?

''மல்வத்தையில் 500வீடுகள் வழங்கப்படும்'' என்று ஒரு தேசிய நாளிதழில் இந்த எம்.பி. கூறியிருந்தார். நடந்தது என்ன? ஒரு வீடுதானும் மல்வத்தைக்கு வழங்கப்படவில்லை. ஏன் பொய்யான வாக்குறுதிகளை அளிக்கிறார்?

கடந்த ஆட்சியில் ஒரு அமைச்சர் மல்லிகைத் தீவு கோயிலொன்றுக்கு வெற்றுக் காசோலை கொடுத்து ஏமாற்றினார்.

இன்று இப்படி ஒரு ஏமாற்று!

## காரணம் என்ன?

அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரியில் மூவின மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். அங்குள்ள அதிபருக்கு அடுத்ததாக பிரதி அதிபருக்கு உரியவர் மாற்றப்பட்டிருக்கிறார். 10 வருடத்திற்கு மேல் அங்கேயே போதனாசிரியராகவிருந்த கே. குணரெட்ணம் என்பவருக்கு பிரதி அதிபர் பதவியோ அல்லது உதவி அதிபர் பதவியோ அல்லது பிரிவுத் தலைவர் பதவியோ கொடுக்கப்படவில்லை. ஆனால், 4 வருடம் சேவையாற்றிய அனுபவமற்ற ஒருவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது ஏன்? என்ன காரணம்?

## ஏமாற்று எம்.பி!

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் போகுமிடமெல்லாம் 'இன ஒற்றுமை' பற்றி நிறையப் பேசுவார். நடப்பதோ முற்றிலும் வேறு.

அண்மையில் அம்பாறை மாவட்டத்திற்கென நெதர்லாந்து நிதியுதவியுடன் வீடமைப்பு கொடுப்பனவு வழங்குவதற்கு நிதிகிடைத்துள்ளது. அதன்படி 6000 வீடுகளுக்கு கொடுப்பனவு வழங்கலாம். மூவினமக்களும் வாழ்கின்ற அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளின் மொத்த எண்ணிக்கை என்ன தெரியுமா?

ஆக 1000வீடுகள். உலகமே அறியும் கடந்தகால வன்செயல்களில் இம்மாவட்டத்தில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதை. புனர்வாழ்வு பாதிக்ககப்பட்டவர்களுக்காக அல்லது...?

எல்லாத் தொடர்புகட்கும் : இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615.
வெளியீட்டாசிரியர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப்பதிவு : நவகம அச்சகம், இல. 334, காலி வீதி, இரத்மல

# சரிநிகர்

இதழ் 102 + 103 விலை 7.00

ஓகஸ்ட். 15-ஓகஸ்ட்.28, 1996

# வாகரையில் அலை வேகம்! முல்லையில் ஓயா அலை!!

## கொழும்பில் பத்திரிகை தடை?









அன்பான வாசகர்களுக்கு,

எமது சக்திக்கப்பாற்பட்ட காரணங்களினால் கடந்த இரு இதழ்களையும் குறித்த காலத்தில் .வெளிக்கொணர முடியவில்லை. இவ்விதழ் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டிருந்த 102வது இதழையும் 103வது இதழையும் உள்ளடக்கியதாக வெளிவருகிறது. 104வது இதழ் ஓகஸ்ட் 29இல் வெளிவரும். இதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய சிரமங்களுக்கு வருந்துகிறோம்.

ஆ - ர்

சரிநிகர்
இருவாரங்களுக்கொருமுறை
"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" -பாரதி

ஆசிரியர் குழு

ச.பாலகிருஷ்ணன்
சேரன்

சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்

அரவிந்தன்
சி.செ.ராஜா

சிவகுருநாதன்

வடிவமைப்பு
ஏ.எம்.ரஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோசாலை, கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்,
334,காலி வீதி,ரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை-ரூபா 175
வெளிநாடு-30 u.s.$
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/காசோலை யாவும்
MIRJE என்ற பெயருக்கே எழுதப்பட
வேண்டும்.

எல்லாத் தொடர்புகட்கும்
ஆசிரியர்,
சரிநிகர்,
4,ஜெயரட்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு-05
தொலைபேசி:593615

## புலிகளை நம்புங்கள் என்கிறார் தொண்டமான்!

தெஹிவளை புகையிரத நிலையத்தில் குண்டு வைத்தது தமது வேலையல்ல' என்று புலிகள் மறுத்துள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென கிராமியக் கைத்தொழில் அமைச்சர் தொண்டமான் அவர்கள் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

'அரசின் அமைச்சரவை அமைச்சர் என்ற முறையில் புலிகள் இயக்கத்தின் இந்த அறிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள் கிறீர்களா?' என்று கேட்கப்பட்ட கேள்வியொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

"உண்மையிலேயே இந்த யுத்தம் அவசியமற்ற ஒன்றாகும். ஆயுதங்கள் இரு தரப்பினரிடமும் இருக்கும் வரை இருவரும் சண்டையிடுவார்கள். புலிகளுக்கும் யுத்தம் புரிவதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கிறது. அவர்கள் பேச்சுவார்த்தைக்கு இரு தடவைகள் முன்வந்தபோதும் இப்பேச்சுவார்த்தைச் சந்தர்ப்பம் சரியாக பயன்படுத்தப் படவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வுத்திட்டம் ஒன்று அவசியம்" என்று அப்பேட்டியில் கூறியுள்ள தொண்டமான், தீர்வுத் திட்டமொன்றை துணிவுடன் முன்வைத்துள்ள ஜனாதிபதிக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். இந்த யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த தாம் முன்னைய ஆட்சிக்காலத்தின் போது முன்வந்திருந்த போதும் அது கணக்கெடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்ட தொண்டமான் இப்போதும் தான் எந்தவித ஒத்துழைப்பையும் நல்கத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொ.ஐ.முவுடன் இணைந்துகொள்ளப் போவதாகக்கிடைத்த தகவல்கள் பற்றி அவரிடம் விசாரிக்கப்பட்ட போது அது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என தெரிவித்த அமைச்சர், பிரதான கட்சியொன்றுடன் சேரும் நோக்கம் நமக்கு இல்லை என்று தெரிவித்தார். ஐ.தே.கவுடன் தான் இத்தகைய செயல் காரணமாக நல்ல பாடம் படித்துள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் அக்கட்சியினர் தனது கட்சியைச் சேர்ந்தவர்களையே தனக்கெதிராக தூண்டிவிட்டு தன்னை நோகடித்தனர் என்றும் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் அரச பிரச்சாரம்!

ரிவிரெச நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாணத்தில் தற்போது அரசாங்கம் தம் மீதான நல்லெண்ணத்தை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. இதனொரு அம்சமாக தற்போது புதிதாக ஒலிபரப்பப்படும் 'யாபா பட்டுன" சேவை மற்றும் மே.22ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட தொலைக்காட்சிச் சேவை, கொழும்பு அரசாங்க தகவல் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத் துக்காக அச்சடிக்கபடும் 'புத்தொளி" எனப்படும் பத்திரிகை என்பனவற்று க்கூடாக இப்பிரச்சாரம் முடுக்கிவிடப் பட்டுள்ளது. 'புதிய கட்சியொன்றுக் கான அவசியம்", 'இராணுவத்தின் வெற்றி தமிழ் மக்களின் வெற்றி", 'சுது நெலும் இயக்கத்தின் செயற்பாடுகள்" என்பன போன்ற விடயங்களை இவை தாங்கி வருகின்றன. யாழ்ப்பாணத்தில் ரிவிரெச இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து நின்று போன யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த தமிழ் பத்திரிகைகளில் ஒன்றான "உதயன்" பத்திரிகை மீண்டும் கடந்த மாதத்திலிருந்து வெளிவரத் தொடங்கியிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. ஆயினும் தகவல்களுக்காக கொழும்பிலிருந்து கொண்டுவரப்படும் தினகரன், டெயிலி நியூஸ் ஆகிய இரு பத்திரிகைகள் மட்டுமே அங்குள்ள மக்கள் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இவை கூட மட்டுப்படுத்தப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்படுகின்றன. இது யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு உள்ளூர் மற்றும் வெளியுலகம் தொடர்பான பக்கச்சார்பற்ற செய்திகளை அறிந்துகொள்ள முடியாத நிலையையே ஏற்படுத்தியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ரணில் கைதாவாரா?

பட்டலந்த ஆணைக்குழுவின் முன்னால் பிரஸ்தாபிக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் கைது செய்யப்படலாம் என்று அரசாங்க உயர் மட்டத்திலிருந்து கசிந்த செய்திகள் தெரிவிக்கின்றன. 1988-1989 காலப்பகுதியில் பட்டலந்தயில் இருந்ததாகக் கூறப்படும் வதைமுகாமொன்றுக்கும் எதிர்க்கட்சிக்கும் சம்பந்தம் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதை அடுத்தே இவ்வாறான கைது ஒன்றுக்கு ஆணைக்குழு ஆலோசனை தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி நாட்டிலில்லாத ஒரு சமயத்தில் இவாறான ஒரு கைதுக்கு தான் ஒப்புக்கொள்ளப்போவதில்லையென பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது. ஆயினும் அரசாங்க உயர் மட்டத்திலுள்ள சிலர் ரணிலை கைது செய்வதில் தீவிரமாக இருப்பதன் காரணமாக, அவரை பாதுகாப்பதற்கான தீவிர முயற்சிகளில் ஐ.தே.க,இறங்கியுள்ளது.

இம்முயற்சியானது அரசாங்கத்தின் அதிகாரப்பரவலாக்க யோசனையை ஆதரிக்கச்செய்வதற்கான முயற்சியே என தென்னிலங்கை புத்திசீவிகள் சிலர் கருத்துத் தெரிவிக்கின்ற போதும், எதிர்க்கட்சித் தலைவரை கைது செய்ய எடுக்கும் இம் முயற்சி இந்த அரசாங்கம் ரணில் தலைமையில் வளர்ந்து வரும் ஐ.தே.கவினைக் கண்டு அஞ்சுவதினால் எடுக்கப்படும் ஒரு முயற்சியே என்று அக்கட்சியின் செயலாளர் காமினி அத்துகோரல தெரிவித்துள்ளார்.

## ஜனநாயகம் = எதேச்சதிகாரம்!

உபாலி நிறுவனத்தினால் வெளியிடப்படும் பத்திரிகைகளான 'தி ஐலன்ட்', 'திவயின' ஆகிய பத்திரிகைகள் மீதான ஜனாதிபதியின் தாக்குதல்கள் பலத்த சர்ச்சைகளைக்கிளப்பிவிட்டுள்ளது.

இந்த நாட்டிலுள்ள தொடர்பு சாதனவியலாளர்கட்கும் தொடர்பு சாதனங்கட்கும் எதிரான இந்த அரசாங்கத்தின் தொடர்ச்சியான மிரட்டல்களின் வரிசையில் கடைசியாக வந்திருப்பதுதான் இந்தப் பத்திரிகைகள் மீதான ஜனாதிபதியின் தாக்குதல்.

நிட்டம்புவவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வைத்தியசாலை ஒன்றைத் திறந்து வைத்தபின் பேசுகையிலேயே, இலங்கை அரசாங்கத்தின் யுத்தம் தொடர்பாக திரிக்கப்பட்ட, யுத்த நடவடிக்கைகட்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய செய்திகளைப் பிரசுரித்து வரும் பத்திரிகைட்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமென்று அவர் வலியுறுத்தியிருந்தார். இந்தப்பேச்சில் இத்தகைய பத்திரிகைளை தடைசெய்ய வேண்டி வரலாம் என்றும் அவர் எச்சரித்திருந்தார். அவர் குறிப்பிட்டது உபாலி நிறுவனப்பத்திரிகைகளையே.

வெளிப்படைத்தன்மை. பத்திரிகைச்சுதந்திரம் என்பவற்றை அளிப்பதாக வாக்களித்து பதவிக்கு வந்த இந்த அரசாங்கம் தனது வாக்குறுதிகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் கைவிட்டதுடன், அவ் வாக்குறுதிகட்கு நேரெதிரான செயல்களில் ஈடுபட்டும் வருவது தெரிந்ததே. தணிக்கை முறையை நடைமுறையில் வைத்திருப்பதன் மூலம் வடக்குக் கிழக்கில் நடந்துகொண்டிருக்கும் யுத்தம் தொடர்பானதனக்குச் சாதகமான செய்திகளை மட்டும் அது வெளியிட அனுமதித்து வருவதும் யாவரும் அறிந்ததே. இந்தத் தொடர்பு சாதனங்கள் மீதான தணிக்கை அரசாங்கம் நடாத்த விரும்பும் யுத்தத்தை நியாயப்படுத்தி அதை ஜனரஞ்சகப் படுத்தும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இது, சுதந்திரமான தொடர்புசாதன நடவடிக்கைகட்கும், உண்மைகளை அறிந்து கொள்வதற்கான மக்களது உரிமைக்கும் எதிரான ஒரு நடவடிக்கை என்ற பலமான கண்டனத்தை அரசாங்கத்திற்கு எதிராக உருவாக்கியுள்ளது.

உண்மையில் உபாலி நிறுவனப் பத்திரிகைகள் அரசாங்கத்தின் யுத்த முனைப்புக்கு எதிரானவையல்ல. அவை இன்றும் ஆழமான சிங்கள இனவாத வெறியுடன் யுத்தத்தை நியாயப்படுத்துகின்ற பத்திரிகைகளாகவே உள்ளன. தணிக்கை இல்லாத போது கூட, சிங்கள மக்களுக்கு யுத்த நிலைமைபற்றிய தவறான அல்லது இராணுவத்தினரின் மனோநிலையைப் பாதிக்கக் கூடாது என்பதற்காக சுயதணிக்கைக்குட்படுத்தப்பட்ட செய்திகளையே பிரசுரித்து வந்தன. எனவே அரசாங்கத்தின் யுத்த முனைப்பைப் பாதிக்கும் செய்திகளை இப்பத்திரிகைகள் வெளியிட்டன என்று குற்றம்சாட்டுவது சரியானதல்ல. இன்னும் சொல்லப்போனால், இந்த நாட்டின் இனப்பிரச்சினையை மேலும் மோசமான ஒரு மட்டத்திற்கு எடுத்துச் சென்று, அதனால், ஏற்படும் அரசியல் சூழலில் தமது அரசியற் பிழைப்பை நடாத்த விரும்புகின்ற இந்த அரசாங்கத்தின் நோக்கங்களை இன்னுமொருபடி தீவிரமாக நடைமுறைப்படுத்தவே இப்பத்திரிகைகள் முயன்றன.

ஆக, சந்திரிகா அம்மையாருக்கு கோபம் வந்ததற்கு காரணம் யுத்த விடயம் அல்ல, மாறாக யுத்தம் சாராத விடயங்களே!

இப்பத்திரிகைகள் சந்திரிகா அசாங்கத்தின் இதர விவகாரங்கள் குறித்து தீவிரமான விமர்சனத்தை வெளியிட்டு வந்திருந்தன. இந்த அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் விட்டது, பொறுப்பற்ற விதத்தில் இதன் தலைவர்கள் - சந்திரிகா உட்பட நடந்துகொள்வது போன்ற விடயங்களை இப்பத்திரிகைகள் அம்பலப்படுத்தின. தவிரவும் இப்பத்திரிகைகள் குறிப்பாக ஜனாதிபதியின் எதேச்சதிகாரப் போக்கை விமர்சனத்துக்குள்ளாக்கியிருந்தன.

இதுதான் ஜனாதிபதியின் சீற்றத்துக்குப் பிரதான காரணம்.

ஆனால், அதை வசதியாக மூடி ௦௬ றத்துவிட்டு நாட்டைக் காப்பதற்கான தனது யுத்த முயற்சியைப் பாதிக்கும் விதத்தில் இப்பத்திரிகைகள் இயங்குகின்றன என்று குற்றம் சுமத்தியுள்ளார் ஜனாதிபதி. ஜனாதிபதி இந்தியா சென்றிருந்த போது, 'பிரபாகரனை நாடுகடத்துமாறு இலங்கையிடம் இந்தியா கோரும்' என்று இப்பத்திரிகைகள் வெளியிட்ட செய்தி பேச்சுவார்த்தைக்யைக் குழப்பக் காரணமாக இருந்திருக்கலாம் என்று இப்போது ஜனாதிபதி தெரிவிக்கின்றார். அப்படி ஒரு கோரிக்கையை இந்தியா முன்வைக்கவேயில்லை என்று அப்போது அரசு தரப்பில் கூறப்பட்டது. ஆனால், உபாலி நிறுவனப் பத்திரிகைகள் பிரபாகரன் சம்பந்தமாக வெளியிட்ட செய்தியில் உண்மையில்லாமல் இல்லை. இக்கோரிக்கையை இந்தியா முன்வைத்ததா அதற்கு ஜனாதிபதி என்ன பதில் சொன்னார் என்ற விடயங்கள் வெளித் தெரியாவிட்டாலும், இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்படும் என்று ஏற்கெனவே இந்திய வெளிநாட்டமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்திருந்தார் என்பது உண்மையே. இத்தகவல் ராய்டர் செய்தி நிறுவனத்தினால் (Asian Age பத்திரிகையை மேற்கோள் காட்டி) வெளியிடப்பட்டிருந்தது. தவிரவும், சந்திரிகா அப்போதைய இந்தியப் பயணத்தின் போது, இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியபின், இந்தியா ருடே பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பிரபாகரனை ஒரு பயங்கரமான யுத்த மனநோயாளி என்று தெரிவித்திருந்தார் என்பதும், நாடு திரும்பியபின் அவர் உள்நாட்டுப் பத்திரிகையாளர்கட்கு அளித்த பேட்டிகளின் போது புலிகள் தொடர்பாக மிகவும் கடுமையான போக்கைக் காட்டியிருந்தார் என்பதும் உண்மைகள். யுத்தத்தை உருவாக்க காரணமாக உபாலி நிறுவனப் பத்திரிகைகளைக் குற்றம் சாட்ட முடியும் என்றால், அதைவிட அதிகப் பொறுப்பை ஜனாதிபதியும் எடுத்துத்தான் ஆக வேண்டும்.

ஆக, இப்பத்திரிகைகள் மீதான ஜனாதிபதியின் தாக்குதல் யுத்த விவகாரம் சம்பந்தப்பட்ட ஒன்றல்ல என்பது மட்டும் தெளிவு.

எப்படியோ, இந்தப் பத்திரிகைகள் மீதான ஜனாதிப்தியின் தாக்குதல்கள் இலங்கையின்தொடர்பு சாதனவியலாளர் ஒவ்வொருவர் மீதும் விடுக்கப்பட்டுள்ள ஒரு பயங்கரமான எச்சரிக்கையாகும்.

இப்பத்திரிகைகளின் போக்கை அங்கீகரிக்காத பலரும் கூட ஜனாதிபதியின் இந்த மிரட்டலைப்பலமாகக்கண்டித்துள்ளனர். இப்பத்திரிகைகளிடம் எவ்வளவு மோசமான குறைகளும் தவறுகளும் இருந்த போதும் இவற்றைத் தடை செய்யும் ஜனாதிபதியின் நோக்கம் பலமாக எதிர்க்கப்பட வேண்டிய ஒரு எதேச்சதிகார நோக்கமாகும்.

ஜனாதிபதி தனது பேச்சின் போது 'நாம் ஒன்றில் அவற்றை மூடி விடவேண்டும்; அல்லது அவர்கள் அனுபவிக்கும் அதே சுதந்திரத்தைப் பயன்படுத்தி அவற்றை மறுத்துரைக்க வேண்டும். இவர்களது சுதந்திரம் வெளிப்பாட்டு சுதந்திரம் அல்ல, அது ஒரு காட்டுக்கழுதைச்சுதந்திரம்' என்று கூறியுள்ளார்.

ஒரு பத்திரிகையை மூடிவிடுவதும், அதில் வெளியாகும்கருத்துகட்கு பதிலிறுப்பதும் ஒரே மாதிரியான விவகாரங்கள் அல்ல. முன்னையது எதேச்சதிகாரம். பின்னையது ஜனநாயகம்.

ஜனாதிபதி சந்திரிகாவிற்கு ஜனநாயகமும் எதேச்சதிகாரமும் ஒன்றாகத்தான் தெரிகின்றன என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்!

-அரவிந்தன்-

# முல்லைத்தீவை மூடிமறைக்க முனையும் பரந்தன் தாக்குதல்!

- டி.சி.



முல்லைத்தீவில் தரையிறங்க முற்பட்ட படைகள் மீது புலிகள் தாம் கைப்பற்றிய 122MM பீரங்கியால் தாக்குதல் தொடுத்தனர். அவ் எறிகணை சற்றுக் குறி தவறி ஒரு தரையிறங்கு கலத்தின் (LCM) சாய்வுப் பகுதியில் (Ramp) வீழ்ந்தது. அவ்விடத்திலேயே 28 படையினர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர். இவ்வெறிகணை தரையிறங்கு கலத்தில் நேரடியாகவே விழுந்திருந்தால் அதில் இருந்த 400 படையினரும் இறந்திருப்பர் என இராணுவத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் முகாமைக் காப்பாற்ற அனுப்பப்பட்ட படைகளில் முன்னூறுக்கு மேற்பட்டோர் காயங்களுக்குள்ளானதாலும், நூறுக்கு மேற்பட்டவர்கள் இறந்ததாலும் புலிகளின் எதிர்ப்பு மிக உக்கிரமாக இருந்தமையாலும் படைத்தலைமை முல்லைத்தீவிலிருந்து முற்றாக இலங்கை இராணுவம் வெளியே றுவதே புத்திசாலித்தனம் எனத்தீர்மானித்தது. இதற்குச் சற்று முன்னர்தான் ''நாம் எப்பாடு பட்டாயினும் முகாமை தொடர்ந்து நம் கட்டுப்பாட்டில் வைத்திருப்போம்'' எனப் பத்திரிகையாளர் மாநாட்டில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்திருந்தார்.

இதேவேளை ஜனாதிபதி நாடு திரும்பிய பின் அவசர அவசரமாகக் கூட்டப்பட்ட பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் (Security Council) பல சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்தேறின.

உடனடியாக ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி நிலைமையை நாட்டுக்கு விளங்கப்படுத்த வேண்டும் எனச் சந்திரிகா இக்கூட்டத்தில் தெரிவித்தாகவும் இதற்கு ரத்வத்த முதலில் அவ்வளவு இணக்கம் தெரிவிக்க வில்லையெனவும், பின்னர் ஜனாதிபதியின் கடும் வற்புறுத் தலின் பேரிலேயே மாநாட்டைக் கூட்டியதாகவும் தெரிகிறது.

புலிகள் தமது படைகள் அனைத்தையும் முல்லைத்தீவுப்பகுதியில் திரட்டி வைத்திருக்கிறார்கள் எனவும் அவர்களை அங்கேயே 'வளைத்துப் போட்டு அடிக்க' இதுவே மிகச் சிறந்த சந்தர்ப்பமெனவும், இப்படிச் செய்துவிட்டால் புலிகளை முடித்துக் கட்டிவிடலாம் எனவும் பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் ஜெனரல் ரத்வத்த ஒரு மகா புத்திசாலித்தனமான திட்டத்தை தெரிவித்திருக்கிறார். களநிலைமைகள் பற்றியோ, வன்னிநிலப்பரப்பைப் பற்றியோ,போரியலின் அடிப்படைகளையோ தெரியாத ஜனாதிபதி இதை ஒரு நல்லதிட்டமாக ஏற்று அதையே மந்திரி சபைக்கூட்டத்திலும், ஒரு பொதுக்கூட்டத்திலும் அரசின் பதிலடித் தந்திரோபாயமாக விளக்கினார். இது பத்திரிகை களிலும் வெளியாயிற்று.

இதைப்பார்த்து ஓரளவு விபரமறிந்த இராணுவ ஆய்வா ளர் பலரும் ''ஐயகோ! இது என்ன முட்டாள்தனம்'' என தலையிற் கையை வைத்தனர்.

முல்லைத்தீவிலிருந்து முற்றாக இராணுவம் வெளியேறிவிட்ட நிலையிலும், புலிகளின் கையில் பலம் வாய்ந்த ஆயுதங்கள் சென்று விட்ட நிலையிலும் ஆனையிறவினூடாக ஒரு தரைவழிப்படை நகர்வு என்பதைக் கற்பனை கூடப் பண்ணிப்பார்க்க முடியாத ஒரு நெருக்கடியிலும் இருந்த படைகளுக்கு ரத்வத்தையின் இக்கூற்று கவலைக்கிடமான ஒன்றாகப் பட்டதில் வியப்பில்லை.

எனினும் ரத்வத்தைக்கு முல்லைத்தீவுத் தோல்வி மாபெரும் தலைகுனிவு. அதை எப்படியாவது சரிக்கட்டி, தான் மீண்டும் ஒரு வெற்றி வீரனாகத் தன் கௌரவத்தை நிலைநாட்டிட வேண்டும் என்பதே பிரதான குறி. ரிவிரச நடவடிக்கையின் பின்னர் தன்னை ஒரு ஜெனரலாக பதவியுயர்த்திக் கொண்டமை யாலும், தன் ஆதரவாளர்கள் ஊடாக தன்னை சப்புமல்குமாரயாவாக பிரபலப் படுத்திக் கொண்டதாலும், ரத்வத்தைக்கு முல்லைத்தீவு ஒரு ஜீரணிக்கமுடியாத தன்மானப் பிரச்சினையாகி விட்டது.

வழக்கமான இராணுவ நடைமுறைகள் சம்பிரதாயங்களைப் புறக்கணித்தே ரத்வத்தை தன்னை ஒரு ஜெனரலாகப் பதவியுயர்த்திக்கொண்டார் என்பதும் இதைப் பலரும் சற்று ஏளனமாக நோக்கினர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

''மகிய்யாவை (ஐ.தே.க.) கவுன்சில் உறுப்பினராக இருந்த உம்மை கேணல் ஆக்கியது என் தாயார். பின்னர் ஜெனரலாக்கியது என் தமக்கை, இப்போது முல்லைத்தீவைப் பறிகொடுத்ததற்காக பிரபாகரன் உம்மை பீல்ட் மாஷலாக்க வேண்டும்'' எனப் பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட விவாதத்தின் போது அனுரா ரத்வத்தையைக் கிண்டல் பண்ணிப் பேசியதையும், அதைப் பத்திரிகைகள் வெளி யிட்டதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

எனவே இந்த மானப்பிரச்சினையின் பின்னணியிலேயே நாம் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சியை நோக்கிப் புறப்பட்ட படைநகர்வை நோக்க வேண்டும். இதற்கு ஆரம்பத்தில் 'ஹெல பல' அதாவது 'சிங்களச் சக்தி' எனப் பெயரிடப்பட்டிருந்தது. பின்னர் அவசர அவசரமாக 'சத்ஜய' எனப் பெயர் மாற்றப்பட்டு விட்டது. பரந்தன் வரை படைகள் சற்றுத் துரிதமாக எதிர்ப்பின் மத்தியிலும் முன்னேறின. பரந்தன் சந்திக்குச் சற்று வடக்காக உள்ள பெயர்ப் பலகை அமைந்துள்ள பகுதி கைப்பற்றப்பட்டது. பரந்தன் பெயர்ப் பலகைக்குப் பக்கத்தில் படைகள் நிற்கின்ற படம் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டு வெளியாயிற்று. பீரங்கி, மற்றும் விமானக்குண்டு வீச்சு என்பவற்றின் மூலம் கிளிநொச்சியும் அதை அண்டிய பகுதிகளும் தரை மட்டமாக்கப்பட்டன. ''நாம் விரைவில் கிளிநொச்சியைக் கைப்பற்றுவோம். அதன்பின் எமது அடுத்த குறி வவுனியா செல்லும் பாதையை எமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதேயாகும்'' என ரத் வத்தை ஐலண்ட் பத்திரிகைக்கு கூறியிருந்தார். ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இதன் கராணமாக வன்னி யிலிருந்து வவுனியா நகருக்குள் வருவர் என எதிர்பார்த்து வடபகுதி புனர்வாழ்வு அதிகார சபை அங்கு 35 பாடசாலை களைக் கையேற்று ஒழுங்குகள் செய்யத்தொடங்கிற்று.

ஆரம்பத்தில் இதை மிக இரகசியமாகச் செய்வதே நோக்கமாக இருந்தது. இதனாலேயே கிளிநொச்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு உணவு அனுப்புவதற்கு இராணுவம் தடை விதித்தது. பட்டினி போட்டால் கிளிநொச்சி - வவுனியாப் பிரதான பாதை படையினரின் கட்டுப்பாட்டினுள் வந்ததும் வாடி வதங்கும் மக்கள் புலிகளை நிராகரித்து வவுனியா வில் அரச கட்டுப்பாட்டை நாடி ஓடி வந்து விடுவார்கள் என்பதே அரசு போட்ட கணக்கு எனத் தெரிகிறது. அப்படி மக்கள் வெளியேறிவிட்டால், புலிகளின் பாடு திண்டாட்டம் ஆகும் என்பதும் படையினரின் எண்ணம்.

இவற்றின் மூலமாக வீழ்ந்த தன் இராணுவ கௌரவத்தை ஒரு வகையாகத் தூக்கி நிறுத்தி ஒரு சிங்களத் தேசிய மாவீரனாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் ஐ.தே.கவினரின் கேலிக்கும் சேட்டைகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க சத்ஜய உதவும் என்பது ரத்வத்தையின் எதிர்பார்ப்பு.

ஆனால் நடந்தது என்ன? பரந்தனிலிருந்து கிளிநொச்சி நோக்கி முன்னேற முற்பட்ட படைகளுக்கு விழுந்தது கடும் அடி. சில தாங்கிகள் (Main Battle Tanks) முற்றாக நாசமாகின. முல்லைத்தீவிலிருந்து எடுத்த நீண்டதூர எறிகணைச் செலுத்திகளைக் கொண்டு விடாது தாக்கினர் புலிகள். ஒரு சில மிகத் தீவிரமான நெருங்கிய மோதல்களும் இடம் பெற்றன. கிளிநொச்சியின் தரையமைப்பு தமக்குச் சாதகமில்லாமல் இருப்பதாலேயே சேதம் பலமாக இருப்பதாக இராணுவத்தினர் கூறலாயினர். அப்பகுதியின் வாய்க்கால் அமைப்பை தமக்கு மிகச் சாதகமாகப் பயன்படுத்தி மோதுகின்றனர் புலிகள் எனவும் கூறப்பட்டது.

கரடிப்போக்குச் சந்தியை அடைந்து விடலாம் என எண்ணிய படைகள் வடமேற்காக உள்ள உமையாள்புரம் பகுதியை நோக்கிப் பின்வாங்க வேண்டியதாயிற்று.

அப்பகுதியை நோக்கியும் புலிகளின் கடும் எறிகணைத் தாக்குதல் தொடர்ந்தது. இந்த நிலையில் தான் ''எமது நோக்கம் கிளிநொச்சியைக் கைப்பற்றுவது என்றில்லை. நாம் வேறு தந்திரோபாயத்தின் அடிப் படையில் செயல்பட உள்ளோம்'' என இராணுவப் பேச்சாளர் சரத்முனசிங்கா கூறத்தொடங்கினார்.

இவரது கூற்று காதில் பூச்சுற்றுகிற வேலை என்ற தொனிப்பட (Bluffing) ஒரு சர்வதேசச் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது. முல்லைத்தீவால் உண்டாகிய அரசியல் நெருக்கடியையும் அது ரத்வத்தையின் சிங்களத் தேசிய மாவீரனாகும் கனவிற்கு வைத்த ஆப்பையும் சரிக்கட்டவே 'சத்ஜய' மேற்கொள்ளப்பட்டது என்பது கண்கூடு. இதற்குப் பலிக்கடாவாகியது ஏழைச் சிங்களப்படை வீரரும் பல திறமையுள்ள இளநிலைப் படையதிகாரிகளுமே என தென்னிலங்கையில் உள்ள விடயமறிந்த முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலர் கூறுகின்றனர்.





## காந்தி நகர்: வாய்ச் சொல்லில் வீரரடி!

திருமலை, காந்தி நகரில் பொதுமக்களால் பராமரிக்கப்பட்ட பாடசாலைக் கட்டிடம் உடைக்கப்பட்டது தொடர்பாக சில பத்திரிகைகள் உண்மைக்கு மாறாக செய்தியை வெளியிட்டிருந்தன. ஆகையினால், காந்திநகர் பாடசாலைக்கட்டிடம் உடைக்கப்பட்டது தொடர்பான உண்மையான செய்தியையும், எமது மக்களின் நிலைப்பாட்டையும் தங்களின் பத்திரிகை மூலம் வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

50 ஆண்டுகளுக்கு முன்பாக பிரிட்டிஷ் காலத்தில் இத்தாலியர்களால் கட்டப்பட்டிருந்த பழமைவாய்ந்த கட்டிடத்தை நகராட்சிமன்றமும் பராமரிக்காமல் விட்ட பிறகு அதனை எமது சமூகப் பெரியவர்கள் சமூக வளர்ச்சிக்காக படிப்பகமாகவும், பாடசாலையாகவும் மாற்றிப் பராமரித்து வந்தார்கள்.

அங்கு உருவாக்கப்பட்ட பாடசாலைக்கு



கஞ்சிமடம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்று பெயர் வைத்து நான்கு ஆசிரியர்களைக் கொண்டு நடத்தி வந்தார்கள். இற்றைக்கு பத்து ஆண்டுகளுக்கு முன் இப்பாடசாலை மாணவர்களின் வரவு அதிகரித்ததாலும், இடப் பற்றாக் குறையாலும் அனுராதபுர சந்திக்கு இடம் பெயர்ந்து விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயமாக இன்று இருக்கிறது.

இதன் பின்னர் இக்கட்டிடத்தை நாம் பாலர்பாடசாலையாகவும், நூலகமாகவும் பாவித்து வரும்போது வணக்கத்துக்குரிய சகோதரர் றிச்சார்ட் அவர்கள் பழைமை வாய்ந்த அக்கட்டிடத்துடன் சேர்த்து ஒரு நூலகத்தையும் கட்டி அன்பளிப்புச் செய்தார். 1990ம் ஆண்டு நடந்த வன்செயல் காரணமாக எமது மக்களினால் பராமரிக்கப்பட்ட இக்கட்டிடம் முற்றாகச் சேதமாக்கப்பட்டது. அத்திவாரமே இல்லாத நிலை காணப்பட்டது. இந்நிலையில் எமது மக்களும் வன்செயல் காரணமாக முற்றாக இடம் பெயர்ந்தார்கள்.

இதன்பின் காந்திநகர் மக்கள் 1992,1993 ஆம் ஆண்டுகளில் மீளக் குடியேறினார்கள். முற்றாக சேதமாக்கப்பட்டிருந்த பாடசாலைக் கட்டிடத்தில் மிஞ்சி இருந்த பாரிய தூண்களையும் நகராட்சி மன்றமே கொண்டு போய்விட்டது. இதன் பின் இக்கட்டிடத்தை மீள நிர்மாணிக்கும்படி எமது தலைவர்கள் நகராட்சி மன்றத் தலைவர் சூரிய மூர்த்தியிடம் பல முறை கேட்டும் அவர் ஏனோ தானோ என்று காலத்தைக் கடத்தி வந்தார். இதன் பின் அடுத்த கட்டமாக நகராட்சிமன்றத் தலைவர் சூரிய மூர்த்தி அங்கம் வகிக்கும் கட்சிப் பொறுப்பாளரிடம் சென்று பாடசாலையைக் கட்டுவதற்கு ஓலை, மரங்களாவது தாருங்கள் என்று கேட்ட போது அவரும் தருகிறேன் பாடசாலையை கட்டுங்கள் என்று வாக்குறுதி தந்தார். இந்த விடயத்தைக் கேள்விப் பட்ட சூரியமூர்த்தி எமது சமூக நகராட்சி மன்ற உறுப்பினர் மாயன்நாதனூடாக எம்மிடம் வந்து எமது இயக்கத் தலைவர்களிடம் ஓலை மரம் வேண்டி பாடசாலையைக் கட்ட வேண்டாம். நகராட்சி மன்ற பணத்தைக் கொண்டு மூன்று லட்சம் ரூபா செலவில் நானே பாரிய கட்டிடம் கட்டித் தருகிறேன் என்று வாக்குறுதி கொடுத்து விட்டுச் சென்றார். 6 மாத காலமாகியும் நகராட்சி மன்றம் பாடசாலையைக் கட்டுவதற்கான எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.

இதன் பின் மூன்றாம் கட்டமாக எமது மக்கள் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) நகராட்சிமன்ற உறுப்பினர் மாயன்நாதன் மூலம் அவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கு அமைய அவர்களின் கட்சிப்பணத்தைப் பயன்படுத்தி அவர்களின் சரீர உழைப்புடன் நூலகம், பாலர் பாடசாலை, களஞ்சிய அறை, சுகாதார நிலையம், குடிநீர்வசதி, தளபாடங்கள், மின்சாரம் இவைகளைக் கொண்ட அழகான பாரிய கட்டிடத்தை மூன்று லட்சரூபா செலவில் கட்டி அதனை எமது காந்தி நகர் முன்னேற்றச் சங்கத் தலைவரிடம கையளிததனர். அத்தோடு பாலர் பாடசாலை நடத்துவதற்கான வேதனத்தையும், அத்துடன் நூலகம் நடத்துவதற்கு நாளேடுகளுக்கும் சஞ்சிகைகளுக்குமான செலவினையும் கொடுத்தார்கள். இப்படியாக ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியினர் வழங்கிய உதவியுடன் இக்கட்டிடம் நல்ல முறையாக மூன்று மாதங்கள் எமது சங்கத்தால் பராமரிக்கப்பட்டுவந்தது.

இந்த நிலையில் சூரியமூர்த்தியின் உத்தரவின் பேரில் 17-04-1996ம் திகதி கட்டிடத்தின் முகப்பில் எழுதியிருந்த ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அன்பளிப்பு என்ற வாசகம் நகராட்சி மன்ற ஊழியரைக்கொண்டு அழிக்கப் பட்டது. இவ்விடயத்தைக் கேள்விப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் உடனே வந்து தடுத்து விட்டார்கள். இதன் பின் 2.30 மணியளவில் சூரியமூர்த்தியும் மற்ற உத்தியோகத்தர்களும் சேர்ந்து வந்து அவரின் தலைமையில் எமது கட்டிடத்தை உடைத்து காட்டு மிராண்டித் தனமாக பாலர் பாடசாலையில் எழுதியிருந்த பொன்மொழிகளையும் அழித்து கோடரியினால் கொத்தியும், ஆர்ப்பாட்டம் செய்தனர். அத்துடன் நில்லாமல் நூலகத்தில் இருந்த பத்திரிகைகளை எல்லாம் ஒன்று சேர்த்து எமது சமூகத்தை தகாத வார்த்தைகளால் பேசி (சக்கிலியனுக்கு படிப்பு எதற்கடா?) தீயிட்டுக் கொளுத்தி கட்டிடத்திலிருந்த தளபாடங்களைத் தூக்கி நகராட்சி மன்ற வாகனத்தில் ஏற்றினர்.

இந்த அடாவடித்தனத்தைக் கேள்விப் பட்டு வந்த ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியினருடன் எமது மக்களும் சேர்ந்து குரல்கொடுத்தார்கள்; சூரியமூர்த்தி தடுத்து வைக்கப்பட்டார். இதன் பின்னர் அடாவடித்தனம் செய்த சூரியமூர்த்தி ''நாம் தவறுதலாக நடந்து விட்டோம். திருத்தி தருகிறோம்'' என்று அவர் கைபட எழுதிக்கொடுத்தமையினால் அவர் விடுவிக்கப்பட்டார். அவரை அவர் சார்ந்த கட்சியினர் ஆயுதங்களுடன் வந்து கூட்டிச்சென்றார்கள்.

இதன்பின் மக்கள் எல்லோருமாக சங்கத் தலைவர் தலைமையில் திரண்டு சென்று பொலிஸில் முறைப்பாடு கொடுத்தனர். இதைக்கேள்விப்பட்ட சூரியமூர்த்தியின் கட்சியினர் ஆயுதங்களுடன் காந்திநகர் வந்து தலைவரையும் ஏனையோரையும் தேடி அச்சுறுத்திவிட்டுச் சென்றார்கள். இதனால் தலைவரும் ஏனையோரும் பயத்தால் மறைந்து இருந்தார்கள். பின் திருமலையை உள்ளடக்கிய எமது சமுதாயத் தலைவர்கள் ஒன்று கூடி சூரியமூர்த்தியின் அடாவடித்தனத்தை கண்டிக்கு முகமாக நகராட்சிமன்ற தொழிலாளர்கள் இரண்டு மணித்தியாலம் தாமதமாக கண்டனம் தெரிவித்து வேலைக்குப்போகத் தீர்மானித்தார்கள்.

17-04-1996ம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி எமது தொழிற் சங்கத் தலைவர் 18-04-1996ம்திகதி எழுத்து மூலம் காலையில் 6.30மணிக்கு அறிவித்து விட்டு அமைதியாக பெயர் பதிவு செய்யும் காரியாலயத்தில் இருந்தார்கள். இதைக் கேள்விப்பட்ட நகராட்சி மன்றத் தலைவர் சூரியமூர்த்தி பெயர் பதிவு செய்யும் காரியாலயத்துக்கு வந்து தொழிலாளர்கள் வேலைசெய்யும் உபகரணங்களை எடுத்துக்கொண்டு சென்று விட்டார்.

இதன்பின் தொழிற் சங்கத் தலைவர்கள் சூரியமூர்த்தியை நேரடியாக சந்தித்து பேசுவதற்காக சென்ற சமயம் பேசமறுத்து விட்டார். அத்துடன் தொழிற்சங்கத் தலைவர்கள் உள்ளூராட்சி ஆணையாளரிடம் சென்று சில கோரிக்கைகளை முன்வைத்து எமது நிலைப்பாட்டை விளக்கினர். அவரும் எமது விடயத்தைக் கருத்தில் கொண்டு தலைவரிடம் கேட்டு பதில் தருகிறேன் என்று கூறினார். அவர் கேட்டுக்கொண்டதற்கு அமைய வேலைக்கு செல்வதற்கு எமது தொழிலாளர்கள் சம்மதித்தார்கள். வேலைக்குச் சென்ற தொழிலாளர்களை பழிவாங்கும் முகமாக தனது வேலையை ஆரம்பித்தார் சூரியமூர்த்தி. முதற்கட்டமாக ஸ்ரீதரன் என்பவரை (பதில் தொழிலாளி) உடனடியாக வேலையில் இருந்து நீக்கினார்.

இரண்டாம் கட்டமாக திருச்செல்வம் மாயக்கிருஷ்ணன் (பதில் தொழிலாளி) அவரையும் வேலையில் இருந்து நீக்கினார். அத்துடன் நிற்காமல் நகராட்சி மன்றத்தில் பதில் தொழிலாளியாக வேலைசெய்து கொண்டிருந்த கோணாமலை இராஜா அவர்களை சூரியமூர்த்தி மிரட்டி தகாத வார்த்தைகளால் பேசி உடனே வெளியே போடா என்று விரட்டி விட்டார். அத்துடன் காந்தி நகர் முன்னேற்றச் சங்கத் தலைவராக இருக்கும் சாத்தன் கண்ணன் என்பவர் 6 வருடங்களாக தொழிலாளிப் பதவியிலிருந்து சாரதியாக வேலை செய்து வந்தார். நிரந்தர சாரதி நியமன நேர்முக பரீட்சைக்குச் சென்று இரண்டாம் இடத்துக்கு வந்தும் அவருக்கு சாரதி நிரந்தரநியமனம் வழங்கப்படவில்லை. நேர்முகப் பரீட்சைக்கு வராதவர்களுக்கு நிரந்தரசாரதி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 6 வருடங்களாக சாரதியாக வேலை செய்தவரை நீக்கி சாத்தன் கண்ணன் மீண்டும் தொழிலாளியாக வேலைசெய்யும்படி பணிக்கப்பட்டுள்ளார்.

நகரபிதா சூரியமூர்த்தி இந்தக் கட்டிடத் தொகுதியை ஏன் உடைத்தார்? இதற்கு அரசியல் ரீதியான பொறாமையும் குரோதமுமே காரணாமாக இருக்கலாமோ? ஒரு கட்டிடத்தொகுதியைக் கட்டிக்கொடுத்தவர்கள், அன்பளிப்புச் செய்தவர்கள் தங்கள் பெயரைப் பொறிப்பதில் என்ன தவறு இருக்கிறதோ தெரியவில்லை. அப்படி நகராட்சி மன்ற பிரதேசத்தில் பெயர் இடக் கூடாது என்றால் சிவன் கோயிலடியில் புளொட்டால் கட்டப்பட்ட பஸ்தரிப்பு இடத்தில் அன்பளிப்பு புளொட் என்று எழுதப்பட்டுள்ளதே. இவ்வாறு இன்னும் பல கட்டிடங்கள் அன்பளிப்புச் செய்தவர்களின் பெயர்களுடன் இருக்கின்றன. அப்படியாயின் அதையும் அல்லவா அழித்து இருக்க வேண்டும்.

எமது மக்களுக்கு கல்வி வசதிகள் கிடைப்பதோ மிகவும் குறைவு. எந்த அரசியல்வாதிகளும் தேர்தல் காலத்தைத் தவிர எம் பக்கம் முகம் திருப்புவதில்லை. இந்நிலையில் 'நெல்லுக்கும் ஆங்கே பொசியுமாப் போல்' கிடைக்கும் வசதிகளையும் வாய்ப்புக்களையும் தடுப்பதன் பின்னணி தான் என்ன?

*காந்திநகர் கிராமத்தோர் 73பேர் ஒப்பமிட்ட அறிக்கை*

## வெள்ளைச் சேலை

*ஓரங்கள் கசங்கிச் சுருங்கிய அந்தத் துண்டுத்துணியை
கட்டில் முகப்பரப்பில் உதறி
மார்போடழுத்தி நேராக்கி மடிக்கத் தொடங்குகிறேன்.
முதலில் இரண்டு நீள் மடிப்புக்கள்
(ஓரங்கள் பல தரம் கை நழுவி விழும்)
பிறகு நான்கு
கடைசியில் இரண்டாக.
பின்னர் ஒரு பாதியை மறுபாதி மேல் வைத்து
அதைச் ஒரு வெள்ளைச் சதுரமாக்கி
திரும்பவும் அலுமாரியில் அடுக்கி வைக்கிறேன்.*

*ஆயினும் ஒரு கணம் யோசித்துவிட்டு
அதை உடுப்புக் கொழுக்கில் கொழுவுவேன்.
மீண்டும் எப்போது அது தேவைப்படும் என்று எனக்குத்
தெரியாது.
கிழமைக்கு மூன்று முறைகளாவது
அலுமாரியிலிருந்து அதை எடுத்து
மார்போடழுத்தி
(மின்னழுத்திக்கு நேரமிருக்காது)
அவசரமாய்ச் சுற்றிக் கொள்ள வேண்டியிருக்கும்!*

*முதலில் அது ஜகத்தில் தான் தொடங்கியது
பிற்பாடு ஹிரன்
இன்று அஜித்
அடுத்தது யாரோ யானறியேன்.
ஜகத் இரவுணவுக்குத் தயாரான வேளை
கொல்லப்பட்டான்,
ஹிரன் வேலைக்குச் செல்லும் வழியில்,
அஜித் பாலங்கட்டிக் கொண்டிருக்கையில் சுடப்பட்டான்,
அவர்கள்
அனைவருமே இளைஞர்கள்
முழுதாய் முப்பதும் கூட இல்லை
அவர்களது வருடங்களோ
அவர்கள் முன்னால் வரிசையாய் நின்றன.
எனக்கு நினைவிருக்கிறது
நான் சிறுமியாய் இருந்த போது
சாவு குறித்து என்னமாய் அச்சம் கொண்டிருந்தேன்
எனக்கு நினைவிருக்கிறது
கதறல் கேட்காமலிருப்பதற்காய்
எவ்வாறு என் காதுகளுக்குள்
விரல்களைச் செருகிக் கொள்வேன்...
எவராவது இறந்தால் கூட
அம்மா என்னிடம் சொன்னதில்லை*

*அவளும் அப்பாவும் வெள்ளையாய் உடுத்திப் போய்
கறுத்துச் சிறுத்த முகங்களோடு வருவார்கள்
உச்சந்தலையிலும், உள்ளங் கைகளிலும்,
ஒரு அரைத் தேசிக்காயைத் தேய்க்காமல் -
வீட்டுக்குள் ஓரடியும் வைக்காள் அம்மா
அப்பாவோ நேராய்க் கிணற்றடிக்கே போய் விடுவார்
குளிப்பதற்காய்.
அப்போதெல்லாம்
சாவுக்குத்தான் எத்தனை அசுத்தமும், அபச்சாரமும்.*

*ஆனால் இன்றோ
அதே வெள்ளையில் வாரத்துக்கு மும்முறை நான்
அந்த இளவட்ட முகங்களை வெறிக்கிறேன்,
ஆழ்ந்த துயரத்துடன்
சாவின் மீது அவை குற்றம் சாட்டுகின்றன.
எம் மீதும்,
தமக்கு மறுக்கப்பட்ட வாழ்வை
அவர்களை ஏமாற்றி விட்டு இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும்
வயோதிபர்கள் மீதும் .
அவை குற்றம் சாட்டுகின்றன.*

*கண்களை நுனிச்சேலையால் பொத்திக் கொள்கிறேன்
தொண்டை வரள, நான் புதையுண்டு போகிறேன்;
அத் தாயின் பார்வையை எதிர்கொள்ள இயலாது.
சம்பிரதாய வார்த்தைகளுடன்,
கைகளைக் கூப்பி, அத்தகப்பனாருக்கு தலை தாழ்த்தி விட்டு
அச் சா வீட்டிலிருந்து வெளியே வருகிறேன்.*

*இல்லை, நான் இந்தச் சேலையை
அலுமாரித் தட்டில் அடுக்கப் போவதில்லை.
அதை உடுப்புக் கொக்கியில் தான் போடுவேன்.
ஏனென்றால்,
எப்போது அது மீண்டும் தேவைப்படும் என்பது
எனக்கே தெரியாது!*

**ஆங்கிலத்தில்: கமலா விஜேரத்ன.**
**தமிழில்: ஜெ. மதுபாஷினி**

# வரலாறும் புதிய வரலாறும்

(தொடர்கிற ஒரு ஆய்வின் குறிப்புகள்)



—வ.ஐ.ச.ஜெயபாலன்

கிழக்கு மாகாணத்தில் தமிழர் முஸ்லிம் நல்லுறவு மீண்டும் துளிர்க்கத் தொடங்கியிருக்கிறது. இந்த ஆரோக்கியமான காற்று கடந்த பத்தாண்டுகால பகைமைகளை சாம்பரை, கண்ணீரை, இரத்தத்தை துடைத்த கற்றி மனங்களின் புண்களுக்கு ஒத்தடம் கொடுத்து கோணல்களை நிமிர்த்தி மனிதத்தை மீண்டும் நிமிர வைக்கும் என்கிற நம்பிக்கை பொய்த்து விடாது, பொய்த்து விடக்கூடாது.

கிழக்கு மாகாணம் பின்னிப் பிணைந்த பனை மரமும் ஆலமரமும் போன்று தமிழர்களதும், முஸ்லிம்களதும் தனித்துவமும் ஐக்கியமும் ஆன இருப்பின் சின்னமாகும்.

கிழக்கு மாகாணம் ஐரோப்பியர் வருகைவரை ஒரு பொழுதும் நேரடி ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதியல்ல. மக்கள் வானமே எல்லையாக வாழ்ந்த மண் அது. வளமான வளர்ச்சியுள்ள பகுதிகளில் போடி முறைமையின் கெடுபிடியும் பரந்துபட்ட வறுமையும் இருந்தது. கடந்த நூற்றாண்டுகளில் தமிழர்கள் பெரும்பகுதியும் நெல், மேட்டுப்பயிர், விவசாயம், மந்தை வளர்ப்பு, கடலேரி, நன்னீர் மீன்பிடி என்பவற்றில் ஈடுபட்டிருக்க முஸ்லிம்கள் இவற்றைவிட யானைபிடித்தல், மரவியாபாரம், மட்டக்களப்பு உற்பத்திப் பொருட்களை மலைநாட்டுக்கும் ஏனைய சிங்களப் பகுதிகளுக்கும், 'தவளம்' பொதிமாடுகள் மூலம் எடுத்துச் செல்லல், கடல் வாணிபம் போன்ற பண்ட போக்குவரத்து நடவடிக்கைகளிலும், நெசவிலும், வர்த்தக ரீதியிலான புகையிலைச் செய்கையிலும் ஈடுபட்டிருந்ததனால் கிழக்கு மாகாணத்தில் மூடப்பட்டிருந்த வாழ்வில் அசைவை ஏற்படுத்துகிற முன்னணிச் சக்தியாகவும் இருந்தனர்.

உண்மையில் கிழக்கு மாகாணத்து சமூக, பொருளாதார வரலாற்றுத் தேக்கத்தை பெரியளவில் உடைத்த பெரும்பணியை முற்போக்கான சிந்தனையுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் 1850களில் முன்னெடுத்தனர். ருக்கம் போன்ற குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டது. போடிமாருக்கு பெரியளவில் நிலம் விலைக்கு விற்கப்பட்டது. இக்காலகட்டத்தில் முஸ்லிம்கள் மட்டத்தில் போடிமுறைமை பெரியளவில் உடைக்கப்படவில்லை. சிறு நில உடைமையாளர்களாக முஸ்லிம்கள் பரந்துபடவில்லை. அம்பாறை மாவட்டத்தில் நிலைமையில் பெரிய வேறுபாடிருந்ததாகத் தோன்றுகிறது. இவ்விடயங்களைத் தற்போது தொடர்ந்தும் ஆராய்ந்து வருவதால் விரிவாக எழுத முடியவில்லை.

இந்த சமூக அசைவுக் காலகட்டத்தில் அரை அடிமையாக இருந்த ஏழைத் தமிழ் மக்கள் சிறு விவசாயிகளாக படுவான்கரையில் பரந்துபட்டனர். அம்பாறை மாவட்டத்து தமிழ் மக்கள் மட்டத்தில் இத்தகைய சமூக அசைவும் சிறு விவசாயிகள் பரவலாகுவதும் குறிப்பிடத்தக்க அளவு இருந்திருக்கிறது.

பெரு நிலம் வாங்கும் முயற்சிகளில் தமிழ் முஸ்லிம் போடிமார்கள் ஈடுபட்டனர். சிறு நில உடைமைகளுக்கு பின்புலங்களில் குளங்களின் கீழ் வளமும் நீர் வசதியுமுள்ள பெருநிலங்கள் விற்பனைக்கு வந்தன. முஸ்லிம்களுள் பெருநிலக் கொள்வனவு தான் அதிகம் இடம்பெற்றது என்றே நான் கருதுகிறேன். இதுவும் எனது ஆய்வுக்கு உட்பட்டிருக்கிற விடயம். இத்தகைய பின்னணியில்தான் தமிழ் முஸ்லிம்களின் பெரு நிலங்கள் தமிழர்களது சிறு நிலங்களின் மத்தியில் தீவுத் தொகுதிகளாக தனிமைப்படுத்தப்பட்டன. நிலவுடமை அமைப்பு புதிதாக சிறு நிலவுடமையாளர்களான தமிழர்களது உற்பத்திக்கு பதுளை தோட்டப் பகுதிகளில் பாரியளவிலும் மொனராகலை போன்ற சிங்களப் பகுதிகளில் சிறிய அளவிலும் சந்தை வாய்ப்பை முஸ்லிம்களது 'தவளம்" பொதி பண்டபோக்குவரத்து அமைப்பு உருவாக்கித் தந்திருந்தது. பதுளையும் கொழும்பு-ரயில் பாதையால் இணைக்கப்படுகிற வரையில் கிழக்கு மலைநாட்டின் சந்தையையும் கிழக்கு மாகாணத்து உற்பத்தியாளர்களையும், பதுளையையும் கல்குடா துறைமுகத்தையும் முஸ்லிம்களது 'தவளம்" மாடுகள் இணைத்தன.

கிழக்கு. மலையகச் சந்தைகள் இழக்கப்படாதிருந்திருப்பின் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது போன்ற பாரிய கல்வி-மத்தியதர வளர்ச்சி கிழக்கு மாகாணத்திலும் ஏற்பட்டிருக்கும். ஒரு வழியில் பதுளைக்கு வந்த ரயில் வண்டியில் கிழக்கு மாகாணத்தின் கனவுகள் நசிந்து போய்விட்டது.

கிழக்கு மாகாணத்தின் உற்பத்தியில் புதிய உத்வேகத்தை, முதலாளித்துவ உறவை புகுத்துவதிலும் முஸ்லிம்கள் முன்னோடிகளாக இருந்தனர். முஸ்லிம் பெரிய குடும்பங்களிலும் திரண்ட மூலதனம் முதலிடப்படுகிற போக்கு இந்த நூற்றாண்டின் ஆரம்பங்களில் உருவாயிற்று. உதாரணமாக நெசவு, (காத்தான்குடி, மருதமுனை) மீன்பிடி (வாழைச்சேனை) வர்த்தகப் பயிர்ச் செய்கை (தம்மன்கடுவ புகையிலை) போன்ற துறைகளை இங்கு குறிப்பிடலாம். கிழக்கு மலைநாட்டு சந்தை வாய்ப்புக்கள் இழந்தபோது சிறு விவசாயிகளாக மாறாது வர்த்தகம் சார்ந்த தொழில்களில் இருந்த ஏழை முஸ்லிம் மக்களது வாழ்வு பாதாளத்தில் வீழ்ந்தது. ஏழை முஸ்லிம் மக்கள் பெரிய குடும்பங்களுக்கு கீழ்ப்படுத்தப்பட்டமை, 1800களின் பிற்கதியில் வலுப்பெற்றிருக்க வேண்டும். அதற்கு முன்னர், நிலம் சாராத தொழில்களில் அவர்கள் தமிழர்களுடன் ஒப்பிடுகையில் அதிக சுதந்திரர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது எனது கருத்தாக உள்ளது. இதுவும் சிறு நில உடைமை விரிவடைந்த காலகட்டத்தில் ஏழை முஸ்லிம்கள் விலகியிருந்ததற்கு ஒரு காரணமாக இருக்கலாம். சமயம் சார்ந்த சமூக அமைப்பு, நிலம் சாராத மாற்று தொழில் வாய்ப்புகள் என்பவையும் ஏனைய முக்கியமான காரணங்களாகும்..

மரபு சார்ந்த நடவடிக்கைகள் நசிந்து போக புதிய முயற்சிகளில் முஸ்லிம்கள் ஈடுபட்டபோது ஒரு சில குடும்பங்களது மேலாதிக்கம் நிலம், மூலதனம் இரண்டிலும் ஏற்பட்டது. சிறு நில உடமை வளர்ந்திருக்காமையும் கிழக்கு முஸ்லிம் மக்கள் மத்தியில் பலமான குடும்ப ஆதிக்கத்துக்கு வழிவகுத்தது. 1960, 1970களில் கிழக்கு மாகாணத்து சமூக பொருளாதார வரலாற்றுத் தேக்கம் நிலம் சார்ந்த உற்பத்தி சார்ந்து உடையத் தொடங்கியது.

60, 70களில் சந்தை வாய்ப்பின் விரிவாக்கம் நெல், விவசாயம் வர்த்தகமயமாதல் உப உணவுச் செய்கை நெல் குத்தும் ஆலைகள் விரிவாக்கம், உழவு இயந்திரம், மீன்பிடி மேம்படல் என பல்துறை சாந்ததும், கல்வி விரிவாக்கத்தாலும் (ஜனாப் பதியுத்தின் முகம்மத் அவர்களுக்கு நன்றி.) இந்த அசைவு ஏற்பட்டது. இத்தகைய மாற்றங்களை முழுமையாக கைப்பற்றிக் கொள்கின்ற வாய்ப்பு கிழக்கு மாகாண தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு மறுக்கப்பட்டது. அவர்களது நிலங்களும் காடுகளும் மேய்ச்சல் தரைகளும் அரசு ஆதரவு திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களால் அபகரிக்கப்பட்டது. ஆனால் ஆலும், பனையுமாக பிணைந்திருந்த மக்கள், தமது நிலமும் நீரும் சூரிய ஒளியும் பறிபோக எஞ்சியிருந்த வளங்களுக்காக ஒருவர் குரல் வளையை ஒருவர் கடிக்கிற துன்பியலில் விழுந்தார்கள். ஒரு வகையில் நமது அரசியலும் போராட்டமும் கூட புதிய நிலைமைக்குப் பலியானதுதான். தமிழரும் முஸ்லிம்களும் மோதுவதல்ல வரலாற்றின் கோரிக்கை. தனித்தன்மையுடனும் ஐக்கியத்துடனும் அவர்கள் தமது நிலத்தை மீட்க வேண்டுவதும் கடந்த காலங்களில் தமது நிலங்களில் குடியேறியுள்ள சிங்கள மக்களையும் ஏற்றுக்கொண்டு புதிய வரலாற்றைப் படைப்பதுமே இன்றைய வரலாற்றின் கோரிக்கை. சிங்கள மக்களது உரிமைகளையும் மதித்து உறுதிப்படுத்துகின்ற இணைந்த தமிழ் முஸ்லிம் தேசங்களாலான வடக்க கிழக்கு தாயகமே இன்றைய வரலாற்றின் கோரிக்கையாகும். இங்கு வேடர்கள் சமூகத்தின் நிலமும் உரிமைகளும் கூட பாதுகாக்கப்படும். இது வெறும் கனவல்ல. இதற்கான சூழல் ஒன்று மீள்உருப்பெறுவதையே கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லிம் உறவுகளின் அபிவிருத்தி விடிவெள்ளியாக உணர்த்துகின்றது என நம்புவோமாக.

1) வடபகுதி தமிழர்களில் 4 லட்சம் பேர் வரை வெளிநாடுகளுக்கு சென்றுவிட்ட பின்னணியிலும் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் வெளிநாட்டுக் கனவுகளின்றி தாயகம் திரும்புவதையே தமது நோக்காகக் கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய தேச பக்தி எந்தப் போராளிகளுடைய தேச பக்தியையும் விடக் குறைந்ததல்ல. இந்தத் தேசபக்தர்கள் வடகிழக்கு மாகாணத்தின் எல்லாத் தலைமைகளிலும் பங்கு பற்ற வேண்டியவர்கள். இந்த தேசபக்தர்களுக்கு காரணமற்ற துயரங்கள் களையப்படுவதுடன் இவர்கள் தம்பிரதேசங்களில் மீளக்குடியேறி சகல துறைகளிலும் தங்களை மீளமைத்துக் கொள்ளக் கூடியவகையிலான ஏற்பாடுகளை போராளிகள் ஆரம்பித்தால்.

2) தமிழ்ப் போராளிகள் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய சூழலை ஏற்றுக்கொண்டு முஸ்லிம் போராளிகளும் நமது தேசத்தின் பலம் என்கின்ற அடிப்படையில் அவர்களுடன் பேச்சு வார்த்தைகளை விஸ்தரிப்பார்களே யானால்.

3) கிண்ணியா போன்ற பகுதிகளில் முஸ்லிம்கள் இழந்தவற்றிற்கு இழப்பீடு வழங்கப்படுவதுடன் எதிர்காலத்தில் முஸ்லிம் அலகுகளுடன் எந்த பிரச்சினைகளானாலும் தனியாருடன் தொடர்பு கொள்ளாமல் பள்ளிவாசல் சபைகளுடனோ முஸ்லிம்களது அரசியல் தலைமைகளுடனோ தொடர்பு கொள்வார்களேயானால்,

4) தமிழ் அலகுகளிலுள்ள முஸ்லிம்களது வளங்களுக்கு வாடகை வட்டி என்பன ஏற்பாடு செய்யப்படுமேயானால்,

5) தமிழர்கள் முஸ்லிம்கள் மத்தியில் செல்வாக்குள்ள தலைமைகளை அங்கீகரித்து அவர்களுடன் சேர்த்து சமூக பொருளாதார அரசியல் தீர்மானங்களை எடுக்க முன்வருவார்களேயானால்,

6) அம்பாறை மாவட்ட தமிழர்களின் பூமி தனித்த தமிழ் அலகு என்பதை முஸ்லிம் மக்களது தலைமை ஏற்றுக் கொள்வார்களேயானால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் புதியதொரு வரலாறு உருவாகுவதை எந்த ஒரு சக்தியாலும் தடுத்து விடமுடியாது.

## எங்கோ எதையோ...

இருளடைந்த நெடுநிலத்தின் வழியே
கால்கள் களைத்து,
விழிகள் மழுங்கி வீழும் வரைக்கும்
நாம் நடந்தோம்;
நடந்து களைத்தோம்.
யாரெமைத் துரத்தியது
துரோகம் நிறைந்த துப்பாக்கிகளே?

நினைவுப் பெருவெளியில் அலைகையில்
போரிடும் உனது பாடலால் திடுக்குற்றேன்.
மக்கிப் போன எலும்புக் கூடுகளில்
நீயதை இசைத்தாய்
தொண்டைக் குழிக்குள் சிக்கித் திணறும்
உயிர்களின் மரண ஓலத்தால்
உனது கானம் அமர கானமாயிற்று

மரணம் மூச்சுக் குழாய்களின்
நுனிவரைக்கும் வந்து போகிறது
ஆன்மாவே வலிக்க,
உயிரைச் சுண்டியிழுக்கு மிக்
கொலைக் கரங்கள் யாரினது?-
யாரினது துரோகம் நிறைந்த துப்பாக்கிகளே?

மனிதர்கள் நிறைந்த தெருக்களில்
நான் அலைகிறேன்
சில போது சுவரில் ஒரு பல்லியைப் போல்
ஒண்டியிருக்கிறேன்

சிலபோது காரணமின்றியே அழுகிறேன்
சிலபோது அழக்கூட முடியாமல் தோற்கிறேன்

பீதியில் உறைந்த கண்களும்
களைப்படைந்த உணர்வுகளுமாய்
எங்கோ எதையோ வெறித்திருக்கிறேன்

எனக்குள் என்ன தான் நேர்கிறது?

- ஸிராஜ் மஷ்ஹூர்

# பேச்சுவார்த்தையும் புத்திஜீவிகளும்!

எஸ்.பாலகிருஷ்ணன்

சமீபத்தில் கொழும்பு, பேராதனை பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தமிழ்ப்புத்திஜீவிகள் அரசின் தீர்வுப் பிரேரணைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். கொழும்புக்கு வருவதற்கான அழைப்புக் கடிதம் தேசிய நல்லிணக்க இன விவகார அமைச்சின் மேலதிக செயலாளர் சேனாரத்தின அவர்களால் அனுப்பப்பட்டிருந்ததாக அறியப்படுகின்றது. இப்படி அழைக்கப்பட்ட ஒரு சில தமிழ்ப் புத்திஜீவிகள் நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் யாப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரீஸ் அவர்களை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இப்படிச் சென்ற இவர்களில் எவருக்குமே இந்தச் சந்திப்புக்கான உண்மையான காரணங்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. கலந்துரையாடலுக்கு சென்ற பொழுதுதான் அங்கே பத்திரிகையாளர்களும், வீடியோ படப்பிடிப்பாளர்களும் குழுமி இருப்பதைக் கண்ட ஒருசில புத்திஜீவிகளுக்கு அந்தக்கூட்டம் சம்பந்தமான சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. எனினும் அங்கு நடை பெற்ற பேச்சுவார்தைகளின் போதுதான் அரசாங்கத்தினுடைய தீர்வுப் பிரேரணை தொடர்பாக யாழ்ப்பாண மக்களுக்கு விளக்குவதற்கு தமிழ்ப் புத்திஜீவிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதை நோக்கமாகக் கொண்டே அக்கூட்டம் கூட்டப்பட்டிருந்ததை அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் அரசாங்கத்தினுடைய அதிகாரப் பரவலாக்கல் பிரேரணை முன்வைக்கப்பட்டதிலிருந்து இன்று வரை கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுடன் கூட பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள அரசு எந்த வித முயற்சிகளையும் மேற்கொள்ள வில்லை. மாறாக பேச்சுவார்த்தைக்கு தமிழ்க் கட்சிகளினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் எல்லாம் தொடர்ந்தும் அரசினால் நிராகரிக்கப்பட்டே வந்துள்ளன. சமீபத்தில் தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டபொழுது இந்தத் தீர்வுப் பிரேரணைகள் தொடர்பான விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு பதிலாக ஐக்கிய தேசிய கட்சியினுடைய ஆதரவைப் பெறுவதற்கான பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கின்றது. கடந்த 17 வருட ஆட்சிக்காலத்தின் போது இப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய எத்தனையோ சந்தர்ப்பங்களை ஐக்கிய தேசியக்கட்சி திட்டமிட்டு சீர்குலைத்ததன் மூலம் தனது பேரினவாத வேட்கையை பாதுகாத்துக்கொண்டது என்பதும், இந்தத் தமிழ்க் கட்சிகளின் வேண்டுகோள்களுக்கு செவிசாய்க்ககூடிய எவ்விதமான தயார்நிலையில் அவர்கள் இல்லையென்பதும் சந்திரிகா அரசுக்கு தெரிந்திராத விடயமல்ல. மறுபுறத்திலே கடந்த வருடம் அரசியல் தீர்வுத்தொடர்பாக இவ் அரசாங்கம் வெளியிட்ட முதலாவது பிரேரணை பிறகு, இந்த வருடம் சட்ட நகல் வரைவாக உருமாற்றம் பெற்ற பொழுது அதனுடைய தரம் குறைக்கப்பட்டுள்ளதோடு இவ்விடயத்தில் சிங்கள, பௌத்தர்களின் அபிலாஷைகளுக்கு அரசாங்கம் சரணடைகின்ற போக்கையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான கே.என். சொக்ஸி முன்வைத்த ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்கான பிரேரணையை மிக ஆர்மான முறையிலேயே பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் சட்ட வரைவாக முன்வைத்து இதன்சார்பாக செயற்படுவதற்கான தமது தயார் நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளார் அமைச்சர் பீரிஸ். இதன் மூலம் இனப்பிரச்சினையின் தீர்வுத் தொடர்பாக ஒரு முறையான நிலைப்பாட்டை அரசு இன்னும் மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது. இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக அரசே ஊசலாடிக் கொண்டு இருக்கும்பொழுது தமிழ்மக்கள் மத்தியில் தீர்வுத்திட்டத்தை விளக்குவதற்கு புத்திஜீவிகளைக்கூட்டி வேண்டுகோள் விடுக்கின்றதென்பது ஒரு கேலிக்கூத்துக்கு சமமான செயலாகும். எனினும் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட துணிவுள்ள ஒரு இணைப் பேராசிரியர், இது தொடர்பாகக் கேள்வியை எழுப்பி அரசாங்கம் முன்வைத்த பிரேரணைகளில் எந்தப் பிரேரணையை தமிழ் மக்களுக்கு விளங்கப்படுத்துவது என்ற வினாவையும் எழுப்பியுள்ளார்.

பௌத்த மதத்துக்கு முதன்மைத்துவம் அளிப்பது பற்றிய இந்த அரசியல் பிரேரணை தொடர்பாக வினவிய பொழுது அது பௌத்தர்களுடைய உணர்வுக்குட்பட்ட அம்சமாக (Emotional Issue) இருப்பதனால் இவ்விடயம் தொடர்பாக இத்தகைய நிலைப்பாட்டை அரசு மேற்கொண்டுள்ளது என்ற கருத்தை அமைச்சர் ஜீ.எல்.பீரீஸ் வெளிப்படுத்தியுள்ளார். பௌத்தர்களுக்கு பௌத்த மதம் எவ்வளவு தூரம் உணர்வு பூர்வமானதோ அதே அளவுக்கு இந்துக்களுக்கு இந்து மதமும், இஸ்லாமியர்களுக்கு இஸ்லாமிய மதமும், கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ மதமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. இந்த முக்கியத்துவங்களைக் கருத்திற்கொண்டு ஒவ்வொருவருக்கும் தத்தமது மதங்களைப் பேணிப்பாதுகாத்துக்கொள்கின்ற உரிமையை சமத்துவமான வகையிலேயே உத்தரவாதப்படுத்துவதற்காக அரசின் பொறுப்புக்கள் அமைய வேண்டும். பெரும்பான்மையினரின் மதத்துக்கு முதன்மைத்துவம் கொடுப்பதன் மூலம் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்திற்கு கட்டுப்படுவதற்கான அரசின் தயார்நிலையே அமைச்சர் பீரிஸ் அவர்களின் கூற்று பிரகடனப்படுத்துகின்றது.

இவ்வரசாங்கத்தை பதவியில் அமர்த்துவதற்கு இந்நாட்டின் சிங்கள புத்திஜீவிகளில் ஒரு சாரார் பாரிய பங்களிப்பைச் செய்தனர். அரசாங்கம் பதவிக்கு வந்ததற்குப் பிறகு இவர்களில் எவரையும் அரசாங்கம் கணக்கில் எடுக்கவில்லை. இதை ஒரு பெரும் மனக்குறையாக இந்தப் புத்திஜீவிகள் வெளிக்காட்டிய பொழுது இந்த விடயம் அரசாங்கத்துக்கு சார்பான சட்டத்தரணி ஒருவர் மூலமாக ஜனாதிபதிக்கு மிக நெருக்கமாகச் செயற்படுகின்ற அமைச்சர் ஒருவருக்கு அறிவிக்கப்பட்டு அந்த அமைச்சின் முயற்சியின் மூலம் இந்தப் புத்திஜீவிகளை ஜனாதிபதி அவர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இச் சந்திப்பு இந்த புத்திஜீவிகளின் மனக்குறைகளை போக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதா அல்லது அரசாங்க நடைமுறைகளுக்கு அறிவியல் ரீதியான வழிகாட்டல்களையும், பங்களிப்புகளையும் பெற்றுக்கொள்வதை நோக்கமாகக்கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டதா என்பது தெரியவில்லை. எனினும், இந்தப் பேச்சுவார்த்தையின் போது இனப்பிச்சினைக்கான தீர்வு தொடர்பாக கடந்த வருடம் அரசினால் வெளியிடப்பட்ட பிரேரணைகள் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டு, இவற்றில் காணப்படுகின்ற குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து இந்தப்பிரேரணைகள்மேலும் செழுமைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இவர்களுக்கு ஜனாதிபதியினால், வேண்டுகோள் விடப்பட்டது. இதைத் தொடர்ந்து சில மாதங்களாக மிக ஆர்வமான முறையிலேயே முயற்சி செய்து இந்தப் புத்திஜீவிகள் பல்வேறு சிபாரிசுகளை அரசாங்கத்திற்கு வழங்கினார்கள். இப்படி செயற்பட்ட இந்தப் புத்திஜீவிகளின் அணியில் ஒரு சிலர் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சார்ந்தவர்களாவர்.

இவர்களின் சிபாரிசுகள் அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டு பல வாரங்களின்பிறகுதான் அரசாங்கத்தின் சட்ட நகல்வரைபு வெளியிடப்பட்டது.

எனினும் இந்தச் சட்ட நகல்வரைவின் பொழுது இந்தப் புத்திஜீவிகளினால் முன்வைத்த எந்த விதமான சிபாரிசுகளும் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். அரசின் இந்த செயற்பாடானது தாமாக முனைந்து உதவி செய்த இந்த புத்திஜீவிகளின் அறிவை அவமதிப்புக்குள்ளாக்கிய செயலுக்கு சமமானதாகும். எனினும் இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு உறுதியான நிலைப்பாட்டில் அரசாங்கத்துடன் பேரம் பேசக்கூடிய நிலையில் செயற்பட்டிருந்தால் அரசாங்கம் முன்வைத்துள்ளதை விட முன்னேற்றகரமான சட்டவரைவை முன்வைப்பதற்கு நிர்ப்பந்தத்தை பிரயோகித்து இருக்கலாம். அதற்கு பதிலாக இவர்கள் மௌனம் சாதித்தமையும், இவர்களில் ஒரு சிலர் இந்த அரசாங்கத்தின் பிரேரணையை பிரச்சாரப்படுத்துகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளமையும் இவர்கள் எந்த அளவுக்குத் தமது தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் இழந்து விட்டார்கள் என்பதை இனங்காட்டியுள்ளன. புத்திஜீவிகளின் இந்த நடைமுறையில் பங்கு பற்றிய தமிழ சமூகத்தைச் சார்ந்த ஒரு இணைப்பேராசிரியர் ஒருவர் தமிழ்ப் புத்திஜீவிகளின் கலந்துரையாடலின் போது இவ்விவகாரம் தொடர்பாக அமைச்சர் பீரிஸ் அவர்களிடம் கேள்வியை எழுப்பியது ஒரு வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். எனினும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட தமிழ்ப் புத்திஜீவிகள் அரசின் தீர்வுப் பிரேரணைகள் தொடர்பாக யாழ் மக்களுக்கு விளக்கமளிப்பதற்கு யாழ்ப்பாணம் செல்வதற்கான தமது விருப்பமின்மையை தெரிவித்துள்ளார்கள். அரசுக்கு சார்பற்ற வகையில் சுதந்திரமான முறையில் இவ்விவகாரம் தொடர்பாக தமக்கு பங்களிக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்பதை யாழ் பல்கலைக் கழக புத்திஜீவிகளுடன் கலந்தாலோசித்து முடிவு எடுப்பதாகவும் இந்தத் தமிழ்ப் புத்திஜீவிகள் முடிவு செய்துள்ளார்கள் என்று தெரிய வருகின்றது. நிலைமை இவ்வாறிருக்க தமிழ்ப் புத்திஜீவிகள் அரசின் தீர்வுத்திட்டம் தொடர்பாக யாழ் மக்களுக்கு விளங்கப்படுத்துவதற்கு யாழ்ப்பாணம் செல்ல முடிவு செய்துள்ளதாக சில பத்திரிகைகளிலும், வானொலியிலும் அறிக்கைகள் வெளியாகின. இவை இப்பேச்சுவார்த்தைகளுக்கு முன்பே அரசினால் வெறுமனே பிரச்சாரம் நோக்கம் கருதி வெளியிடப்பட்டதா என்ற சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது.

## அரசும் தீர்வு நடைமுறையும்

அரசாங்கத்தின் பிரேரணைகள் தமிழ் மக்கள் மத்தியிலே கலந்துரையாடப்பட வேண்டுமேயானால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக அரசு உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

1. மத சார்பற்ற அரசை உருவாக்குவதற்கான உத்தரவாதம்.
2. எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கின்ற இனத்தினரின் ஆதிக்கத்தை அரசியலில் நிலைநாட்டுவதற்கு வழிவகுக்கும் ஒற்றையாட்சித் தன்மையையும் பெரும்பான்மையினர் ஆளும் ஜனநாயக முறையையும் நீக்கி ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் இனங்களின் சமத்துவத்தையும் ஜனநாயக ரீதியான பங்கு பற்றுதலையும் அரசியல் கட்டமைப்பில் உறுதி செய்வதற்கான உத்தரவாதம்.
3. இனங்களுடைய சுயாட்சிக்கான உரிமையை அங்கீகரித்து அதற்கு ஏதுவாக அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்கின்ற அலகுகள் தொடர்பாக திட்டவட்டமாக அறிவித்தல். மாநிலங்களில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற கோட்பாட்டுக்கிணங்க மக்கள் மத்தியில் அதிகாரத்தை கூட்டத்தை பகிர்ந்து கொள்ளக் கூடிய அமைப்பு முறையொன்று உருவாக்கப்படல்.
4. மேற்கூறிய அடிப்படையில் ஏற்படுத்தப்படும் அரசியல் கட்டமைப்பில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையில் பகிர்ந்து கொள்கின்ற அதிகாரங்கள் தொடர்பாக திட்டவட்டமாக முடிவு செய்யப்படல். இவற்றில் பிரதேசம், காணி, மொழி, அபிவிருத்தி போன்ற விடயங்களில்மிகத் தெளிவான நிலைப்பாடுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
5. மத்திய மாநில அரசுகளுக்கு இடையில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளை பேச்சுவார்த்தை மூலமாக தீர்த்துக்கொள்வதற்குத் தேவையான முரண்பாட்டு தீர்வு விதிமுறைகளும், நிறுவகங்களும் ஏற்படுத்தப்படுவது உத்தரவாதபடுத்தப்படல் வேண்டும்.
6. இப்படியான அதிகாரப் பங்கீட்டைக் கொண்ட அரசியல் கட்டமைப்பில் நாடு பிளவுபடும் என்ற சந்தேகம் அரசுக்கோ, சிங்கள மக்களுக்கோ ஏற்படுமேயாயின், அவ்வகையாக பிளவுபடுவதை தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான யாப்பியல்ரீதியான உத்தரவாதங்களை அரசியல் யாப்பில் சேர்த்துக்கொள்ளலாம். தமிழ் மக்களைப் பொறுத்தளவிலே இனத்துவ முரண்பாட்டில் அரசியற் பிரச்சினைகள் தொடர்பாகவும் அதன் தீர்வுகள் தொடர்பாகவும் ஒரு அடிப்படைப் புரிந்துணர்வை கொண்டவர்களாகவே இருக்கின்றனர். எனவே ஐக்கிய இலங்கையை பாதுகாத்துக்கொள்வதற்கான தேவையான உத்தரவாதத்தை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமேயானால், மேற்கூறிய நிலைப்பாடுகளை, உத்தரவாதப்படுத்தக் கூடிய ஒரு தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து அதனடிப்படையிலான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது அவசியமாகும். இனத்துவ பிரச்சினையின் பின்னணியுடன் நோக்கும் பொழுது இலங்கை இரண்டாகப் பிரிவதைத்தடுக்கக்கூடிய தகுதி தமிழர்களுக்கு மட்டுமே இருக்கின்றது. சிங்கள அரசாங்கத்திற்கோ, சிங்கள இராணுவத்திற்கோ தாம் மேற்கொள்ளும் அடக்கு முறையின் மூலமாக இதை சாதித்துக்கொள்ள முடியாது என்பது நிரூபிக்கப்பட்ட விடயமாகும். ஏனென்றால், தமிழர்கள் பிரிந்து செல்வதற்கான தேவையை உருவாக்கிக்கொடுத்தவர்கள் இவர்களே, பல்லினப்பாங்கான ஒரு அரசும் பல்லினமயப்படுத்தப்பட்ட இராணுவ நிறுவகங்களையும் உருவாக்கக் கூடிய வகையில் இலங்கையில் அரசியல் நடைமுறைகளில் தமிழர்கள் பங்கு பற்றக்கூடிய ஜனநாயகக் கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலமே நாடு பிரிவதற்கு எதிரான உத்தரவாதத்தை தமிழர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தனது யுத்த முனைப்புக்களைப் பின்தள்ளிவிட்டு பல்லின ஜனநாயக இலங்கையை அரசியல் நடைமுறைகளின் மூலமாக ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை நடைமுறைகளில் முழுமையான கடமைப்பாடுடன் அரசு முன்வரும்வரை அரசின் மீது நம்பிக்கை வைத்து செயற்படுதைத் தமிழ்ப் புத்திஜீவிகள் தவிர்ப்பது நல்லது.

## புத்திஜீவிகளின் பங்கும் கடமைகளும்

எனினும், அரசு இவர்களை நாடி வருகின்ற இவ்வேளையை சாதகமாகப் பயன்படுத்தி மேற்கூறிய நிலைமைகளை ஏற்படுத்துவதற்கான தாக்கத்தை அரசுக்கு ஏற்படுத்துவதற்குத் துணிவுடன் இப்புத்திஜீவிகள் செயற்படவேண்டும். அத்தோடு தம்முடன் தொடர்புள்ள சிங்கள, முஸ்லிம் புத்திஜீவிகள் மத்தியிலும் இவை தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்துதல் வேண்டும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், அரசாங்கத்தின் தீர்வுப் பிரேரணைகள் தொடர்பான பிரச்சாரப் பொறுப்புகளை பொறுப்பேற்றுள்ளவருமான ஒருவர்தான் இந்த தமிழ்ப் புத்திஜீவிகள். அமைச்சர் பீரிஸ் பேச்சுவார்த்தைக்கு உடந்தையாக செயற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. அதன் மூலம் இந்தப் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த முற்போக்குப்புத்திஜீவிகள் எந்தளவுக்குத் தமிழ்ச் சமூக அரசியல் தொடர்பான புரிந்துணர்வற்றவர்களாக இருக்கின்றார்கள் என்பது தெளிவாகிறது. அரசின் தீர்வுத் திட்டம் தொடர்பாக யாழ் குடாநாட்டில் கலந்துரையாடப்பட வேண்டுமேயானால் அதற்கான அரசியல் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இனப்பிரச்சினைத் தொடர்பான முரண்பாட்டில் தமிழ்ப் புத்திஜீவிகளில் பெரும்பான்மையினர் மௌனிகளாகவும், வெறும் பார்வையாளர்களாகவுமே இருந்து வந்துள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் உருவாகிய போராட்டங்களுக்கோ அல்லது தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான போராட்ட நெறிமுறைகளையும் வரையறைகளையும் வகுத்துக்கொள்வதற்கோ தேவையான அறிவியல் ரீதியான பங்களிப்பைச் செலுத்த வேண்டிய கடமையை தவிர்த்து வந்துள்ளனர். இதன் விளைவாக எதுவித அறிவியல் வழிகாட்டலும் அற்ற நிலையில் ஆயுதபலத்தின் தயவில் நம்பியிருக்கவேண்டிய நிலைக்குத் தமிழர்களின் போராட்டம் தள்ளப்பட்டு, ஆயுதம் ஏந்திய குழுக்களின் அதிகாரத்திற்கு அடங்கிக் கிடக்க வேண்டிய நிலைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள். இதே கதிதான் தமிழ்ப் புத்திஜீவிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

ஆயுதக்குழுக்களின் அத்துமீறல்களையும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும், இனவாதரீதியான செயற்பாடுகளையும் வெறுமனே கண்டிப்பதன் மூலமோ அல்லது விமர்சிப்பதன் மூலம் மட்டுமோ நிலைமைகளை மாற்றிட முடியாது என்பது இந்த ஆயுதப்போராட்ட வரலாற்றின் படிப்பினையாகும். இது வேறுவிதமான முரண்பாடுகளைத் தான் தோற்றுவிக்கும். எனவே தமிழ் மக்களின் அபிலாஷைகளின் வரையறைக்குள் அவர்களின் அரசியற் சக்திகள் செயற்படுவதை நோக்கமாகக்கொண்டு தமிழ் மக்களின் பக்கம் நின்று ஆக்கபூர்வமான விமர்சனங்களுடனான தொடர்ச்சியான அறிவியற் கருத்தாடலின் மூலமாகத்தான் தமிழ் அரசியலில் தோன்றியுள்ள அராஜக நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியும். இதற்கான முக்கிய பங்களிப்பை செய்ய வேண்டிய பொறுப்பு தமிழ்ச் சமூகத்திலுள்ள புத்திஜீவிகளைச் சார்ந்ததாகும்.

முரண்பாடு என்பது ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை இப்பொழுது அடைந்திருக்கின்றது. இப்பிரச்சினை அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படல் வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியிலே வலுப்பெற்று வருகின்றது. இந்த யுத்தத்தை ஒரு புனித யுத்தமாகத் தென்னிலங்கை மக்கள் கருதக்கூடிய மனநிலையை உருவாக்கும் அரசுகளின் மாயைகளைத் தகர்த்தெறிவதிலும், இனசமத்துவங்களுடனான அரசியல் தீர்வின் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் என்ற மனநிலையைத் தென்னிலங்கை மக்கள் மத்தியில் உருவாக்குவதிலும் தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் பெரும் பங்கை வகித்துள்ளதை எவரும் மறுக்க முடியாது. அத்தோடு யுத்தத்தையும் இனவாத சக்திகளையும் எதிர்த்து செயற்பட்டதன் மூலம் அரசியல் தீர்வின் அவசியத்தை மக்கள் உணர்ந்து கொள்வதில் தென்னிலங்கையின் சில இடதுசாரி அரசியல் அமைப்புகளும் சிங்கள முற்போக்கு புத்திஜீவிகளும் சில அரச சார்பற்ற அமைப்புக்களும் வகித்த பங்கும் மறுப்பதற்

77

# நிரந்தர சமாதானம்: அரசியல் தீர்வு மூலமே!

பத்து வருடங்களுக்கு மேலாக யுத்தத்தை அறுவடை செய்யும் மண். வாழ்ந்து தொலைக்கும் மனிதர்கள். பத்திரிகையாளர்களையும்மறுக்கும்'யுத்த ஜனநாயகம்'. இதன் நடுவே எதிர்பார்ப்புகளுடன் மனோரஞ்சனின் (பயணக்) கட்டுரையை வாசிப்பவர்களுக்கு ஏமாற்றம்தான்மிச்சம். ஒரு ஒடுக்கப்படும்இனத்தின் பட்டியலில் இருந்து காணாமல் போய்விடுகிறார் கட்டுரையாளர். (தனது வீட்டாரைச் சந்தித்த நிகழ்ச்சி தவிர) ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளனை கட்டுரையாளரின் இடத்தில் பிரதியீடு செய்தாலும் கூட கட்டுரை அற்புதமாகப் பொருந்தி விடுகிறது.

யுத்தம் தோய்ந்த மண்ணில் எழுத்துக்கள் ஒட்டிவிட முடியாமல் மறுக்கப்பட்ட பத்திரிகைச்சுதந்திரத்தின் நடுவே இப்படியான சந்தர்ப்பங்களைப் பாவித்தது தவறாகப்படவில்லை. ஒரு நீண்ட யுத்தத்தில் சிக்குண்டு தவிக்கும் மக்களின் உளவியல் தேவைகள், உடனடித் தேவைகள், (உணவு, சுகாதாரம், போன்ற) வாழ்வியல் அவலங்கள்என்பவற்றை வெளிக்கொணரவும் எழுத அனுமதிக்கப்பட்ட எல்லைக்குள்ளே நின்றாவது (மதிப்பிட்டுக் கொள்ளும் பொறுப்பை வாசகனிடமிருந்து பறிக்காமல்) விசயத்தைத் தொட்டுச் சென்றிருக்கலாம்.

மேலோட்டமாகப் பார்த்தால் ஒரு பயண அனுபவம்போல் தோன்றினாலும், கட்டுரையைக் கட்டுடைத்துப் பார்த்தால் எஞ்சுவது வெறும் புலி எதிர்ப்பும், அதனால் எழும் இராணுவத்தின் மீதான தாராளப் போக்கும்தான். பிரச்சினை இராணுவ வீரனிடம் மனிதாபிமானம் இருக்கிறதா? இல்லையா? என்பதல்ல. அந்த அமைப்பு முறைதான் பிரச்சினை. அது நெறிப்படுத்தும்இராணுவ மனோபாவம்தனிமனித உளவியலை வென்றுவிடுகிறது. அந்த அமைப்பு அரசைக்காப்பாற்ற ஏவப்படும் கருவி. அது கொல்லும், பாலியல் வன்முறை புரியும், அடக்கி ஒடுக்குவதில் மகிழ்ச்சிகொள்ளும் ஒரு குழந்தையைக் கேட்டால் கூட மனப்பாடம் செய்தது போல் இந்தக் குணாம்சங்களைச்சொல்லி விடும்.

இதன்நடுவே,

''..... எனக்கும் துக்கமாக இருந்தது. ஒரு சொல்லாவது பேசவில்லையே. கட்டியணைத்து அழுதது மட்டும்தான். எப்படி இந்த மக்கள் வாழ்கிறார்கள்...'' என்ற இராணுவ வீரனின் dialogue

மற்றும் ''சாவகச்சேரி இளம் தம்பதியினரின் கொலை சம்பந்தமாக இராணுவத்தினர் கவலை தெரிவித்தார்கள்...''

''இராணுவ வீரர்களில் பெரும்பாலானோர் பொறுமை, ஒழுக்கம் நிறைந்தவர்கள் என்பது அவரது (லொறிச்சாரதி ஒருவரின்) அபிப்பிராயம்''

''இப்பொழுது உங்களை நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தை வீட்டை, உறவினர்களைக் கண்ணுற்றீர்கள். நாளைக்கு இதே நிலைமையெனின், உங்கள் மனச்சாட்சி என்னசெய்யும்..'' என்ற இராணுவத்தின் 'பச்சாதாபம்'



இப்படியே மக்கள் பற்றிய கவலை, பொறுமை, ஒழுக்கம், மனவருத்தம், மனச்சாட்சி என்றெல்லாம் சொற்களை இராணுவத்தோடு பொருத்துவது எரிச்சலூட்டுவதாக உள்ளது.

மறுபக்கத்தில் ''கடந்த பத்து ஆண்டுகளில் யாழ் மக்கள் ஹிட்லர் ஆட்சியின் கீழ் வாழ்ந்துள்ளனர்.'' என்று (பாடசாலை ஆசிரியர் ஊடாக ) பேசுகிறார் கட்டுரையாளர். புலிகளின் ஜனநாயக மறுப்பு மற்றும் அராஜகப் போக்குப் பற்றியோ, மக்களின் உடனடித்தேவைகளைக் கூட உதாசீனம் செய்யம் போக்குப் பற்றியோ பேசுவதில் முரண்பாடு இல்லை. ஒடுக்கப்படும் இனத்தின் போராட்டக் களத்தில் தோன்றிய விளைபொருள் புலிகள் அமைப்பு. எனவே ஒடுக்கப்படும் இனத்தின் பக்கம் நின்று புலிகளின் போக்குக்கு எதிராகப் போராடுவதை விடுத்து வெறும் புலி எதிர்ப்பில் கிளர்வது தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்ததில் போய்முடிந்ததிற்கு 'கொழும்பு தமிழ் குழுக்கள்' (முன்னைய 'போராட்ட' அமைப்புக்கள்) சிறந்த உதாரணம். இதையே கட்டுரையாளர் புத்திஜீவித்தனமாகச் செய்துகொள்கிறார் அல்லது இதற்கு பலியாகிறார் என்று கூடச் சொல்லலாம்.

தமிழ் இனத்தின் மீதான போரை நிறுத்து என்றோ, அங்கு நடப்பதை வெளிக்கொணரும் ஒரு பத்திரிகா தர்மத்துக்காகவோ அந்த மக்களின் உயிர் வாழ்வுக்கான உடனடித்தேவைகளை நிறைவு செய்யவோ தானும் (ஒற்றையாட்சியை முழங்கும்) அரசை நிர்ப்பந்திக்கும் ஜனநாயக போராட்டங்கள் (தெற்கில்) தோன்றாத வக்கற்ற நிலையை மூடிமறைத்து, ''தெற்கில் சமாதானம் தொடர்பாக அமுக்கம் கொடுக்க பல குழுக்கள் தோன்றினாலும் வடக்கில் அவ்வாறு தோன்றாமைக்குக் காரணம் என்ன'' என்று கேட்கிறார் கட்டுரையாளர். புலிகளின் ஆட்சி ஹிட்லரின் ஆட்சி என்ற பதில் அசல் திருப்தியைத் தருகின்றது அவருக்கு. தமிழ் மக்கள் மத்தியிலிருந்து அப்படியான ஜனநாயகப் போராட்ட சக்திகள் ஏன் தோன்றவில்லை? என்ற கேள்வி தமிழ்மக்களோடு நின்று கேட்கப்படவேண்டிய ஒன்று: இராணுவத்தோடு உரசிநின்று அல்ல: புலிகளின் போக்குக்கு எதிரான 'போராட்டத்திற்கு' அரசைப் 'பாவித்தவர்கள்' தமிழ் மக்களைக் காட்டிக்கொடுப்பதைத்தான் சாதித்தார்கள். இந்த வரலாறு தமிழ் மக்களுக்கு ஒன்றும் புதியது அல்ல.

தமிழ் மக்களின் போராட்ட வரலாறு எம்மைக் கொணர்ந்து நிறுத்தியிருக்கிற இடத்தை (தமிழ் மக்களே விரும்பினாலும் கூட) பின்னுக்கு இழுத்துச் சென்று ஒட்டிவிட முடியாது. இந்த யதார்த்தத்தை மறுத்து மேற்கொள்ளப்படும் 'தீர்வு முயற்சிகள்' பயனற்றவை. தமிழ் மக்களின் சயநிர்ணய உரிமையை ஏற்காத எந்தத் தீர்வும் நிரந்தரமான சமாதானத்தைத் தரப்போவதில்லை. மற்றைய முயற்சிகளால் உடனடி அமைதியை, குறுகிய கால சமாதானத்தை தரக்கூடிய தீர்வுகள் சாதிக்கப்பட முடியாதவை என்பதல்ல இதன் அர்த்தம். (இவை தேவையற்றது என்பதுமல்ல) இது திரும்பவும் முறித்துக்கொண்டு போரை முன்தள்ளி வரலாற்றை இன்னொரு கட்டத்துக்கு இட்டுச் செல்லும். பிரிந்து போகும் உரிமையை இன்னமும் ஆழப்படுத்தும். இப்படியான தீர்வுகள்/ பேச்சுவார்த்தைகளை அரசியல் ரீதியில் சாதகப்படுத்திக்கொள்ளத் தவறும் புலிகளின் பலவீனமே புலிகள் மீதான (சமாதான உடன் படிக்கையை முதலில் மீறினார்கள் என்ற) பழியை அவர்களுக்குப் பரிசாக்கியது. மற்றப்படி புலிகளால் தான் யுத்தமே ஆரம்பித்தது என்று ஒட்டுமொத்தப் படுத்துவது சிறுபிள்ளை அரசியலாகும். இல்லாவிட்டால் ஏதோ சமாதானம் பூச்சொரிந்து மணங்கமிழும் என்பது போல காட்ட முனைவது அபத்தம்.

உணவுக்கியூவில் நின்ற மக்களுக்கு பிரசுரங்களை வழங்கும் விவஸ்தை கொண்ட அமைச்சர் அங்கம் வகிக்கும் அரசானது பொருளாதாரத் தடையை விதித்து தமிழ் மக்களைத் தண்டித்ததை மூடிமறைத்து, உணவு விநியோகத்தில் நடைமுறைச் சிக்கல், மற்றும் உணவு ப்ானியநிலையங்களை புலிகள் தாக்கியழிப்பது போன்ற தடைகளாலும்தான் இன்னமும் உணவுப் பற்றாக்குறையை நிலவுவதுபோல் காட்ட முனைவது ஒரு மோசடி.

யுத்தத்தில் சிக்கித்தவிக்கும் மக்களின் மன உளைச்சல்களை மக்களின் பொது அபிப்பிராயமாகக் காட்ட முனைவது பொதுப்புத்தி வகைப்பட்ட அணுகலாகும். உதாரணமாக இந்திய இராணுவக்கெடுபிடியின் போது மக்கள் இலங்கை இராணுவ முகாமுக்கு ஓடியதும் ஆறுதலுக்காக அழுது தொலைத்ததும், மறுதலையாக இலங்கை இராணுவக் கெடுபிடியின் போது இந்திய இராணுவத்தோடு அந்நியயோன்யித்ததும் இராணுவம் பற்றிய மக்களின் பொது அபிப்பிராயத்தை மாற்றியதில்லை.

மக்களின் உயிர்வாழ்வுக்கான (உடலியல் ) உடனடித்தேவைகள் மற்றும் உளவியல் தேவைகள் என்பது வேறு, நிரந்தர (அரசியல்) தேவைகள் என்பது வேறு. இதைக் கோட்பாட்டுப் பிரச்சினையோடு போட்டுக் குழப்பிக் கொள்வதிலும் அர்த்தமில்லை. இந்தத் தவறை புலிகளும் செய்வதனாலேயே போர் தொடங்கிய போது மக்களைப் பலவந்தமாக வெளியேறச் செய்யவும், இராணுவம் கைப்பற்றிய பிரதேசங்களுக்கு மக்கள் திரும்பிச் செல்வதற்கு எதிராகச் செயற்படவும் காரணமாகின்றன. இந்த இடத்தில், ''...இப்பொழுது நாம் இருப்பது இரண்டு துப்பாக்கிகளின்கீழ். அதனால் முன்னரைவிட இப்போது நாம்கவனமாகக்கதைக்க வேண்டும்தானே...'' என்ற (ஒரு அரச உத்தியோகத்தரின்) குரல் அரசால் மட்டுமல்ல புலிகளாலும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான்.

''.... அவர் அப்போது கதைத்த சில சொற்கள் இராணுவத்திற்கு எதிரானவை, சில புலிகளுக்கு எதிரானவை, சில இராணுவத்திற்கு சார்பானவை, சில புலிகளுக்கு சார்பானவை,.....'' என்று எழுதுவதற்கு (சரிநிகர் ஏற்கெனவே ஓர் இடத்தில் குறிப்பிட்டபடி) யாழ்ப்பாணம் சென்று வந்திருக்க வேண்டியதில்லை. ''இராணுவ வீரர்களில் பெரும்பாலானவர்கள் பொறுமை, ஒழுக்கம் நிறைந்தவர்கள் என்பது சாரதியின் அபிப்பிராயமாகும். இக் குணவியலங்புகளை குறைந்தது 3 மாதங்களுக்காவது கடைப்பிடிக்கும்படி கூறவேண்டிய தேவை அவருக்கிருந்தது. ஏனெனில் யாழ்ப்பாணத்தில் புலிகள் அக்கால இடைவெளிக்குள் அர்த்தமின்றிப் போய் விடுவார்கள் என்பதனலாகும்.'' என்று குணவியல்புக்கே காலக்கெடு கொடுத்து எழுதும் கோமாளித்தனத்துக்கு புலி எதிர்ப்பு மனோபாவமே காரணமாகிவிடுகிறது.

யாரிடமும் (கட்டுரையாளர் குறிப்பிடுவது போல) இறைஞ்சிக் கேட்கும் பொருளல்ல 'சமாதானம்' என்பது. நிரந்தர சமாதானம் அரசியல் தீர்வினூடாகவே சாத்தியப்படும். அந்தப் பாடசாலை ஆசிரியர் குறிப்பிட்டது போல ''எவரும் பலாத்காரமாக அரசியல் தீர்வினை எம்மேல் திணிப்பதை நாம் விரும்பவில்லை...'' என்பதையும் சேர்த்துப் புரிந்து கொள்வது நல்லது

ரவீந்திரன் - சுவிஸ்

## பேச்சு....

கில்லை. இந்த விடயத்தில் இந்த அரசைவிட மிக முன்னேற்றகரமான நிலைப்பாடுகளைப் பிரகடனப்படுத்தும் சிங்கள மக்களின் தொகை கணிசமான கூடிக்கொண்டு வருவதைத் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலைமையானது இப்பிரச்சினையை பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்ப்பதற்கு ஒரு பலமான அடிப்படையை உருவாக்கி வருகின்றது. அதேவேளை இப்பிரச்சினை அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படல் வேண்டும் என்னும் சர்வதேச அழுத்தங்களும் அதிகரித்து வருகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக இப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்க்கப்படல் வேண்டும் என்னும் கருத்து ஒன்றுபட்ட கருத்தாக தென்னிலங்கை அரசியற் தளத்தில் உருவாகி வருகின்றது. ஒருசில தீவிரவாத சக்திகளும் பௌத்த மத அமைப்புகள் சிலவும் மட்டுமே இராணுவத் தீர்வை வலியுறுத்தி நிற்கின்றன. இன்றுள்ள பிரச்சினை என்ன வென்றால் எவ்வகையான உள்ளடக்கத்தைக் கொண்ட தீர்வின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கப்படவேண்டும் என்பதுதான். தமிழ் இளைஞர்களில் ஆயுதம் ஏந்திய அமைப்புக்கள் எல்லாமே அவ்வப்போது பாரிய தவறுகளை செய்த வரலாற்றைக் கொண்டவை. இவை பல வழிகளிலும் தமிழ் மக்களின் போராட்டத்தையும் தீர்வை அடைவதற்கான முயற்சிகளையும் பல்வேறு வகையிலும் பலவீனப்படுத்த உடந்தையாக இருந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பானது ஆயுதப்பலத்தின் மூலம் விளைவித்த பல தவறுகளும், பலாத்கார நடவடிக்கைகளும் அவர்களது போராட்டமே ஏற்படுத்திக்கொடுத்த முன்னேற்றத்தைக் கணிசமான அளவுக்குப் பின்னடைவு செய்வதற்குக் காரணிகளாக அமைந்து விட்டது. உதாரணமாக யாழ் மாவட்ட முஸ்லிம் மக்களை முழுமையாக சில மணிநேரங்களில் பலாத்காரமாக வெளியேற்றிய சம்பவத்தைக் குறிப்பிடலாம். அப்படி வெளியேற்றியது தவறு என விடுதலைப் புலிகள் இப்போது ஒத்துக் கொள்கின்றனர். ஆனால் இச்சம்பவத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு ஏற்பட்ட நிரந்தரப் பின்னடைவைப்பற்றி சிந்திக்காமலிருக்க முடியாது. கடந்த ஐம்பது வருடகால தமிழ் மக்களின் அரசியற் போராட்டமானது அறிவியல் அடிப்படையை விட உணர்வுபூர்வமான (Emotional) எழுச்சியை மையமாகக் கொண்டே மேலெழுந்தது. தமிழீழக் கோரிக்கையும், அதே இலக்காகக் கொண்ட ஆயுதப் போராட்டங்களும் இவ்வகையிலேயே முன்னெடுத்துச் செல்லப்பட்டன. இதன் கருத்தியல் வெளிப்பாடாக சிங்கள விரோத முஸ்லிம் உணர்வுகளுள் வளர்த்து விடப்பட்டதன் விளைவுகள் நாம் மறந்து விடக் கூடியதல்ல.

உதாணரமாக தமிழ் நாட்டுக்கோரிக்கையும் அதை அடிப்படையாகக் கொண்ட ஆயுதப் போராட்டத்தையும் எடுத்துக் கொள்ளலாம். வடகிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழ் மொழி மாநிலத்திற்குள் தமது தனித்துவத்தை அரசியல் ரீதியில் நிலைநாட்டியுள்ள முஸ்லிம் மக்கள் அப்பிரதேசங்களை அவர்களினதும், பாரம்பரியத் தாயகமாகக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட காலம் முதல்இன்றுவரை இக்கோரிக்கை அல்லது அதையொட்டி மேலெழுந்த போராட்டம் தொடர்பான முஸ்லிம் மக்களின் பங்கை நிர்ணயிக்கக்கூடிய எவ்வித முயற்சியையும் ஜனநாயக ரீதியில் முறையாக மேற்கொள்ளவில்லை. மாறாக அப்பிரதேசத்தின் பெரும்பான்மையினரான தமிழர்களின் பெரும்பான்மை ஆதிக்கத்திற்கும் ஆயுதப்பலத்திற்கும் உட்படுத்திக்கொள்வதை நோக்கமாகக்கொண்டே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதன் விளைவாக மேலெழுந்துள்ள முஸ்லிம், தமிழ் முரண்பாடானது இனப்பிரச்சினையின் அரசியற் தீர்விற்குக்கூட ஒரு முட்டுக்கட்டையாக உருவாகியுள்ளது. இந்த தமிழ் - முஸ்லிம் உறவு தொடர்பான எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான எவ்வித முயற்சிகளும் ஆக்கபூர்வமாக மேற்கொள்ளப்படவில்லை. இது தமிழ் மக்களின் ஜனநாயக எதிர்பார்ப்புக்களை அடைவதைப் பலவீனப்படுத்தக்கூடிய விடயமாகும்.

மேற்குறிப்பிட்டுள்ள தேசிய சர்வதேச நிலைமைகளையும் தமிழ் சமூகத்தில் நிலவும்சாதக, பாதகங்களையும் அவதானத்தில் கொண்டு இந்நாட்டின் இனவாதப் பிரசசினைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வை அடையக்கூடிய விதத்தில் தமிழர்களின் கோரிக்கைகளை மறுசீரமைப்பதோடு தமிழ்ச் சமூகத்தில் நிலவும் உள்ளக முரண்பாடுகளையும் தீர்த்து, தமிழ் மக்கள் அவர்களின் அரசியல் அமைப்புகள் விடுதலைப் புலிகள் இவற்றுக்கிடையில் அறிவியல் ரீதியான கருத்தாடல்களைத் தமிழ் சமூகத்தினுள் மேற்கொள்வதன் மூலம்தான் தமிழர்களின் கருத்தொருமித்த கோரிக்கையை முன்வைக்க முடியும். தீர்விற்கான பேச்சுவார்த்தைகளில்விடுதலைப்புலிகள் அமைப்பின் பங்குபற்றுதலிலுள்ள முக்கியத்துவத்தைப் புறக்கணிக்க முடியாது. மறுபுறத்தில் ஒரு பல்லின ஜனநாயக வரையறைக்கு உகந்த வகையில் தமிழ் மக்களின் அரசியற் பிரச்சினைக்குத் தீர்வைக்காணும் ஜனநாயக நடைமுறையை வலுப்படுத்தக்கூடிய வகையிலான நடைமுறையை விடுதலைப் புலிகள் உறுதிசெய்வதும் தவிர்க்க முடியாததாகும். இந்நிலைமையை அடைய வேண்டுமேயானால், தமிழ் சமூகத்தின் உள்ளகக் கருத்தாடலை ஆரம்பித்து அவற்றை வலுப்படுத்த வேண்டிய சமூகப் பொறுப்பு தமிழ்ப் புத்திஜீவிகளைச் சார்ந்ததாக அமைகின்றது. இதன் மூலம் தான் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பான நிச்சயமான நிலைமையை நிர்ணயிக்கப்படக்கூடிய சூழ்நிலையை நம்பகமாக ஏற்படுத்திக் கொள்ளலாம். இது எல்லா வகையிலும் இவ்வரசு அணிந்துள்ள சமாதான முகமூடியைக் கிழித்தெறியவும், பல்லினப் பாங்கான ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கான அரசின் நிலைப்பாட்டை இனங்காணவும்வழிவகுக்கும்.

இச் சமூகப் பொறுப்பை கூட்டு முயற்சியாக ஏற்றுக்கொள்ளும் துணிவும், கடமைப் பாடும் தமிழ்ப்புத்திஜீவிகளுக்கு இருக்கின்றதா என்பதுதான் இன்றைய கேள்வி.

# அலைவேகத்தின் பின்... வாகரை



சுப்பர் சோனிக் அழித்த பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்

''ஒப்பரேஷன் 'அலைவேகம்' இராணுவ நடவடிக்கையின் மூலம் பல புலிகளைக்கொன்றோம். அவர்களது ஆயுதங்களைக் கைப்பற்றினோம்''

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வாகரைப் பிரதேசத்தை நோக்கி ஜுலை 10ம்திகதி அரச படையினர் மேற்கொண்ட தாக்குதலை அரசு இவ்வாறு தான் கொல்லப்பட்ட புலிகளது எண்ணிக்கையையும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து வெளியிட்டு வந்தது. ஸ்ரீலங்கா அரச படையினர் மேற்கொள்கிற சகல இராணுவ நடவடிக்கையின் போதும் கண்மூடித்தனமாக மேற்கொள்கின்ற தாக்குதலினால் புலிகளை விட அப்பாவிப் பொதுமக்களே அதிகளவில் பலியாகின்றனர் என்பது பகிரங்க விடயம். ''அலை வேகம்'' இராணுவ நடவடிக்கை கூட பேரினவாத அரசின் இன அழிப்பு முயற்சியின் தொடர்ச்சியாகவே நடந்து முடிந்தது என்பது உண்மை நிலவரங்களை நேரில் சென்று அறிந்து போது தெரியவந்தது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களில் பொதுவான நிலையைக் கண்டறிய 'சரிநிகர்' மற்றும் 'லக்பிம' ஆகிய பத்திரிகைகள் சென்ற போதே 'அலைவேகம்' தாக்குதலின் பாதிப்புக்களை நேரில் கண்டறிய முடிந்தது.

வாழைச்சேனை நகரிலிருந்து வடக்கே 20 மைல் தொலைவில் கரையோர நிலப்பகுதியாக இருக்கும் வாகரை காடும், வயலும், வாவியும் சார்ந்த நிலப்பரப்பு. கடற்தொழிலும் விவசாயத்துறையுமே வருமானத்தை பெற்றுத் தந்து கொண்டிருந்த தொழில்களாகும். ஆனால், போர் நிலை காரணமாக 90க்குப்பின் விவசாயம், கடற்தொழில் இரண்டுமே கடுமையாக பாதிப்டைந்துள்ளன. மேற்படி உற்பத்தி முறைகள் வாகரைக்கான தன்நிறைவுக்குப் போதுமானதாக இல்லை. ஆனால், போருக்கு முற்பட்ட காலங்களில் வாகரைக்கு வெளியில் சந்தைப்படுத்தக்கூடிய அளவுக்கு அதன் உற்பத்தி வளர்ச்சியடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை**

'அலை வேகம்' இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டோரின் மனைவிமார், தாய்மார்களை 'சரிநிகர்' சந்திக்க முடிந்தது. எட்டுப் பேர் தங்களது கணவன்மாரை இழந்துள்ளனர். மூவர் இளவயதுடைய புதல்வர்களை இழந்துள்ளனர். இவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருந்த போதும், தேன் எடுக்கச் சென்றிருந்தபோதும், வயலுக்குச் சென்றிருந்தபோதும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஊரியங்காட்டைச் சேர்ந்த எஸ். தங்கேஸ்வரி (வயது32), தனது கணவரும், மகனும் (சதீஸ்குமார்- வயது17) காட்டில் தேன் எடுக்கப்போன இடத்தில் இராணுவம் சுட்டுக்கொண்டே வந்தபோது மகன் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டதாகவும் கணவர் மகனைக்கூட தூக்கி வர முடியாமல் தப்பிவர நேரிட்டதாகவும் மூன்று நாட்களின் பின்னரே மகனின் சடலம் மீட்கப்பட்டதாகவும் சொன்னார். இவருக்கு மொத்தம் 6 பிள்ளைகள். இறந்த மகன் மட்டுமே வீட்டில் மூத்த ஆண். ஏனைய அனைவரும் பெண்கள்.

அதே போல் எஸ். பார்வதி (வயது 48) என்பவர் தனது கணவர் செல்வம் (வயது 48) வயலுக்குப்போய்க் கொண்டிருந்த போது இராணுவம் சுட்டு படுகாயம் அடைந்ததாகவும் அங்கிருந்து 20 மைல் தொலைவிலுள்ள வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக முயற்சித்த போதும் அப்பகுதியிலிருந்து வெளியில் போக இராணுவம் விடவில்லையெனவும் இறுதியில் தனது கணவரின் கால் மோசமான நிலைக்குள்ளாகி காலை வெட்டி விட நேரிட்டதாகவும் தெரிவித்தார்.

அவ்விராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய அரசுதரப்பு செய்திகள் அனைத்துமே அவர்களைப்புலியென்றே பிரச்சாரப்படுத்தியது. அச்செய்தியை மட்டுமே பிரசுரிக்க வேண்டும் என செய்தித் திணிப்பையும் செய்தது. ஆனாலும் மட்டக்களப்பில் ஓகஸ்ட் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டுமாமாங்கம் பிள்ளையார் கோவில் கிரனைட் வீச்சு, மற்றும் அதே திகதியில் மட்டு சந்தையில் கண்டெடுக்கப்பட்ட வெடிமருந்து என்பவை குறித்தும் அவை படையினரது திட்டமிட்ட வேலையே எனவும் பொதுமக்கள் அபிப்பிராயப்படுமளவுக்கு நிலைமை உள்ளது. இவ் அபிப்பிராயத்தை மட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் எம்மிடம் தெரிவித்திருந்தார்.

வாகரையில் இவ்இராணுவ நடவடிக்கைக்கு முன்னமே மோசமாக இருந்த கல்வி நிலைமை தற்போது மேலும் மோசமாகியுள்ளது.

**மாணவர்களுக்கு கல்வி இல்லை!**

வாகரை கோரளைப்பற்றுப் பிரதேசத்தில் 15 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் தற்போது 4348 மாணவர்கள் பயில்கின்றார்கள். யுத்த நிலைமை காரணமாகவும் அங்கு காணப்படும் மோசமான வறுமை நிலைமை காரணமாகவும் பாடசாலைக்கு மாணவர்கள் குறைவாகவே செல்கின்றனர். 171 ஆசிரியர்கள் இப்பாடசாலைக்கு நிரந்த ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருந்தும் தற்போது 74 ஆசிரியர்களே சேவையிலுள்ளனர். பற்றாக்குறையான ஆசிரியர்களை ஈடுசெய்வதற்காக தொண்டர் ஆசிரியர்களாக கடந்த 1989இலிருந்து பணியாற்றும் எவரையும் நிரந்தர ஆசிரியர்களாக்கக் கூட இல்லை. தொண்டர் ஆசிரியர் பலர் நாடு முழுவதும் நிரந்தரமாக்கப்பட்ட போதும் வாகரையில் அப்படியான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆசிரியர்கள் கூட வாழைச்சேனை, மட்டக்களப்பு போன்ற இடங்களிலிருந்து வரவேண்டியிருந்தாலும் அவர்களுக்கான போக்குவரத்து வசதியெதுவும் நாவலடிக்கு அப்பால் இல்லை. எனவே பாடசாலைகளையும் சரியான நேரத்துக்கு தொடக்க முடியாத நிலை நிலவுகிறது.

பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை அப்பியாசக்கொப்பி, பென்சில்கள், பேனை போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குக் கூட பலத்த தட்டுப்பாடு. வாகரைக்கான பொருளாதாரத்தடையானது பெருமளவில் அங்கு நிலைமையினை மோசமாக்கியுள்ளது. எந்தவித போக்குவரத்து வசதியுமில்லை. இதுவும் பாடசாலையை விட்டுவிட்டு மாணவர்கள் புலிகளில் சேருவதற்கான காரணங்களிலொன்று.

வாகரையில் பல பாடசாலைகள் ஷெல் தாக்குதலுக்கும் மோட்டார் தாக்குதலுக்கும் இலக்காகி கட்டிடங்கள் கைவிடப்பட்டு அருகில் ஓலைக் கொட்டில்களை அமைத்தே இயக்கப்பட்டு வருகின்றன.

பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயத்தைச்சேர்ந்த ஆசிரியை நடராஜா குமுதினி இது பற்றி தெரிவிக்கையில்...

''பொம்பர்கள் போட்டு பல பாடசாலைகள் சேதமுற்றிருக்கின்றன. கண்டபடி பொம்பர்கள் குண்டு வீசுவதால் பொதுமக்களும் பொதுக் கட்டிடங்களுமே அதிகளவு பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கடந்த மே மாதம் முதல் வாரத்தில் பொம்பரினால் வீசப்பட்ட குண்டு பாடசாலையில் வந்து விழுந்ததனால் 3ம் வகுப்பு கற்றுவந்த ஜீவிதா எனும் 12 வயது மாணவி படுகாயமுற்று பாடசாலைக்கு வரமுடியாத நிலையில் உள்ளாள்'' என்றார்.

ஊரியங்காட்டு அரசாங்க கலவன் பாடசாலையைச்சேர்ந்த ஆசிரியை எஸ் சந்திராணி இது பற்றி தெரிவிக்கையில், கடந்த ஏப்ரல் 23ம் திகதி இப்படித்தான் படையினர் போட்ட குண்டு வந்து விழுந்து அரியரத்னம் சுஜீவா எனும் 14 வயது மாணவி படுகாயமுற்றார். இம்மாணவியும் தற்போது பாடசாலை வரமுடியாத நிலையில் உள்ளார். அரசாங்கம் பாடசாலைகளை நடாத்தத்தான் உதவிகளை செய்கிறதில்லையென்றால் நாங்கள் நடத்துவதையாவது குழப்பாமல் இருந்தாலே போதுமானது'' என்றார். இவ் இரு ஆசிரியர்களும் ஏழு வருடகாலமாக தொண்டர் ஆசிரியர்களாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.



வாகரையிலிருந்த ஒரே ஒரு பிரதான ஆஸ்பத்திரியும் சுப்பர் சோனிக்குக்கு இரை

*“ஸ்ரீலங்கா அரச படையினர் மேற்கொள்கிற சகல இராணுவ நடவடிக்கையின் போதும் கண்மூடித்தனமாக மேற்கொள்கின்ற தாக்குதலினால் புலிகளை விட அப்பாவிப் பொதுமக்களே அதிகளவில் பலியாகின்றனர் என்பது பகிரங்க விடயம். “அலை வேகம்” இராணுவ நடவடிக்கை கூட பேரினவாத அரசின் இன அழிப்பு முயற்சியின் தொடர்ச்சியாகவே நடந்து முடிந்தது என்பது உண்மை நிலவரங்களை நேரில் சென்று அறிந்து போது தெரியவந்தது.”*

**இருந்த ஆஸ்பத்திரியும் தரைமட்டம்!**

வாகரையிலிருந்த பிரதான ஆஸ்பத்திரியும் குண்டு போடப்பட்டு முற்று முழுதாக அழிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. இன்று வாகரைப்பகுதியில் ஒருவருக்கு திடீர் விபத்தோ, வேறும் நோய்களோ ஏற்பட்டால் வாழைச்சேனைக்கே கொண்டு செல்ல வேண்டும். ஆனால் 20 மைல் தொலைவிலுள்ள அவ் ஆஸ்பத்திரிக்கு போக்குவரத்து எதுவும் இல்லாத நிலையில் சைக்கிளிலே எடுத்துச் செல்லும் போது இடை நடுவிலேயே இறந்து போன எத்தனையோ சம்பவங்கள் உண்டு. இவ் அனைத்து அவலங்களையும் 'அலைவேக' இராணுவ நடவடிக்கை மேலும் மோசமாக்கியுள்ளது. என்வே தான் வாகரை மக்களே சொல்லுவது போல் ஸ்ரீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் திட்டமிட்ட இன அழிப்பே என்பதை ஏற்க வைக்கின்றன. இன அழிப்பே இல்லை, இது 'தமிழ் மக்களை புலிகளிடம் இருந்து மீட்கும் நடவடிக்கை' என அரசாங்கம் சொல்வதை இனியும் ஏற்கத்தான் முடியுமோ?



'அலை வேகம்': குங்குமத்துக்குப் பதில் சந்தனம்

**–என்.எஸ்.குமரன்**

எல்லாத் தொடர்புகட்கும் : இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615.
வெளியீட்டாசிரியர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப்பதிவு : நவகம அச்சகம், இல. 334, காலி வீதி, இரத்மலான.